...ved by the Director of P... Instruction

MARAKATHAVALLI

A HIGH CLASS TAMIL NOVEL

BY

Mr. P. C. GOVINDASAMI RAJAH

(Author of Pancharatnam &c.)

PUBLISHED B...

THE "VIVEKA BODHINI" OFFICE,

Brodies' Road, Mylapore, MADRAS, S.

SOME SELECT OPINIONS

n previous Editions of MARAKATHAVALLI

Chelvakesavaroya Mudaliar Esq., M. A., Prof. of Tamil, Pachayappas ge:—* * The novel is almost true to life. Portions of the novel ed me to tears. Your work, as it stands, now, seems to me one of the very successful Tamil novels I have perused.

* * * * *

M. Singaravelu Mudaliar Esq., Assistant Inspector of Schools.—"I must assure you that I consider the book just the sort of one excellently suited for the home reading of not only our boys and girls but also our men and women. *It is written in easy simple chaste and beautiful Tamil* and you carry home to the reader the excellent morals inculcated in it by practical examples that appear like real incidents in life. Some portions are so pathetic that they drew forth tears from my eyes, so natural your descriptions and so vivid the pictures you have drawn therein. *Your 'Marakathavalli,' 'I dare say destined to take a high place among the latter day publications and t an ornament to our chaste popular literatur. It should be found in ev household and read and reread by every member of the family, ma woman, young or old."*

* * * * *

T. Balasundara Mudaliar Esq., Chief Examiner in Tamil for the M University for several years :—* * It is hardly an exaggeration that the book, which is *written in chaste and popular language* free f archaic forms of expressions and solecisms, deserves a place in the h every educated Hindu lady in particular and must be an acquisition to library of every domestic circle.

* * * * *

S. A. Tirumalaikolundu Pillai Esq., B. A., author of ' Age of Manikk vachakar,"— * * * "*The novel you sent me is in fact the bes novel in Tamil that I have ever seen.* The character of Daivasikamani very happily conceived. He has already become my friend as he shines ou as a real personage in my mental vision. If but only young men will at leas endeavour to follow his example how well will the world shine? The characte of Marakathavalli induces all persons to think that young women if the could only be trained, not by precept but by example, would become livi ideals of what women ought to be, for imitation. It is indeed with gre exultation that I read the portion of the novel wherein her husband, who g a little dejected at the evil play of misfortune, is encouraged not to lose hea at the seeming misfortune, by his once incorrigible wife. A lady who was prepared to part with two coins from her necklace during the adversity of own beloved father and mother, comes forward most voluntarily and hea and gives her precious ear ornaments to raise money for buying medici illness of her father-in-law. What a brilliant change in her cha r character was slowly but steadily improving with occasional retra hen she saw at Chidambaram the letter from her father addressed king him for the great help rendered by him, her char bly fixed in true greatness. Her husband then a her husband the condescension of Her one end in

மரகதவல்லி

MARAKKATAVALLI

இஃது

பஞ்சரத்தினம் என்னும் நூலின் ஆசிரியர்

மிஸ்டர் - ப. சி. கோவிந்தசாமி ராஜா

செய்தது

GOVINDASVAMI RAJA,

நான்காம் பதிப்பு

Vivekabodhini office

விவேக போதினி ஆபீஸ்

மயிலாப்பூர் சென்னை Mad-

TITLE PAGES & LAST FORME,
PRINTED AT THE GUARDIAN PRESS, MADRAS.
& Remaining Pages at the Star of India Press.

பாயிரம்.

தாய் வீட்டிலிருக்குஞான்று வீட் ... லையை அலட்சியஞ்செ
ரமாகிக் க..வர் வீடு ..போனபிறகு கு.. ..பாரத்தைத் தாங்கவறியாது
.. ரூர்களென்பதும் நாம் ..றிந்த விஷயமே. சிலர், இளமையிற் பழகிய
னிகோத்தல், தையல் தைத்தல் ஆகிய இவற்றைக் கையாடத் தொடங்கி
ற்களுல் இலாபம் ஒன்றுமில்லை யெனினும் தங்களுடைய காலத்தையும்
..ருளையும் போக்கியும், சிலர், தமது நிலைமையை ..யுணராது உயர்ந்த
..டயும், சிறந்த ஆபரணமும் பூண்ட தந்தோழிகளைப் போலா.. ஆசை
..ண்டு தங்களுடைய ஏழைக் கணவருக்குத் துன்பத்தைத் தந்.. வருகி
கள். வேறு சிலர், பாடசாலையோடு படிப்பைவிட்டும், மற்றுஞ்சிலர், கேட்
..டாத சிற்றின்ப ..ல்களை வாசி.. ..் வருகின்றனர். துர்விஷயங்களைப்
.. ..கிழும் படியா.. ..ாதர்க்.. ..டித்து மகிழும் இவர்க்கும் உள்ள பேத
ன்ன? * அநேகா, சாயநூல்..ால் அழகான கழுத்துப்பட்டை - காற்
..ம், வர்ணமணி..ளால் சிங்காரமான தட்டுகள் - நாற்காலிகள்
..ங்களுக்கு ..ேண்டிய மெத்தை - சொக்காய் முதலானவற்றிற்
..ரரைத்தே.. ..் பார்க்கி..ரூம். † இவ்விதக் காரணங்களால்
..ர்கள், இ..து மாதர் கண்களுக்குப் பிரியத்தைத் தருகிறுர்
..காரியத்தில் ஒன்றுங் காணுமென்றும், அவர்களுடைய நடை
..மையில் உயர்வதில்லை யென்றும் சொல்லுகிறுர்கள். ‡ நம்மவர்
..ும் கல்வியை நாகரிகமாயும், அழகாயும் கொள்ளுகிறுர்களே தவிர
..யனில்லை யென்பது அவர்களுடைய ஆழ்ந்த கருத்து.

..பெண்களுக்குப் பாட புத்தகங்களாக நியமித்துள்ள நூல்களனைத்தும்
..ின் அவர்களுக்குபயோகமாகும் வண்ணம் இருத்தல்வேண்டும். || பாடசாலை
களில் சரீரசுகத்திற்கும், குடும்பப் பாதுகாப்பிற்கு முரிய முறைகளைக் கற்க
வேண்டு... மூலிகைகளின் உபயோகமும், மருந்து செய்யும் பக்குவமும்
..தெரிந்துகொள்வதுடன் சாதாரண பிணிகளைத் தீர்க்கவும் அற்ப காயங்களை
..ற்றவும் பழகவேண்டும். பல நற்கதைகளையும், ப..யாலைகளையும் படிக்க
..வண்டும். § எவ்வளவுதான் உயர்ந்த நூ..லாயினும் இயற்கை விநோதங்களை
..த்திரமே வர்ணிப்பதானுற் பயனில்லை. கதையாகட்டும், காவியமாகட்டும்,
..ற்றைச் சரித்திரமாகட்டும், மனிதர்க்கு ..ன்மை பயப்பதற்காம் நல் விஷ
யங்களைத் தீட்டியிருக்கவேண்டும். சீதை, ..மயந்தி முதலான மாது சிரே
மணிகளுடைய திவ்விய சரிதங்களை ..யறிவதுடன் அவர்கள் ..
..ற்காரியங்களை இடையருது சிந்..க்கவேண்டும். இந்து மா..
..மும், அச்சமு.., அன்பும், பத்தியும் ஒரு பொழுது
... வீட்டை.. விட்டு வெளியிற் போய், கூத்து ..
..ப்பதை விலக்கவேண்டும். அங்கே நாம் கா..
..களையும், கண்ணுற் காணத்தகாத அபிநயங்..

...llick. || Aunie Besant & Justice ...
...th. ..head. § John Ruskin.
R.., ..andit Sivanath ...

... யி ர ம்.

" எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. "

திருவள்ளுவ நாயனார்

இ... க்களிற் பலர் நமது தேசாசார மதாசாரங்களை யிகழ்ந்து ...
டின் நடையுடைபழக்கங்களை அநுசரிக்கவும், இந்துக்களுக் கிருக்கவேண்...
அடக்கம், அன்பு முதலிய நற்குண... ள் போய், இடம்பம் சுயநலமா...
துர்க்குணங்களைக் கைக்கொள்ள ... கின்றோம். நமது இளஞரு...
டைய கல்வியானது வெள்ளைக்காரருக் ... ண்டிய ... கில் அமை...
பதும், நம் மத வுண்மைகளும், நீதிநெறிகளும் போதிக்கப்படா...
இதற்குக் காரணங்களாகுமென நம்பி இக்கா... டன் நன்மைய...
காசி நகரில் * ஒரு கல்விச்சாலையை யேற்படுத்தி யிருக்கிறார்...
கலையிலுஞ் சிறுவர்க்கு நீதிநூல்களையும் ... நூல்க... க...
அவர்களுடைய ஆசாரங்களையும் முக்கியமா... கவனித்து ...
இதைப்பார்த்துப் புதியதாய்ச் சில வித்தியாசாலைகளுண்டாவ...
டொரு பழைய பாடசாலைகளிலும் இவ்விதிகளை அனுட்டித்து ...
அறிகிறோம். மதமும் ஒழுக்கமுமில்லாத வெறுங்கல்வியால் இத்தீ...
தமதன்று அநேகர் ஒப்புக்கொள்வதால் கல்வியில் மேற்கண்ட ...
உண்டானது நல்ல விஷயமே.

ஆனால் இந்து மாதருடைய கல்வியைப்பற்றி இன்றுகாறும் எவரும்
கவனம் வைத்திலர். பெண்மக்கள் கல்வியின்றிக் கெட்டார்க ளென்றும்,
அதனால் நாடு சிறக்கவில்லையென்றும் அவரவர்கள் முறையிடுகிறார்களே
யொழிய நம் பெண்களுடைய குறையை உள்ளவாறறிந்து அதற்குத் தக்க ப்ரி...
...ரஞ் செய்யக் காண்கிலேம். பெண்பாடசாலைகளிலும் அறிவு விர்த்தியே ...
...லையாகக் கொள்வதனால் பெண்களுடைய நிலைமை பரிதாபத்தைத்த...
...ன்றது.

† ஒழுக்கமற்ற அறிவு தீநுதைத் தருமாதலால் தற்காலப் பெண்கல்வி
... விளைவிக்கக் காரணமாகின்றது. பெண்கல்வி பெருகிய சுதேசக்
...களுள் படித்த பெண்கள் இல்வாழ்க்கைக்கு உதவியற்றவராகிறார்க...
...இவர்களை மணஞ்செய்வதினும் வாளாவிருத்தலே நன்றென்...
...துடன் ‡ வங்காள தேசத்துப் பெண்கள், கண்ணுக்கு வி...
...யல் தைப்பதிலும், தலையை மயக்கிக் கதைகளை யேற்று...
...லும் காலத்தைக்கழித்துக் குடித்தன வேலையைக் ...
... தெரியவருகிறது. இவ்வாறே நமது தெ...

... Hindu College. † C. B. Gilbert, Swami ...
...ram Mullick & Pandit Sivar... Sa...

பா[illegible]ம்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

திருவள்ளுவ நாயனார்.

இந்துக்களிற் பலர் நமது தேசாசார மதாசாரங்களை யிகழ்ந்து மேனாட்டின் நடையுடைபாவனைகளை அநுசரிக்கவும், இந்துக்களுக் கிருக்கவேண்டிய அடக்கம், அன்பு முதலிய நற்குணங்கள் போய், இடம்பம் சுயநலமாதிய துர்க்குணங்களைக் கைக்கொள்ளவும் காண்கின்றோம். நமது இளைஞர்களுடைய கல்வியானது வெள்ளைக்காரருக்கு வேண்டிய விதத்தில் அமைந்திருப்பதும், நம் மத வுண்மைகளும், நீதிநெறிகளும் போதிக்கப்படாம லிருப்பதும் இதற்குக் காரணங்களாகுமென நம்பி இந்நாட்டின் நன்மையை நாடிய சிலர் காசி நகரில் * ஒரு கல்விச்சாலையை யேற்படுத்தி யிருக்கிறார்கள். அங்குக் கலைபயிலுஞ் சிறுவர்க்கு நீதிநூல்களையும் ஞானநூல்களையும் கற்பிப்பதுமன்றி அவர்களுடைய ஆசாரங்களையும் முக்கியமாய்க் கவனித்து வருகின்றனர். இதைப்பார்த்துப் புதியதாய்ச் சில வித்தியாசாலைகளுண்டாவதோடு இரண்டொரு பழைய பாடசாலைகளிலும் இவ்விதிகளை அனுட்டித்து வருகிறதாக அறிகிறோம். மதமும் ஒழுக்கமுமில்லாத வெறுங்கல்வியால் இத்தீங்கு விளைந்[illegible]ன்று அநேகர் ஒப்புக்கொள்வதால் கல்வியில் மேற்கண்ட திருத்தம் [illegible]டானது நல்ல விஷயமே.

ஆனால் இந்து மாதருடைய கல்வியைப்பற்றி இன்றுகாறும் எவரும் [illegible]னம் வைத்திலர். பெண்மக்கள் கல்வியின்றிக் கெட்டார்க ளென்றும், அதனால் நாடு சிறக்கவில்லையென்றும் அவரவர்கள் முறையிடுகிறார்களே யொழிய[illegible]ம் பெண்களுடைய குறையை உள்ளவாறறிந்து அதற்குத் தக்க பரிகாரஞ் செய்யக் காண்கிலேம். பெண்பாடசாலைகளிலும் அறிவு விர்த்தியே தலையாகக் கொள்வதனால் பெண்களுடைய நிலைமை பரிதாபத்தைத்தருகின்றது.

† ஒழுக்கமற்ற அறிவு தீங்கைத் தருமாதலால் தற்காலப் பெண்கல்வி கேட்டை விளைவிக்கக் காரணமாகின்றது. பெண்கல்வி பெருகிய சுதேசக் [illegible]றிஸ்தவருக்குள் படித்த பெண்கள் இல்வாழ்க்கைக்கு உதவியற்றவராகிறார்களென்றும், இவர்களை மணஞ்செய்வதினும் வாளா விருத்தலே நன்றென்றும் [illegible]றக்கேட்பதுடன் ‡ வங்காள தேசத்துப் பெண்கள், கண்ணுக்கு விநோதமான கைத்தையல் தைப்பதிலும், தலையை மயக்கிக் காதலை யேற்றும் கதை[illegible] வாசிப்பதிலும் காலத்தைக்கழித்துக் குடித்தன வேலையைக் கவனிப்ப[illegible]லை யென்றும் தெரியவருகிறது. இவ்வாறே நமது தென்னிந்தியாவி

---

* The Central Hindu College. † C. B. Gilbert, Swami Vivekananda & Emerson.
‡ Bulloram [illegible]ullick & Pandit Sivanath Sastri, M. A.

லநேகர் தாய் வீட்டிலிருக்கு[torn] வீட்டுவேலையை அலட்சியஞ்செய் கலியாணமாகிக் கணவர் வீடு போ[torn]கு குடும்பபாரத்தைத் தாங்கவறியா தவிக்கிறார்களென்பதும் நாம் அறி[torn] விஷயமே. சிலர், இளமையிற் பழகிய மணிகோத்தல், தையல் தைத்தல் ஆகிய இவற்றைக் கையாடத் தொடங் இதனால் இலாபம் ஒன்றுமில்லை யெனினும் தங்களுடைய காலத்தையும் பொருளையும் போக்கியும், சிலர், தமது நிலைமையை யுணராது உயர்ந்த ஆடையும், சிறந்த ஆபரணமும் பூண்ட தந்தோழிகளைப் போலாக ஆசை கொண்டு தங்களுடைய ஏழைக் கணவருக்குத் துன்பத்தைத் தந்தும் வருகிறார்கள். வேறு சிலர், பாடசாலையோடு படிப்பைவிட்டும், மற்றுஞ்சிலர், கேட்கவு மடாத சிற்றின்ப நூல்களை வாசித்தும் வருகின்றனர். துர்விஷயங்களைப் பேசி மகிழும் படியாத மாதர்க்கும், படித்து மகிழும் இவர்க்கும் உள்ள பேதமென்ன? * அநேகர், சாயநூல்களால் அழகான கழுத்துப்பட்டை - காற்சோடு பின்னினும், வர்ணமணிகளால் சிங்காரமான தட்டுகள் - நாற்காலிகள் செய்யினும், தங்களுக்கு வேண்டிய மெத்தை - சொக்காய் முதலானவற்றிற்குத் தையற்காரரைத்தேடப் பார்க்கின்றோம். † இவ்விதக் காரணங்களால் சில வெள்ளைக்காரர்கள், இந்து மாதர் கண்களுக்குப் பிரியத்தைத் தருகிறார்களே யன்றிக் காரியத்தில் ஒன்றுங் காணோமென்றும், அவர்களுடைய நடையானது உண்மையில் உயர்வதில்லை யென்றும் சொல்லுகிறார்கள். ‡ நம்மவ களிற் பலரும் கல்வியை நாகரிகமாயும், அழகாயும் கொள்ளுகிறார்களே தவி அதனாற் பயனில்லை யென்பது அவர்களுடைய ஆழ்ந்த கருத்து.

பெண்களுக்குப் பாட புத்தகங்களாக நியமித்துள்ள நூல்களை பின் அவர்களுக்குபயோகமாகும் வண்ணம் இருத்தல்வேண்டும். || பாடசா களில் சரீரசுகத்திற்கும், குடும்பப் பாதுகாப்பிற்கு முரிய முறைகளைக் க வேண்டும். மூலிகைகளின் உபயோகமும், மருந்து செய்யும் பக்குவ தெரிந்துகொள்வதுடன் சாதாரண பிணிகளைத் தீர்க்கவும் அற்ப காயங்களை ஆற்றவும் பழகவேண்டும். பல நற்கதைகளையும், பாமாலைகளையும் படிக்க வேண்டும். § எவ்வளவுதான் உயர்ந்த நூலாயினும் இயற்கை விநோதங்களை மாத்திரமே வர்ணிப்பதானாற் பயனில்லை. கதையாகட்டும், காவியமாகட்டும், மற்றைச் சரித்திரமாகட்டும், மனிதர்க்கு நன்மை பயப்பதற்காம் நல் விஷயங்களைத் தீட்டியிருக்கவேண்டும். சீதை, தமயந்தி முதலான மாது சிரோமணிகளுடைய திவ்விய சரிதங்களை யறிவதுடன் அவர்கள் இயற்றிய நற்காரியங்களை இடையறாது சிந்திக்கவேண்டும். இந்து மாதர்க் குரி நாணமும், அச்சமும், அன்பும், பத்தியும் ஒரு பொழுதும் தவிர்க் லாகாது. வீட்டை விட்டு வெளியிற் போய், கூத்து முதலிய வேடிக்கைகள் பார்ப்பதை விலக்கவேண்டும். அங்கே நாம் காதாற் கேட்கத்தகாத துர்ப்பாஷைகளையும், கண்ணாற் காணத்தகாத அபிநயங்களையும் கையா

* Bulloram Mullick.
† Rev. T. K. Weatherhead.
‡ Raja Sir T. Madhava Rau, Pandit Sivanath Sastri, Bulloram Mullick.
|| Annie Besant & Justice Muthusawmi Aiy
§ John Ruskin.

தால் ... மது பெண்கள் பார்ப்பா... வ்வழக்க... படியக்கூடும். செல்வத்தில் தம்மினும் உயர் ... கண்டு பொருமை படுவதையும், தாழ்ந்தோர்களைக் கண்டு ப... தையும் அகற்றவேண்டும். பிச்சைக்காரர்களைத் திட்டுவதும், ஏழைப் ... களை வருத்துவதுங் கூடாது. கோட் சொல்லுவதை முற்றும் நீக்கவேண்டும். நற்குணமானது கல்வியினும் உசித மென்றுணர்ந்து கற்பு, அடக்கம், சத்தியம், சுசி முதலியவற்றிற் பழகவேண்டும். இவ்வித நற்குணமே எல்லா வற்றிற்கும் சிறந்ததெனக் கண்டால், இவ்வுலகில் நாடோறும் பெருகிவரும் குற்றங்களும், அவற்றைக் களையத் துரைத்தனத்தார் செய்யுஞ் சூழ்ச்சிகளும், செலவிடும் பணங்களும் மீதியாகுமே. * தீங்குகளுக்கு மூலம் இன்னதென் றாராய்ந்து அதனைப் பற்றுமல் வருடந்தோறும் ஆயிரக் கணக்காய் நியாயாதிபதிகளையும், காவற்கூடங்களையும் அதிகப்படுத்துவதனால் ஆம் பயனென்ன ?

மேலே கூறியவாறு பெண்களைப் பாடசாலையில் பயிற்றுவதுடன் வீட்டிலுங் கவனிக்கவேண்டும். பெற்றோர் முதலியோர் பெண்கள் வீட்டிலுள்ள காலையில் துஷ்டசவகாசம் செய்யாவாறும், துர்ப்பாஷை யாடாவாறும் சிரமப் படவேண்டும். சில குடும்பங்களில் சிறுவர்க்குக் கெட்ட வார்த்தைகளைக் கற்றுத் தருகின்றனர். மக்கள் தங்களைத் திட்டுங்கால் மனமகிழும் தாய் தந்தையரும் உளர். இதென்ன விந்தை ! சிறுவயதில் பெண்மக்கள் இங்ஙனம் கற்பிக்கப்பட்டால் பருவமுதிர்ந்து சொல்வன்மை யுண்டானபோது எவ்வித ...வார்க ளென்பதை இயம்ப வேண்டுமோ? வாசித்த பெண்களி லநேகர் ...யதாகி மாமிவீடு சென்றபின்னும் சிறு கால வழக்கத்தால் தங்களைத் தவறித் துர்ப்பாஷைபேச நாம் காணவில்லையோ ? சமயம் நேர்ந்தபோதெல்லாம் நீதி மார்க்கங்களின் காரணங்களை அவர்களுக்குப் போதித்து நமது பூர்வ வழக்கங்களின் சிரேஷ்டத்தைக் காட்டவேண்டும். எப்பொழுதும் இனிய நூல்களை வாசித்து வரவும், எளிய இல்வாழ்வைக் கைக்கொள்ளவும் ஆசை மூட்டவேண்டும்.

சாதாரணமாகச் சிறுவர்கள் பார்த்ததைப்போலச் செய்பவராதலாலும், கசியத்தக்கமனமுடையவராதலாலும் பெற்றோரும் மற்றோரும் தங்களுடைய நடையுடை பாவனைகளிற் கருத்தாயிருக்கவேண்டும். உபாத்தியாயர்களும் நல்லொழுக்கத்திற் சிறந்திருத்தலே உசிதம். வீட்டில் பெற்றோருடைய நடையும், பாடசாலையில் உபாத்தியாயருடைய நடையும் வேறாகுமாயின் சிறுவர்கள் அவ்வாறே செய்ய விழைந்து பெரியவர்களாயும் அந்நடையையே அநுசரிப்பார்கள். இதனாலன்றோ " தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்கின்றனர் ?

நம் பெண்பாடசாலைகளில் இத்தகைய விஷயங்கள் கற்பிக்கப்படுவதில்லை. பெண்களுடைய கல்வியானது ஆண்பிள்ளைகள் கல்வியை யொத்திருப்பதால், நமது பெண்களின் தலையைப் பளுவாக்குகிறதே யொழிய உண்மையறி...

* John Ruskin.

...து, மன... ...சய்து, இருதயத்தை விச... ...தக் க... ...லம். * நமது ... இந்துதேச சரித்திரத்தைச் செம்மையா யறி... யாதிருக்க, இதர தேசங்க... ...சய்தியைத்தெரிந்து கொள்வதனல் இலாப மென்ன? ஆரியர்கள் சரித... முழுதும் ஓதாமல், வாட்டர்லூ சண்டையில் வெற்றியடைந்தவர் இங்கிலீஷ்காரரா அல்லது பிரான்சுக்காரரா என்று அறிவதனலாகும் நன்மையாது? தாங்கள் வசிக்கும் சென்னை ராஜதானியைப்பற்றிச் செவ்வனே கற்காமல், ஐயாயிரமயிலுக் கப்பாலுள்ள சீமைகளைப்பற்றி என் தெரிந்துகொள்ளவேண்டும்? வீட்டுக் கணக்குகள் தெரியாமல் பல பின்னபேதங்களைப்பழகுவதனுலென்ன பிரயோசனம்? சொந்த உடைகளைத் தைக்க அறியாமல் விநோதமான பூவேலைகள் செய்வதனல் நலம் என்ன? குடித்தன முறைகளை யுணராமல் பல சாஸ்திரங்களைப் படிப்பதனுற்பயன் யாது?

* கல்வியென்பது கட்டுப்புத்தகங்களைக் கடகடவென்று படிப்பதோ? அல்ல, அல்ல. அடக்கம், சிட்சை, உயர்நிலை நோக்கம், தருமம், நியாயமாகிய இவைகளே கல்வியின் இலக்கணங்களாகின்றன. பல நூல்களை வாசித்த மாத்திரத்தில் வாசித்தவனுகானென்றும், வாசியாவிடினும் ஒழுங்குற நடப்பவனே வாசித்தவனென்றும் நமது மனுவுஞ் சொல்லுகிருர். இதனுலன்றோ ‡ கீட்டே யென்பவர், "அய்யோ! தர்க்கம் - வைத்தியம் - தருமம் - வேதாந்தமாகிய இவைகளையெல்லாம் நான் தளரா முயற்சியோடு பயின்றேன் பயின்றும் என்ன? இதோ முன்போல மூடனகவே இருக்கின்றேன்" என்றனர்?

கல்வியில் மேற்காட்டிய திருத்தங்களுண்டாயின் அவ்விதக் கல்விகற்கும் நமது சிறுமிகள், மற்றத்தேசத்துத் தெரிவையர் அணியுஞ் சிரோமணிகளாவார்கள் என்பதற்கையமில்லை. நமது நாட்டின் சரித்திரத்தை நன்குணர்ந்தோர்க்கு இஃதோர் ஆச்சரியமன்று. அநேக வருடங்களாயினும் இறைவரையும் எங்கணும் பரவி வாழ்த்துவதும், அன்பும் - அடக்கமும், அச்சமும்-நாணமும், அறமும் - பத்தியுமாகிய அநேக சுகுணங்களிருப்பதாய் வெள்ளைக்காரர்களும் ஒப்புக்கொள்வதும் நந்தேசத்து மாதரை யன்றோ?

§ வீட்டின் ஓர் அறையிலிருந்து மற்றோரறை புகுவதே தேசசஞ்சாரமாகக் கொள்ளும் நமது பெண்கள் பரீட்சைகள் தந்து பண்டிதைகளாகி வெளியிலுலாவவும், சிறந்த பிரசங்கங்கள் செய்யவும், பெரிய உத்தியோகங்கள் வகிக்கவும், அநேக விஷயங்களை தர்க்கிக்கவும் வேண்டுமென்பது நமது எண்ணமன்று. இவர்கள் தம் கடமைகளிவையென வறிந்து, துர்க்குணங்களையகற்றி, நற்குணங்களை யேற்றுப் புருஷரை அந்யோந்யமாகக் காதலித்து, வீட்டிலுள்ள மற்றைப் பெரியோர்களைப்பணிந்து, இல்வாழ்க்கையை இனிது

* Annie Besant. † Edmund Burke. ‡ Goethe.
§ Sir Monier Williams and Annie Besant.

நடத்தி, நம் முன்னோர்களான சீதை-[illegible]மயந்தி - சா[illegible]வித்திரி - சந்திரம[illegible] முதலான மடநல்லாரைப் போன்று விளங்[illegible]கவேண்டு[illegible]மன்பதேயாம்.

நமது சிறுவர் சிறுமியர் கல்விக்குறை[illegible]ரி நந்தேசத்தில் வேறு சில முக்கியமான குறைகளுமுள. அநேக குடும்ப[illegible]களில், பெண்கள் துன்மார்க்கர்களென்றும், சூதுடையவர்களென்றும், நம்பவொண்ணாதென்றும் வேலைக்காரியிலுந் தாழ்வாக மதிக்கப்பட்டு வருகிறார்கள். புருஷர்கள் எவ்வாறிருப்பினும், என்ன செய்யினும் எதிர் கூறாது அவர்களைத் தெய்வமாகப் பேணி நடப்பது பெண் தருமமென்றும், பெண்களுடைய சுகத்தை நாடுவது புருடருடைய கடமை யன்றென்றும், இதற்குச் சாஸ்திரமும், வழக்கமும் சான்றென்றுஞ் சொல்வாருளர். சில குடும்பங்களில் மனைவிகள் தங்கணவரிடத்தில் புலியைக்கண்ட பசுவைப்போல் நடுங்கவும் கண்டுள்ளேன். என்ன ஆச்சரியம்! என்ன கொடுமை!! தாய் தந்தையரையும், மற்றச் சுற்றத்தாரையும் விட்டு நாமே கதியென்று நாடிய அவர்களுக்கு நம்மையன்றி வேறு துணை யாது? ஏதோ வாசித்து உலக நடையறிந்து மனம் போனபடி நடக்கும் ஆண் மக்களாகிய நாம், சாஸ்திரமும் வழக்கமும் இடந்தருகிறதென்று அறியாமையே அணிகலமாகப்பூண்ட நமது மாதர்களை இவ்வாறு வருத்துவது முறையோ?

பெண்கள் நம்மை உள்ளன்போடுநேசிக்க வேண்டுமாயின் நாமும் அவர்களை அவ்வாறு நேசிக்கவேண்டும். அவர்கள் உண்மையாக நடக்க வேண்டுமானால் நாமும் அவர்களிடத்து உண்மையாயிருப்பது அழகு. அவர்களிடத்தில் நற்குணம் பிறக்கவேண்டுமாயின் நாமும் நல்லவர்களாயிருத்தல் அவசியம். அவர்கள் எந்நாளும் நம்மை உயிர்த்தோழர்களாக மதித்துத் தங்களுக்கு நேரும் சுகமாயினும் துக்கமாயினும் நம்மிடஞ்சொல்லவும், நாம் அவற்றை விசாரிக்கவும் வேண்டும். பெண்கள் விவேகிகளாயின் சமயம் வந்தபோது அவர்களுடைய புத்தியைக் கேட்பதும் நன்றே. முற்காலங்களில் இன்னவண்ணம் புருஷர்கள் பெண்களை நடத்திவந்தார்களென்பது பாரத ராமாயணங்களால் விசிதமாகும். பெண்களைத் தூஷித்துப் பேசவும், எழுதவுந் தொடங்கிய தெல்லாம் இடையிலுண்டானதுதான். நமது தென்னாட்டில் நங்கையர்க்கோர் நாயகமாகவும், வித்துவான்களுக்கு விழுப்பொருளாகவும், பிறருக்குப் பேராசிரியராகவும் தோன்றிய ஔவையாரும், "தையல் சொற் கேளேல்" எனத் தம்மினத்தாரை இகழ்ந்ததும் நாம் வியக்கற்பாலதே. "பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்" என மற்றோரிடத்திற் கூறியிருப்பதால், அப்பேதைமையே இவரும் அணிந்தார் போலும்.

சில விடங்களில் புருஷர் மனைவியர் கூடிப் பேசவும் சிரிக்கவும் மனம் பொறாத பெற்றோரும் உளர். புதல்வர் தம்மனையாட்டிகளோடு ஒருமித்து வாழ்ந்து குடித்தனஞ்செய்வதற்கன்றோ கலியாணஞ்செய்வது? இங்ஙனமாக அவர்கள் தம்மிளம்பருவத்தில் இஷ்டப்படி ஒன்று சேரவும், மனத்திலுள்ளவற்றைச் சொல்லி மகிழவும் கூடாதானால் அவர்களுடைய கலியாணத்தா

...ண்டான சுகம் எ...ன்ன? ...றவர ...தலால் விதிவிலக்கறியாமற் கூடி நோயை வருவித்துக்கொள்வா... ...ளென்ப... இவர்களுடைய எண்ணமெனினும் இதற்குத் தக்கவழி தேடாது அ... ...ளுக்கு என்றுந் துன்பத்தை விளைப்பது இனியதோ? சில விடங்களில் ...பெண்கள் தங்கணவரைப் பகலிற் பார்க்கலாகாதென்றும், மாமியா ரனுமதிபெற்று அவர்களிடம் கலக்கவேண்டுமென்றும் நடக்கிற வழக்கத்தை, அம்மம்ம! நினைக்கவும் துக்க முண்டாகிறதே. இஃது பிறசாதியார்க்குள் மறைந்து வருகிறதெனினும், பிராமணரிடத்தி விருந்து கொண்டிருக்கிறது. இவ்வழக்கங்கள் கால பேதத்தாலும், அறியாமையாலும் நேரிட்டதன்றிப் புராண சாஸ்திரங்களிலில்லை.

இத்தகைய வழக்கங்களை நீக்கிக் கல்வியில் வேண்டுந்திருத்தங்களை யுண்டாக்க நம்மவர்கள் முயலவேண்டும். சீர்த்திருத்துஞ் சபையார் கைம்பெண்விவாகம், சாதிவிலக்கு முதலியவற்றிலும், அரசாங்கசுதந்தரங்களிலும் தலையிட்டுக் காலத்தை வியர்த்தமாக்கிப் பலருடைய நிந்தைகளைப் பெறுவதிலும், நாட்டுக்கு உண்மையான நலந் தரக் கூடிய விதிகளைக் கவனித்தல் அழகன்றோ?

தற்காலம் நமது பெண்கள் வாசிக்கத்தகுந்த புத்தங்கள் கிடையா. வெள்ளைக்காரருடைய எண்ணங்கள் நமக்கு வேறு படுவதால் அவர்களா லெழுதப்பட்ட புத்தகங்கள் பயனில. தமிழிலுள்ள நூல்களனைத்தும் காவியங்களாகின்றன. வசன நடையில் இரண்டொன்றிருப்பினும் அவைகள் சிற்றின்பத்தைப்பற்றிய கதைகளாயுள்ளன. ஆகவே ஆங்கிலமும், தமிழும் பயின்ற நம்மவர், சொற்சுவை, பொருட்சுவை பொருத்தி எளிய நடையில் நீதி மார்க்கம், குடும்பப் பாதுகாப்பு முதலிய வற்றைக்குறித்து நல்ல நூல்களியற்றிப் பரவச் செய்யவேண்டும். இவைகள் இக்காலத்தில் வெளியாகும் பலசாஸ்திரக் கருத்துகளைத் தழுவியிருப்பது தகுதியுடைத்து. இது சீர்கெட்ட நமது பாஷாபி விர்த்திக்கும் ஓர் வழியாகும். இவ்வாறு எழுதத்தக்க வல்லமையுடையவர் நம்மவர்க்குள் பலபேரிருந்தும், கானகத்து நறுமலர்களைப்போலும் மனிதர்க்கு இன்பந் தருகின்றிலர். அநேகர் ஆங்கிலத்தில் நிறைந்த ஞானமிருப்பினும், தஞ்சொந்த பாடையாகிய தமிழைக் கற்பது கனக்குறையென்றெண்ணி இகழ்ந்து வருகின்றனர். ஆங்கிலப்பயிற்சியுடையோர் தாங்கள் அறிந்தவற்றைத் தமிழ்ப்பாஷையில் மற்றவர்க்குத் தெரிவிப்பதும், தமிழில் உள்ளவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அந்நியர்க் கறிவிப்பதும் அவர்களுடைய கடமையாகும். தமிழொன்றையே ஓதி வெளிவந்த வித்துவான்களோ அரியசொற்களை யடுக்கிக்கவிபாடுவதொன்றிலேயே பழகியிருப்பதால் காலத்திற் கேற்பத் தெள்ளிய நடையில் உயர்ந்த எண்ணங்களை யமைத்து நம்மவர்க்குபயோகமாகும் வண்ணம் எழுத இயலாது. நம்மிடத்தில் மற்றொருகுறையுமுண்டு. இனியவிதமாய் நல்லநூல்களை யெழுதத் தக்கவர் இருப்பினும் அவர்களுக்கு உற்சாகந்தந்து அவர்களுடைய நூலை அச்சிட்ச் செய்தும், வாங்கி வாசித்தும் வருபவரரியர்.

பாயிரம்.

இங்ஙனமாக, "மனோன்மணீயம்" என்னும் நூதன நாடகமொன்றை யுண்டாக்கிப் பண்டிதரேயன்றிப் பாமரரும் மகிழச்செய்தவரும், ஆதியில் காவியத்திலிருந்த மனத்தை வாசகத்தில் திருப்பி எனதற்ப தமிழ்நடையை மெச்சி எனக்கடிக்கடி உற்சாகந் தந்தவரும், என்மீது ஆர்வம் மிக்குடையவருமாகிய இராயபகதூர் பி. சுந்தரம் பிள்ளை, M. A., M. R. A. S., F. R. H. S., அவர்களுக்கும், அநேக அரிய நூல்களை யச்சிட்டு வெளியாக்கிய சி. வை. தாமோதரம் பிள்ளை, B.A., B.L., கும்பகோணம் சுவாமிநாத அய்யராதியோர்க்கும், பல ஆதாரங்களைக் கொண்டு தமிழர்களுடைய பழைய நிலைமையைக் காட்டிவரும் எனது பிரிய நண்பர் வி. கனகசபைப் பிள்ளை, B.A., B.L., அவர்களுக்கும், ஞானநூல்களையும் நீதி நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துவரும் போப்பையர், M. A., D. D., ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை, B. A., B. L., மற்றுஞ் சிலர்க்கும் நமது தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறதென்பதை நான் இங்குச் சொல்லத்தவறுகாது.

நம் பெண்மக்கள் ஒழுக்கமும் அறிவும் பெருகிக் கற்பைக் காத்துப்பூர்வத்திலிருந்த மங்கையர்க்கரசிகளைப் போன்று விளங்க வேண்டுமென்னும் வாஞ்சைகொண்ட நான், ஏதோ என்னாலியன்றதுசெய்ய எண்ணங்கொண்டு சில கதைகளையும், நாடகங்களையும் எழுதி, இவற்றில் கதைகளிற் சிலவற்றைச் சென்னையி லுலாவிய ஓர் பத்திரிகையில் நான்கு வருடங்களுக்கு முன்னே வெளியாக்கினேன். இக்கதைகளைவாசித்து மனமுவந்தவருட் சிலர் புத்தகவடிவமாக அச்சிட்டுப் பரவச்செய்யின் பெண்களுக் குபயோகமாம் என்று என்னிடம் சொல்லி வந்தமையால் இவற்றைச் "சுகுண போதினி" என்னுமகுடம் வைத்து "மரகதவல்லி" கதையே முதலாகக்கொண்டு இன்று வெளியிடத் துணிந்தேன். இக்கதைகளில் பலபேரை வருவித்து அநேக விஷயங்களைத் திரட்டிப் பெரிதாக்க முதலிற் கருதினேனெனினும் அஃது பெண் பாலார்க்குப் பிரியத்தைத் தராதெனக் கண்டு அக்கருத்தை யகற்றினேன். இக்கதைகளை வாசித்து ஒருவ ரிருவரேனும் ஒழுக்கத்தில் உயர முயற்சிப்பாராயின் அவ்வொன்றே என் கஷ்டத்திற்குக் கைம்மாறாகக் கொள்வேன்.

7—8—1901.

இரண்டாம்பதிப்பின்

முகவுரை.

"மரகதவல்லி" முதற்பதிப்பு வெளியானவுடனே பிரதிகளை விற்கும் வகையுணராது யான் சென்னையிற் சில வியாபாரிகளிடம் யோசித்தேன். ஒருவர் ஐஞ்ஞூறு பிரதிகளுக்கு நாற்பதுரூபாய் முடிவுசெய்து அதில் முப்பது மூன்றும், பின்னர் பத்தும் தருவதாயும், மற்றொருவர் புத்தகத்தின் விற்பனையைச் சிறிது காலம் பார்த்துரைப்பதாயும், வேறொருவர் விற்றபின் பணங்கொடுப்பதாயும் பகர்ந்தனர். புத்தகத்தைப் படித்த இரண்டொருவர் ஏதொன்றுங் கூறாதொழிந்தனர். நூலிலுள்ள குணங்குற்றங்களைக் குறித்தனுப்புமாறு பண்டிதர்களுக்கெழுதிய கடிதங்களுக்கு விடைகிடைத்திலது. மாணவர்க்குப் பாடபுத்தக மாக்கலாமென்று சென்னைக் கலாசாலைப் புத்தக சங்கத்தின் அவயவி யொருவரைக் கேட்க அவரும் மௌன மானார். எனது சிநேகிதர்களிற் சிலர் புத்தகத்தை அச்சிட்டுப் பொருள் விரயஞ் செய்ததற்கு என்னை ஏளனஞ் செய்தனர். ஆகவே இக்கதையில் நம்மவர்க்குபயோகமாவது யாதேனும் உளதோ வென பானே ஐயுற்றுச் செய்வதின்னதெனத் தோன்றாது சிலநாள் உள்ளமாழ்கி நின்றேன். வீணே இதனை யெழுதி எனது காலத்தைக் கழித்ததற்கு என்னை வெறுத்துக்கொண்டது முண்டு. உண்ண உணவிற்கும் உடுக்க ஆடைக்கும் வருந்திய சில ஆங்கிலப் புலவரது கதியும், தமிழ் நூலாசிரியரின் விதியும் என் நினைவுக்கு வந்தன.

இங்ஙனமாக, என்னை முன்னம் அறியாதவரும், சென்னை வாசியுமாகிய இ. ஜி. முத்தையபிள்ளையவர்கள் இந்நூலின் அருமை பெருமையைக்குறித்து நீண்ட கடிதம் வரைந்தனுப்பினார். "பண்டிதர் வேண்டுவது பொன்னல்ல; பூமியல்ல. அவர்கள் நூல் இனியதென்னும் வாய்வார்த்தையொன்றேயாம்" என்றோராங்கிலப் புலவர் புகன்றதற்கேற்ப, பண்டிதனல்லேனெனினும் யானுமொரு நூலாசிரியனாதுபற்றி என்றன் அயர்வு நீங்கி அகங்களித்தேன். பிறகு பலவித்துவான்களிடமிருந்து ஒன்றன்பின் ஒன்றாகக் கடிதங்கள் வரப்பெற்று யான் அடைந்த ஆனந்தம் அதிகம்.

கடந்த மேமாத வாரம்பத்திலிருந்து இன்றோடு எனது புத்தகங்களனைத்தும் செலவாயின. மூன்றரைமாத காலவளவில் ஏறக்குறைய நானூற்றைம்பது பிரதிகள் விற்பனை யானதெனில், அப்புத்தகம் பயன்தருகிறதென்றெண்ணத்தடையென்ன? மரகதவல்லி அநேக பெண்களைச் சீர்திருத்துவதாயுந் தெரியவருகின்றது. புதிதாய்ப் புத்தகமெழுதுவோரிற் சிலர் எனது தமிழ் நடையைக் கையாடவுங் காண்கின்றேன். இதனை அன்னிய பாஷைகளில் மொழிபெயர்க்கவும் சிலர் அனுமதி கேட்கின்றனர். பண்டிதரிற் பலர் என்னை நேசிக்கவும், அநேகர் துயருற்ற காலையில் தோழனாகக் கொள்ளவுமாயினர்.

வெகுகாலம் எனது நண்பராக நடித்துவந்த திருமயிலை - இராமலிங்க முதலியார் என்றன் அனுமதியடையாது யான் ஆதியில் "அக்கினி குலாதித்தன்" பத்திரிகைக் கெழுதிவந்த கதைகளை யெல்லாஞ்சேர்த்து "ஜீவரத்னம்" என வேறு நாமந்தந்து டி. ஆர். சந்திரய்யரென்பா ரொருவரோடுகூடி இரண்டாயிரம் பிரதிகளச்சிட்டு விற்றுவந்ததா யறிந்தேன். ஒருவர் கஷ்டப்பட்டெழுதியதைச் சுலபமாகத் தம் பெயர்வைத்து வெளியிட்டுப் பணம் பெறுவாரும் இக்காலத்துளர். இராமலிங்கமுதலியார் தம் எழ்மையைப் புகன்று என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் இவரது மோசச் செய்கையை மூற்று முரைக்காது விடுகின்றேன். சந்திரய்யர், என் பெயரை "ஜீவரத்னம்" முதற்பக்கத்திற் சேர்ப்பதாய் வாக்களித்தும் அவ்விதஞ் செய்யாமலே இன்னும் புத்தகங்களை யச்சிட்டு விற்றுவருகின்றனராம். இவரது துணிபை யென்னென்றுரைப்பது ! தூரதேசங்களிலுள்ள தமிழ் நூலாசிரியர்கள் சென்னையில் நடப்பதை யறியாது என்போலும் இன்னோரால் ஏமாறுதிருப்பாராக.

எம். சிங்காரவேலு முதலியார் அவர்கள் B. A., (Assistant Inspector of schools) தண்டலம் - பாலசுந்தர முதலியார் அவர்கள் முதலியோர் கூறியவாறு மரகதவல்லி நம்மவர் இல்லந்தோறும் புகுந்து, பெரியோர், சிறியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோராகிய ஆண் பெண் இருபாலாரிடத்தும் உலாவுங் காலத்தை எதிர்பார்க்கின்றேன்.

20—8—1902.

மூன்றாம்பதிப்பின்

முகவுரை.

மரகதவல்லி இரண்டு பதிப்புகளாகி இம்முறை மூன்றாம் பதிப்பு அச்சிடத் தொடங்கி இதன் முகவுரை எழுதுகிறேன்.

நான் புத்தக வியாபாரியன்று. புத்தகம் விற்கும் வழியும் அறியேன். இதனை வர்த்தகரிடம் கொடுத்தால் எங்கும் பரவும் என்றும்,எனக்கும் லாபமுண்டாமென்றும் எனது நண்பர்களிற் பலரியம்பினும், பத்திராதிபரிற் சிலர் எழுதினும் எனக்கு அவ்விதம் செய்ய ஆசையில்லை. புத்தக சம்பந்தமாக முன்னமே நான் மோசம்போயிருப்பதால் வர்த்தகரிற்பலர், புத்தகம் அச்சிடுமுரிமையை விலைக்குத் தரவேண்டினும், பதிப்பொன்றுக்குக் கேட்டதொகை கொடுப்பதாய்க் கூறினும் நான் இணங்கவில்லை. ஆதியில் தமிழிலும், தமிழரிடத்திலும் பற்றுள்ளவராக நடித்து எனது மரகதவல்லியை நல்ல கடிதத்தில் உயர்ந்த அச்சிற் பதிப்பித்துப் பலரும் பயனடையுமாறு குறைந்த விலைக்கு விற்பதாக எனக்குக் கடிதம் எழுதிய திருமயிலை இராமலிங்கமுதலி, கோல்டுஸ்மித் (Oliver Goldsmith) பண்டிதருடைய ஜெங்கின்சன் (Ephraim Jenkinson) போலானர். ஜெங்கின்சன் உலகசிருஷ்டியைப்பற்றி ஒன்றைப்பாடம்செய்துகொண்டு கண்டோரிடம் சொல்லித்தான் கல்வியிலுயர்ந்தவனென்

றும், ஈகையிற் சிறந்தவனென்றுங்காட்டி ஏமாற்றி வந்ததுபோல, இராமலிங்க முதலியும் தாம் வாசித்தவரென்றும், தமிழாபிமானியென்றும் நடித்து என்னை வஞ்சித்துவந்தார். ஜெங்கின்சன் முடிவில்தான் மோசஞ்செய்த டாக்டர் பிரிம்ரோசுக்கு (Dr. Primrose) நன்மை செய்யக் கண்டோமாயினும்; இராமலிங்கமுதலி தந்துணைவராகிய டி. ஆர். சந்திரய்யரோடு கூடி 'ஜீவரத்னம்' என்னும் போலிநூலை இன்னும் அச்சிட்டுப் பொருள் சம்பாதித்து வருகிறார். இந்த இராமலிங்க முதலியும், டி. ஆர். சந்திரய்யரும் கடந்த 1903ம்-வருஷம் சென்னையில் என்வீடு தேடிவந்து என்னிஷ்டப்படி நடந்துகொள்வதாயும், ஜீவரத்தினத்தை இனித் தாங்கள் வெளியிடுவதில்லை யென்றும் வாக்களித்து மரகதவல்லி இரண்டாம் பதிப்பின் முகவுரையில் இவர்களைக் குறித்தெழுதியுள்ள பாகத்தை எடுத்து விடும்படி என்னை வேண்டினார்கள். ஆஹா, இராமலிங்க முதலியின் ஆண்மையை என்னவென்பேன்! இவர் பெயரால் வெளியான 'மோகனாங்கி' என்னும் மற்றொரு புத்தகம் என்கையிலகப்பட அதிலும் என்னுடைய கதைகளிற் சில இருக்கக்கண்டேன். ஜீவரத்தினக் கதைகளைத் தவிர வேறொன்றும் திருடியதில்லையென்று செப்பிய இவர், இன்னும் இவ்வாறு எனது கதைகளைக் கொண்டு எத்தனைப் புத்தகங்கள் எழுதி என்னை மோசஞ்செய்து வருகிறாரோ அறியேன். இவர் தாம் செய்த பிழையையும், தம் மேன்மையையும் சொல்லி என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராதலால் மற்றும் இவரைப்பற்றி யெழுத எனக்கு மனமில்லை. இரண்டாம் பதிப்பை அச்சிடுகையில் சென்னை பு. வே. சபாபதி முதலியா ரென்பவர் எனக்கறிவியாமல் எண்ணூறு புத்தகங்கள் விற்றெடுத்துக்கொண்டார். இவருக்கு எத்தனை முறை கடிதம் எழுதியும் விடைகிடைத்திலது. எனது உதவியைக்கொண்டு இதனைத் தெலுங்கில் மொழிபெயர்த்த எம். மங்கய்யரும் எனது சம்மதமின்றிப் புத்தகம் அச்சிடுமுரிமையை (Copyright) அடைந்தார். பாஷாபிமானிகளென்றும், தேசாபிமானிகளென்றும் சொல்லி என்னிடம் வருவாரின் செய்கை இவ்வாறாயின் சில்லறை வியாபாரிகளை நான் நம்புவதெங்ஙனம்?

என் புத்தக சம்பந்தமாக இவ்வாறு நான் ஏமாறினும், ஒரு விஷயத்தில் எனக்கு உள்ளக்கிளர்ச்சி யுண்டாகிறது. இதுவரையில் ஜீவரத்தினம் சுமார் 10,000 பிரதிகள் செலவாயிருக்கலாம். இதிலுள்ள கதைகள் யாவும் என்னுடைய தாதலால், என் எண்ணங்கள் எங்கும் பரவுகின்றன என்பதும், என் சுதேயத்தார் இவற்றை இனிது விரும்புகின்றாரென்பதும் விளங்குகின்றன.

எனது மரகதவல்லியைப் பண்டிதர்கள்படித்து மகிழ்கிறாரென்பதை அறிவேன். பண்டிதரல்லாதார் பலகால் தனித்துப்படித்தும், பிறருக்குப்படித்துக்காட்டியும்வரப் பார்த்துள்ளேன். அநேகவிடங்களில் வாசித்த பெண்கள் மற்றப் பெண்களைக்கூட்டி வாசித்து வரவும் கண்டுள்ளேன். எனதுமரகதவல்லியால் எனக்கு எங்கும் மரியாதை கிடைக்கின்றது. புலவர்களிற்பலர் என்னை நேசிக்கவும், ஜனங்களிலநேகர் எனது புத்திமதியைக் கேட்கவுமாயினர்.

என்னை இதற்கு முன்னம் அறியாதவரும், 'மாணிக்கவாசகர் காலம்' என்னும் நூலாசிரியருமான எஸ். ஏ. திருமலைக்கொழுந்து பிள்ளையவர்கள்,

B. A., தமிழ்ப்பாஷையிலுள்ள கதைகளெல்லாம் மரகதவல்லியே தலையாய தென்றும், அறிவைத்தருவதில் இந்நூலைப்போல் இன்னொன்றில்லையென்றும் எழுதிப் பின்னர் எனக்குப் பன்னிரண்டு ரூபாய் அனுப்பியதுடன் மரகதவல்லிப் பிரதிகளை விற்பனை செய்வதாகவும் வாக்களித்தார். 'விக்கார் ஆவ் வேக்பீல்டு' (Vicar of Wakefield) வெளியானதும், ஜான்சன் பண்டிதர் (Dr. Johnson) ஒரு பிரதியை விலை கொடுத்து வாங்கியபோது கோல்டுஸ்மித் (Goldsmith) பண்டிதருக்குண்டான சந்தோஷத்தினும் எனது சந்தோஷம் எண்மடங்கு அதிகமென்னலாம். இவ்வளவு உதவி புரிந்த இவருக்கு நான் செய்யும் கைம்மாறு யாதுளது?

ஆதியில் நான் இக்கதையையும், இதனுடன் சேர்ந்த மற்றக்கதைகளையும் என் ஒழிந்த நேரங்களில் காலங்கடந்த என் காதன் மனையாளாகிய சௌபாக்கியவதி குணபூஷண தாயாரம்மாளை அருகில்வைத்து எழுதிவந்தேன். அக்காலத்தில் இக்கதைகள் இவ்வளவாய்ப் பரவுமென்றும், எம்மவர்க்குப் பயன்படுமென்றும், எண்ணினவனல்லன். அதனை நான் எண்ணுந்தோறும் என்மனைவியின் ஞாபகம்வந்து என்னைத்துன்புறுத்துகின்றது. என் இஷ்டம் போல நடந்து எழுதும் விஷயத்தில் உதவியா யிருந்து இனிய எண்ணங்களை எனக்குண்டாக்கிய வளாதலால், அவளின்றி நான் இக்கதைகளி லொன்றேனும் எழுதியிரேன். இக்கதைகளா லுண்டான கீர்த்தி முற்றும் அவளுக்கே சேரவேண்டும். இப்போது அவள் என்னுடன் கூடவிருந்து இன்புறுதற்கில்லையே யென்னும் எண்ணமானது என்னை வருத்துகின்றது. என் செய்வேன்! என் காதற் களஞ்சியமும், என் கண்ணினுண்மணியுமான இல்லாள் என்னுடன் ஆண்டுகள் ஐந்தே இருந்து இறந்தாள். அத்துணை அன்பும், வணக்கமும், உண்மையும், ஒழுக்கமு முடையாளை இனி நான் காணப்போவதில்லை.

"பொன்பணி வேண்டாய், பூம்பணி வேண்டாய், புவிமீதே
மன்பணி வேண்டாய், மாவணி தான்மறந் தும்வேண்டாய்,
புன்பணி யாமிவை யெல்லாம் பொய்யாம் பணியென்றே
அன்பணி புகழா யறவணி யழகா யணிந்தாயே.

காமனை யொக்கும் கணவன் புலம்பக் கண்டாற
மாமன் மாமியர் கண்ணீர் மழைமஞ் சனமாகச்
சோமனை நேர்முக வேணுகோ பாலச் சுதன்தேம்ப
மாமயி லின்மனே ரஞ்சித மகளும் வாய்மோத,
அப்பன் அப்பா துரைதன் வயிற்றி லனலூட்டித்
துப்பன விதழார் தங்கைய ரவரைத் துயர்கூட்டி
நப்ப னடேசன் நாமத் தம்பிகண் ணீர்நாட்டிக்
கோப்பன எமன் கொண்டே சென்றன் கொடும்பாவி.
'மாமிகொண் டாடும் மருகியில்' லென்னும் வழக்கான்ற
பூமியிற் பொய்யாக் கினையே, பூவை போல்வாயே,
காமிய மில்லாத் தவமாம் வினையின் காப்பாவாய்,
நாமிவை யெல்லாம் நவின்றே யிரங்க நடந்தாயே."

நான் மரகதவல்லி முதற்பதிப்பின் முகவுரையில், இக்காலத்துப்படிப்பில் பல குறைகளுள வென்றும், இப்படிப்பானது வாசிக்கும் சிறுவர் சிறுமியருக்குப் பயன் தருவதில்லை யென்றும், பெண்கல்வி விஷயத்தில் ஒருவரும் உண்மையில் கவனம் வைப்பதில்லை யென்றும் எழுதியிருந்தேன். இவ்வருடம் கல்கத்தா கல்விச்சங்கத்தில் யான் கூறியவாறே, பங்காளராஜதானி கல்வியிலாகா டைரெக்டராகிய பெட்லர் துரையவர்கள் (Alexander Pedlar, F. R. S., C. I. E.,) படிப்பில் பல குறைகளுள வெனப் பிரசங்கித்தார். காசிப்பட்டணத்தில் ஆண் பிள்ளைகளுக்கு ஓர் கலாசாலை ஏற்படுத்தியுள்ள அனிபெசண்டு அம்மையார் பெண்களுக்கும் ஓர் கல்விச்சாலை யேற்படுத்தி ஐரோப்பிய மாதர்களைக்கொண்டு நடத்திவருகின்றார். இத்தகைய பெண் பாடசாலைகள் பிற இடங்களிலும் உண்டாக, அம்மையாரவர்கள் முயற்சித்து வருவதை யறிய எனக்கு ஆனந்த முண்டாகிறது.

இந்நூலை கவர்ன்மெண்டு டிரெயினிங்கு கல்விச்சாலைகளிலும், பெண் பாடசாலைகளிலும் உபயோகப்படுத்த உத்தரவு தந்த கல்வியிலாகா உத்தியோகஸ்தருக்கு நான் நன்றியறித லுள்ளவனாகின்றேன். இந்நாட்டில் கனமும், பணமுமுள்ள பெரியோர் இதைப்போன்ற புத்தகங்களைவாங்கி, பாடசாலை மாணுக்கருக்கு வெகுமதி தருவார்களாயின் மிகவும் நன்றாம். மாணுக்கருக்குப் பயனுண்டாகி, அவர்களால் நந்தேசம் முன்னுக்கு வருவதன்றி சீர்கெட்டுவரும் தமிழ்ப்பாஷையையும், செல்வக்குறையுள்ள நூலாசிரியரையும் கௌரவப்படுத்தவதாகும்.

அசிஸ்டண்டு இனிஸ்பெக்டர் எம். சிங்காரவேலு முதலியார், B. A., F. T. S., அவர்களும், தண்டலம்-பாலசுந்திர முதலியார் அவர்களும் கூறியபடி எனது மரகதவல்லி இத்தென்னாட்டாரது இல்லந்தோறும் நுழைந்து, ஆண் பெண் இருபாலாரிடத்தும் உலாவும் காலம் வெகு தூரமல்ல என்று நான் துணியலாகும்.

எனக்குக் கடவுளிடத்து அழுத்தமான நம்பிக்கை யுண்டாதலால் நான் முதன் முதல் இக்கதையை ஆரம்பித்தகாலையில் இதனை வாசிப்போர் பலரும் பயன்பெறுமாறு பலகால் கடவுளை வேண்டினேன். அவ்விதவேண்டுகோள் வீணாவதுண்டோ?

அனந்தபுரம்
1905௵ செப்டம்பர்௴.

ஓம்.

மரகத வல்லி.

முதலதிகாரம்.

கடங்கொண்டுஞ் செய்வன செய்தலினிதே.

இனியவை நாற்பது.

ஓர்நாள் சாயங்காலம் வேலூர் விநாயகர்வீதியில் ஒரு மெத்தைவீட்டின் வாயிலில் இரண்டு பெண்கள் நின்றுகொண் டிருந்தார்கள். அவ்வீதியினிருமருங்குமுள்ளவீடுகளிற் பல சுத்தமாக மெழுகப்பட்டு வெள்ளைமண்ணாற் கோல மிட்டிருந்தன. சுவர்கள் சுண்ணாம்பினால் துலங்கின. முகப்பில் மாந்தோரணங்கள் தொங்கின. சில கூரைவீடுகளினெதிரில் கும்பலாகக் கொட்டியிருந்த களிமண்ணைச் சிறுவர்கள் கூடைகளிலேனும், முறங்களிலேனும் வாரித் திண்ணைகளிற்கொட்ட, அதைப் பெரியவர்கள் அவசரமாகக் கீழ்பரப்பித் தண்ணீர் தெளித்துக் கையினால் தடவிக் கொண்டிருந்தார்கள்.

மெத்தை வீட்டுத் தெருவாயிலில் நின்றுகொண்டிருந்த பெண்களிலொருத்தி தோளில் வெண் பட்டுக் கஞ்சுகமும், இடையில் செம்புள்ளிப் பாவாடையுந் தரித்திருந்தாள். பச்சைவர்ணப் பட்டாடை வலத்தோளின் வழியாக மார்பிற்பரவி இடத்தோளின் மேற்புரண்டு பின்புறந் தொங்கியது. அவள் கழுத்தில் காசிமாலையும், கையிற் காப்புடன் கொலுசும், இடுப்பில் ஒட்டியாணமும், காலில் தண்டையு மணிந்திருந்தாள். கறுத்தடர்ந்த பின்னலோடு கூடிய கூந்தலில் சம்பங்கிப் பூக்களிருந்தன. அவள் கத்தரிப்பழம் போன்ற நிறத்தினள். சிறுத்துத் துவண்ட இடையினள். பரந்த கண்களும், நீண்ட மூக்கும், திரண்டகன்னங்களும், மெலிந்த உதடுகளும் உள்ளவள். அவளுடைய அகன்றுயர்ந்த நெற்றியிலிட்ட சிந்தூரப் பொட்டானது தளதள வென்று பிரகாசித்தது. வயது பதினான்கு அல்லது பதினைந்திருக்கலாம்.

மற்றொருத்தி சுமார் இருபத்தைந்து வயதுடையவளாகக் காணப்பட்டாள். அவள் கறுத்த மேனியும், சுருட்டை மயிருமுடையவள். அவளுடைய விரிந்து தாழ்ந்த சப்பைமூக்கும், கீழுதட்டிலிருந்த காயக்குறியும் முகத்தினழகை முற்றுங் கெடுத்தது. கழுத்திற் கரியமணியும், கையிற்பித்தளை மோதிரமுமன்றிப் பிறிதொரு நகையும் பூண்டிலள். அவற்றோடு அவளுடைய அழுக்கேறிய ஆடையும், கரிபடிந்த மேனியும், கையிற் பிடித்த துடைப்பமும் அவள் வேலைக்காரி யென்பதை விளக்கிக் காட்டிற்று.

சிறியவள் பெரியவளை நோக்கி, “என்னடி? எல்லாவீடுகளும் மெழுகிக் கோலமிட்டிருக்க, நமது வீடுமட்டும் சும்மாவிருப்பதேன்?” என்றாள். பெரியவள், “அம்மணி, நான் நேற்றைத்தினமே வெள்ளைமண்கரைத்துச் சித்தஞ் செய்து வைத்திருந்தேன். உன் தந்தையார் வெள்ளை மண்ணாற் கோலமிடு

வது வீட்டிற் கவலட்சண மென்றும் அது வேண்டுவதில்லையென்றும் சொன்னதால் அவர் கட்டளைக்கஞ்சி அதை வெளியிலூற்றிவிட்டேன். இன்று வீட்டைச் சும்மாவைத்திருப்பது நன்றல்லவெனினும், நான்மீறி நடந்தால் உன் தகப்பனார் கோபிப்பாரே. இன்றைக்கிருந்து நாளைக்கோடும் ஊழியக்காரியாகிய எனக்கு இவ்வீட்டில் என்ன உரிமையிருக்கிறது?" எனப்பேசிக்கொண்டிருக்கையில் சிறியவள், "நாராயணி, பொறு, பொறு, நமது தெருவில் கொட்டு முழக்கங் கேட்கிறது. அதென்ன? ஏதேனும் சுவாமி ஊர்க்கோலம் வருகிறதோ?" என்று வினவினாள். நாராயணி, "அம்மா, அன்று, அன்று. ஜனங்கள் பொங்கலிட்டுப் படைக்கிறார்கள். போன பொங்கலிரவில் சித்தூரில் ஒருவன் குடித்துத் தலைகால் தெரியாமல் தரையிற் புரண்டது உனக்கு ஞாபகமில்லையோ?" என, சிறியவள், "ஆம், ஆம். என்பிதா அவனை அடித்ததும் நினைவுவருகிறது" என்று கூறி நகைத்தாள்.

சற்று நேரமானதும் சிலவாலிபர் ஒருங்குகூடித் தங் கால்களினால் வீதியிற்கோடுகள் கிழித்துப் பின்னர் சமபாதியாகப் பிரிந்து ஒரு வகுப்பார் கட்டுவதாக அக்கோடுகளில் நிற்க, மற்றொரு வகுப்பார் புகுவதாக அவர்களையெதிர்த் தோடிச் சிலர் கால்தவறி விழுந்தனர்; சிலர் கடக்க முடியாமற்பட்டனர்; சிலர் சமயம் பார்த்துத் தாண்டிப்போய், "உப்போ உப்பு!" எனக் கூவினர். அப்பொழுது சிறியவள் சற்றுயர்ந்திருந்த வீட்டுக்குறட்டிற் காலை வைத்துக்குனிந்து பின்புறந்தொங்கிய தாவணி முன்றானையை வலக்கையிற் பற்றி மோவாய்க்கீழ் வைத்துக்கொண்டு அவர்களை யுற்றுப்பார்ப்பதும், பிறகு நாராயணியை நோக்கிச் சிரிப்பதுமா யிருந்தாள். அவள் அவ்வாறு வேடிக்கையிற் கவனமாயிருக்கையில் பக்கத்தில் புட்பச்செடி வைத்திருந்த சாடியொன்றிலிடறி விழுந்தாள். சாடியும் உடைந்துகீழ்விழுந்தது. பொழுதுபோகிறதே யென்று பயந்து பரபரப்புடன் பெருக்கிக்கொண்டிருந்த நாராயணி, விழுந்த அரவங்கேட்டு நிமிர்ந்து நோக்கிக் கையிலிருந்த கட்டையை யெறிந்தோடித் தன்தலைவியைத் தூக்குகையில் சிறியவள் மெதுவாயெழுந்து, "அடி நாரி, நான் கீழே விழுந்தனையும் பார்த்திருந்தாயோ?" எனக்கோபித்தாள். நாராயணி, "அம்மா, நீ விழுந்தது என் பிழையன்று. நான் என் வேலையிற் கவனமாயிருந்தேன்" என்று தாழ்மையாய்க்கூற, சிறியவள் "என்னிலும் வீடு விளக்குவது அத்துணை முக்கியமோ? இதோ எனக்கு நாடோறும் நறுமலர்தரும் சம்பங்கிச் செடிச்சாடியும் உடைந்ததே. உனக்கு வேளைதவறாது சோறுபோட்டு வருவது இதற்குத் தானோ? நான் நாயனாவிடத்திற் சொல்ல வேண்டுமோ? உன் உதட்டிற் சூடிட்டதை மறந்தாயோ?" என்றுகறுவினாள். நாராயணி, "நாயனாவிடஞ்சொல்லவேண்டாம். நான்செய்ததுபிழையே. என் பிழையைப்பொறுக்க உன்காலில் விழுகிறேன். தாய்தந்தையைரற்றுப் புருஷனும்போய்ப் பிறந்த ஊரையு மொழித்த பரதேசியாகிய எனக்கு உங்களைவிட்டால் யார்துணை? அம்மணி, உனக்கிஷ்டமிருந்து எத்தனைமுறை என் தோளிலடித்தாலும், எத்தனைதரம் என் உதட்டிற் சூடினாலும் சம்மதமே. உன் தந்தையிடமட்டுஞ் சொல்லவேண்டாம். அவர் ஓரே அடியில் என் வயிற்றி

லடித்துப் போடுவார். பின்பு என்பாடு அம்பலந்தான்" என்று வேக்டிண்கொண்டாள்.

இவ்வளவில் நரைத்த தாடியும், திரைத்த தேகமுங்கூடிய ஒரு துலுக்கன் வீட்டிலிருந்து வெளியில் ஓடிவந்து, "அம்மா, நாயனா அழைக்கிறார்" என்றான். சிறியவள் நாராயணியை முறைத்தவாறு தெருவாயிற்படியைத்தாண்டி நடை யறையுட் சென்றாள்.

அவ்வறை அகலமற்றதாயினும் சுத்தமாயிருந்தது. கீழே பிரப்பம்பாய் விரித்து அதன்மீது மேற்குச் சுவரினையணைத்து ஒருமேசையும் நாற்காலியும், தென்புறம் ஓர் ஆறுகாற் பலகையும் போட்டிருந்தன. சுவர்மேல் தேதியைக்குறிக்கும் தடித்த காகிதமொன்று ஆணியில் தொங்கிக் கொண்டிருந்தது. மேசைமேல் பச்சைக்கம்பளி பரப்பி அதன்மீது சிறு கடிகாரமும் நெருப்புப்பெட்டியுமிருந்தன. இரண்டு மசிபுட்டிகளும், எழுதுகோலும் வெள்ளிப்பிடிவைத்த மரப்பலகையிற் கிடந்தன. தென்பக்கம் போட்டிருந்த ஆறுகாற்பலகையில் கடுதாசிகள் நிறைந்த இரண்டுபெட்டிகள்வைத்திருந்தன. அவற்றினையடுத்துச் சுருட்டுப்பெட்டி யொன்று திறந்தவாறிருந்தது. நாற்காலியில் பூசனிப்பழம்போன்று முன்வந்த தொப்பையையுடைய ஒருவர் உட்கார்ந்து ஏதோ ஒருகடிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர்வட்டமுகமும், உயர்ந்த மூக்கும், அகன்ற மார்பும், குள்ள உருவமும் உள்ளவர். காதில் வெள்ளைக்கல்வைத்த கடுக்கனும், கையில் பச்சைக்கல் சேர்த்த மோதிரமும் அணிந்திருந்தார். இடையில் வெள்ளை வஸ்திரமொன்றைத்தவிர அவர் தேகமுழுதும் வெறுமையாயிருந்தது. அவர்பக்கத்தில், மேசைமேல் இடக்கையையூன்றி வலக்கை ஆள்காட்டிவிரலைக் கன்னத்திலிருத்திச் சுமார் முப்பதுவயதுள்ள மாதொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் சிவந்த மேனியையும், மெலிந்த தேகத்தையுமுடையவள். கன்னங்களிரண்டும் குழிந்தனவெனினும், அவளுடைய கறுத்தகண்களும், நீண்டபுருவங்களுந் தூரப்பார்வைக்கு அந்தமுள்ளவளாகக் காட்டின. அவளையடுத்து ஆறுகாற் பலகைமேல் நெடிய உருவத்தையுடையவ ரொருவர் நெற்றியில் நாமமணிந்துகால்மேல் காலிட்டுக் குந்தியிருந்தார். சேவகரிருவர் வாயிற்படியில் நின்றவண்ணமிருந்தார்கள்.

சிறியவள் உள்ளேவந்த அரவங்கேட்டதும் நாற்காலியிலிருந்தவர் நிமிர்ந்து, "மகளே மரகதவல்லி, இதை உன் அன்னைக்குப் படித்துக்காட்டு. இது பகலிற் கிடைத்தும் என் கச்சேரி சம்பந்தமான காகிதமென் றெண்ணிப் பெட்டியிற் போட்டுவிட்டேன்" என்றுசொல்லிக் கையிலிருந்த கடிதத்தைக் கொடுக்க, அவள் வாங்கி வாசிக்கலானாள்:—

"மகாகனம் பொருந்திய ராஜமானிய ராஜஸ்ரீ சி. சுந்தரம்பிள்ளையவர்களுக்கு சீனிவாசபுரத்திலிருக்கும் தங்களுடைய பிரியமும், வணக்கமுமுள்ள மாணிக்கம்பிள்ளை யெழுதுவது என்னவென்றால், இவ்விடம் ஸ்ரீபரமேஸ்வரனுடைய கிருபாகடாட்சத்தினால் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்திய

க்ஷேமாதிசயங்களை அடிக்கடி எழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். பரமேஸ்வரனுடைய அனுக்கிரகத்தினால் தங்களுக்கு வேலூரில் தாசில்வேலை கிடைத்ததையறிந்து நாங்கள் எல்லையற்ற சந்தோஷமடைந்தோம். இனித் தங்களுக்கு மேன்மேலும் பெரிய உத்தியோகங் கிடைக்கச் சிவபெருமானை வேண்டிக்கொள்ளுகிறோம்.

என் மகனுக்குக் கலியாணமாகி ஏறக்குறைய எட்டுமாதங்களாயும், மருமகள் எனது குடிசைக்குவந்து ஒருநாளேனும் குடித்தனஞ்செய்யப்பார்த்தறியேன். நான் நேரேவந்து கேட்டும், ஆள்விட்டனுப்பி வேண்டியும் பயன்படவில்லை. அதுபோக, முதற்பொங்கலுக்கு மாப்பிள்ளையை வரவழைத்து மரியாதைசெய்வது ஏழைவீட்டிலும் நடந்துவரும் வழக்கம். ஆனால் படித்தவரும், பணக்காரரும், தாசில்தாருமாகிய தாங்கள் அதை மறந்துவிட்டீர். இது என் மகன்செய்த பாவமென்றெண்ணி நான்சும்மாவிருக்கிறேன். இன்னொருவனானால் பலரும் பரிகசிக்கச் செய்வான்” என்று படித்துக்கொண்டிருக்கையில், நாற்காலியிற் குந்தியிருந்தவர் நகைத்து, “இவன் எனக்குக் கடிதமெழுதுவது நன்றாயிருக்கிறது. தாழ்ந்த இனத்தவரோடு சம்பந்தஞ்செய்துகொள்வதின் முடிவு இதுதான்” என்றார். உடனே மேசைமேற் கையூன்றி நின்றுகொண்டிருந்த மங்கை, அக்கையையெடுத்து இடுப்பில்வைத்துக் கன்னத்திலிருந்த விரலோடு பெருவிரலைச்சேர்த்து மோவாய்க்கட்டையில் நிறுத்தி, “எப்போது பார்த்தாலும் தாழ்ந்தவர் என்கிறீரே. அவர்களென்ன குலத்திற்கெட்டவரோ?” என்றாள். பலகைமேலுட்கார்ந்திருந்தவர், “அம்மா அவர்களைச் சொன்னால் நீ கோபங்கொள்ள வேண்டியதேன்?” என்ன, சுந்தரம்பிள்ளை, “அய்யங்காரே, மீனாட்சிக்குக் கோபம் வரவேண்டியது ஞாயந்தான். அவள் நாட்டுப்புறத்தாளென்பது உமக்குத்தெரியாதோ?” என்றுரைத்தார்.

மீனாட்சி:—ஆமாம். அய்யங்காரே, நான் நாட்டுப்புறத்தாள் தான். ஆனாலும் இந்த நாட்டுப்புறத்தாளுக்குத் தெரிந்தது பட்டணத்தாருக்குத் தெரியவில்லையே. தெரிந்திருந்தால் எந்த ஊரில் இவ்வநியாயம் நடக்கும்? முதற்பொங்கலுக்கு மருமகனை வரவழைத்து மரியாதை செய்யாத மாமனாருமுண்டோ? நமது மாப்பிள்ளை ஏழைக்குடும்பத்திற் பிறந்தாலென்ன? அவனுக்கு அழகில்லையோ? குணமில்லையோ?

சுந்தரம்பிள்ளை:—அய்யங்காரே, நான் நமது மரகதவல்லியை பி. ஏ., பரீட்சை தந்த இராணிப்பேட்டை நாராயணசாமிபிள்ளைக்குக் கொடுக்க வைத்திருந்தும், மீனாட்சி தொந்தரவினால் இவ்வேழை வீட்டில் விவாகஞ்செய்யலானேன்.

மீனாட்சி:—என்ன, என்ன? இன்னொருதரம் சொல்லுங்கள். நாராயணசாமி பிள்ளைக்குக் கொடுப்பதை நானா மறுத்தேன்? நீங்கள் நாராயணசாமி பிள்ளையை நான்கு வருஷ காலம் வேண்டியதையும், அவன் நாலாயிரரூபாய் கொடுத்தாலொழிய பெண் வேண்டாமென்றதையும், பின்னர் அப்பணங்கொடுக்க வழியின்றி விழித்துப் பெரிதான பெண்ணை இனி வை

திருக்கலாகாதென்றும், எவருக்காவது தொலைத்து விடவேண்டுமென்றும் என்னோடு ஆலோசித்தத்தையும் மறந்தீரோ? என் பேச்சைக்கேட்டு நடந்திராவிடில் இன்னுந்தான் நமது மகள் மணமின்றிக்கிடப்பாள். வீணே ஏன் வாய்ப்பந்தல் போடுகிறீர்கள்?

சுந்தரம்பிள்ளை முகஞ் சுருங்கியவராய், "நல்லது, அப்புறமாகட்டும்" என்று மரகதவல்லியோடு சொல்ல, அவள் திரும்பவும் படிக்கலானாள்.

"என்மகனை அழைத்துப்போகத் தங்களிடமிருந்து ஆள்வருவான்என்று இன்றுவரைக்கும் எதிப்பார்த்தும் ஒருவரையும் காணாமையால் என்ன செய்வதென்று நானும் என்மனைவியும் யோசித்தோம். இவ்விரகசியத்தை இவ்வூரிலுள்ள அவர் அறிவாரானால், "தனவான் வீட்டில் பெண்கொண்ட அழகைப் பார்த்தீரா ?" என்று சொல்லி என்னை ஏளனஞ் செய்வார்கள். அவ்வெட்கத்தை யெண்ணி நானே என்மகன் தெய்வசிகாமணியை நாளைப் புகைவண்டியிலேற்றித் தங்களிடமனுப்புகிறேன். அவனை யிரண்டொரு நாள் வைத்திருந்து திரும்பியனுப்பும்போது என் மருமகளையும் அனுப்பக்கோருகிறேன். தன் மருமகளைப் பார்க்கவேண்டுமென்று என் மனைவிக்கு அதிக ஆசையாயிருக்கிறது. கலியாணமாகி எட்டுமாதங்களாக ஒருபெண் தன்தாய் வீட்டிலிருந்தால், அந்தப் பெண்ணைப் பார்க்க எந்த மாமியாருக்குத்தான் இஷ்டமிராது ? இவ்விடத்தில் மழை யென்பதொழிந்தது. சென்ற மாதத்திற்பெய்த சிறுமழையைநம்பி நாற்றுவிட்டவர்களெல்லாம் கீரற்றிற்பிறக்கின்றனர். அகவிலை யேற்றத்தால் குடிகள் அவஸ்தைப்படுகிறார்கள். எம்பெருமானுடைய திருவருளேக்கம் இவ்வாறிருந்தால் யார் என்ன செய்யலாம்? அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை.

இப்படிக்கு,

மார்கழிமீ ௨௰௳. மாணிக்கம்பிள்ளை."

இவ்விதம் வாசித்தானதும், மீனாட்சி மோவாய்க்கட்டையில் வைத்திருந்த சுட்டு விரலை யெடுத்து மீண்டும் கன்னத்திலூன்றி "காலாகாலமாக நடந்துவந்த பொங்கலை வேண்டாமென்று இவ்வருஷம் விட்டுவிட்டீர்களே. மருமகப்பிள்ளை வந்தால் என்னசெய்வது? நாளை மாட்டுப்பொங்கலாவது இடுவோம். இல்லாவிடில் பார்ப்பவர் நமமைப் பரிகாசஞ்செய்வார்கள். நமக்குக் காமாக்ஷியம்மை கிருபையால் எல்லாச் சம்பத்திருந்தும் செய்வதைச் செய்யா தொழியலாமா? (அய்யங்காரை நோக்கி) சுவாமி, இது எப்படியிருக்கிறது?" என்று கேட்டாள். உடனே அவர் மார்பிலிருந்த பூணூலை இடக்கையில் எடுத்து வலக்கைப் பெருவிரலாலுருவிக்கொண்டு "ஆம், அம்மா, நீங்கள் சொல்வது உண்மைதான். உங்களுக்குள்ள குறையென்ன ? நாராயணமூர்த்தி உங்களுக்கு நிறைந்தசெல்வமும், உயர்ந்த உத்தியோகமும் தந்துள்ளார். இத்தகைய சுபகாரியங்களை நால்வர் மதிக்கத் தங்கள் பதவிக்குத் தக்கபடி நடத்தவேண்டும். தங்களுக்குள்ளதெல்லாம் ஒரு பெண்தானே. அப்பெண்ணுக்குச் செய்யவேண்

டிய சிரனைத்தும் என் செய்யலாகாது? திருப்பதி வெங்கடாசலபதி இன்னும் உங்களுக்கு அதிகபாக்கியத்தைத் தரவிருக்கிறார்" எனக் கூறிச் சுந்தரம்பிள்ளை முகநோக்கி, "தாங்கள் வருகிற வருஷத்திற்குள் இச்சில்லாவிலேயே டிப்டி கலெக்டர் உத்தியோகம் பார்க்கப் போகிறீர்" என்றார். சுந்தரம்பிள்ளை வலக்கையால் மீசையை முறுக்கிப் புன்னகை கொண்டு, "அய்யங்காரே, என்னுடைய அபிப்பிராயம் இன்னதென்பதை அறியீர். நான் இப்பொங்கலைத் தடுத்துவிட்டதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது இது வீண்காரியமென்பது. பொங்கலிடுவதும் பொருள் விரயஞ் செய்வதும், பொழுதுபோம் வரையும் பட்டினி கிடப்பதும் துர்வழக்கமன்றோ? இரண்டாவது என் மைத்துனனுடைய இழிந்த நிலைமை. முந்தி நான் கலெக்டர் கச்சேரியில் குமஸ்தாவா யிருந்தபொழுது கலியாணத்தை முடித்துவிட்டேனெனினும், இப்பொழுது தாசில்தாராக இவ்வூருக்கு மாற்றப்பட்ட பிறகு இப்படிப்பட்ட தலைகாய்ந்தவர்களை வரவழைத்து இக்காரியஞ் செய்வதென்றால் எனக்கு நாணத்தை யுண்டாக்குகிறது. பணம் போனாற் போகட்டும். படித்துப் பரீட்சையாவது பண்ணியிருந்தால் நலம். அதுவுமில்லையே! இவ்வூரில் என்னாணைக்கீழ் வாழும் குடிகளும், என்னடி பணியும் குமாஸ்தாக்களும் என்ன நினைப்பார்கள்? சற்று யோசித்துப் பாரும்" என்றார். அய்யங்கார் கையிலிருந்த பூணூலைக் கீழே விட்டுக் குனிந்து, "ஆம், ஆம், மகாப்பிரபு" என்று தலையை யாட்டினார். அப்போது மீனாட்சி, "இஷ்டமானால் தாங்கள் பொங்கற்பண்டிகையை அக்கம்பக்கத்தார் அறியாவண்ணம் இரகசியமாகச் செய்கிறதுதானே. இதைவிட்டு நாம் வழக்கத்தை நீக்கிவிடுவது நீதியோ? செய்வதைச் செய்யாதிருப்பது முறையோ? நான் இந்த எட்டுத் தினங்களாகச் சொல்லியும் தாங்கள் காதிற் போட்டுக் கொள்வதில்லை. போனது போகட்டும். நாளைய தினமாவது பொங்கலிடுவோம். மருமகப்பிள்ளைவந்து சும்மா திரும்பிச்சென்றால் நாட்டுப்புறத்திலுள்ளவர்கள் நம்மைத்தாழ்வாக நினைப்பார்களே. எவ்வளவுதான் உன்னதபதவியை விரும்பினும் அவர்கள் நம்மை ஏளனஞ் செய்வார்களே. இதை யோசியுங்கள். பொழுதுசாயுந்தனையும் பட்டினியிருக்க வேண்டுமென்கிற ஆயாசம் வேண்டாம். எல்லாம் நாளைப் பத்துமணிக்குள் சித்தஞ்செய்கிறேன்" என்று சொல்லித் தன்மகளை யழைத்துக்கொண்டு அந்தப்புரம் போனாள்.

சுந்தரம்பிள்ளை:—என்ன ஓய், அய்யங்காரே! இன்னும் எனக்குத் தாசில்வேலை காயமாகா திருக்க டிப்டிகலெக்டர் அலுவல் கிடைக்குமென்றீரே. அதெப்படி? உமக்குச் சோதிடம் தெரியுமோ?

அய்யங்கார்:—அந்தணனாய்ப் பிறந்த என்னை ஜோசியந் தெரியுமாவென்று கேட்பானேன்? பிரபுவே, தங்களுக்கு இப்போது சுக்கிரமகாதிசை நடக்கிறது. இதுபோக, தங்களுடைய திவ்வியமுகத்தில் திருமகள் விளங்குகிறாள்.

சுந்தரம்பிள்ளை:—அப்படியா? அப்படியா? நான் ஜோசியத்தை நம்புவதில்லை யெனினும் உமது வார்த்தையைப் பொய்யென்றுரையேன்.

இரண்டாமதிகாரம்.

ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்—நீர்த்தநவி
தாழா வுயிர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட,
வாழாதார்க் கில்லைத் தமர்.

நாலடியார்.

மறுநாட்காலை பத்துமணியாயிற்று. சுந்தரம்பிள்ளை வீட்டுத் தெருவாயின் முகப்பிலும் மாங்தோரணங்கள் தொங்கின. தெருத்திண்ணை மெழுகிக் கோலமிட்டிருந்தது. சேவகர்கள் வேலையின்மேல் இங்குமங்குந் திரிந்து கொண்டிருந்தார்கள்.

அவ்வீட்டு மேன்மெத்தையில் கிழக்கு மேற்காக ஒரு கூடமும், ஒரு சிற்றறையுமுண்டு. அறையில் ஆறடியுயரமுள்ள நிலைக்கண்ணாடியும் பஞ்சணை பரப்பிய கட்டிலும் சமைந்திருந்தன. தரையில் சொக்கட்டான் பலகையும் புளியங்கொட்டைகளும், கட்டின்மீது திறந்தபடி நாலைந்து புத்தகங்களும் கிடந்தன. சுவர்மேல் ஒருவீணை தொங்கியது கூடத்தில் இரத்தினக் கம்பளி விரித்து வடசுவரின் மத்தியில் கருங்காலியினாலாகிய ஒரு சிறிய மேசையும் அதன் எதிரில் மெத்தைவைத்துத் தைத்த ஓர் அழகிய நாற்காலியும் போட்டிருந்தன; மேசை மேல் விசித்திர வேலைசெய்த பளிங்குக் கிண்ணத்தில் பூங்கொத்திருந்தது. கீழண்டை ஒரு சோபாவும், மேலண்டை இரண்டு சாய்பு நாற்காலிகளும், தென்னண்டை ஆறு சாதாரண நாற்காலிகளு மிட்டிருந்தன. வடசுவரில் வைத்திருந்த கடிகாரத்தின் இருபக்கங்களிலும் சிற்றாணிகளில் மாட்டியிருந்த இரண்டு பெரிய புகைப்படங்களைத் தவிர, சுவர்களனைத்தும் சான்றவர் மனம்போல வெறுமையாயிருந்தன.

மரகதவல்லி தோளில் செம்பட்டுக்கஞ்சுகமும், இடையில் காசி சரிகைச் சேலையுமணிந்து, வாய் நிறையத் தாம்பூலங் தரித்து மஞ்சத்தின்மீது மேற்கு முகமாகக் குந்தி எதிரிலிருந்த நிலைக் கண்ணாடியில் தன்னுருவத்தைப் பார்ப்பதும், தோளிற் புரண்டு தொங்கிய கூந்தலைக் கோதுவதும், பின்னர் பக்கத்திலுள்ள பலகணி வழியாய் வீதியிற் போவாரை நோக்குவதுமா யிருந்தாள். சில சமயங்களில் தனது கையிற் பிடித்திருந்த பொம்பாய் பட்டுக்குட்டையைக் கன்னத்தில் தேய்த்துப் பிறகு அக்குட்டையை யெடுத்துப் பார்ப்பாள். ஆயினும் அவள் கன்னத்தினழகு கைக்குட்டையிலொட்டி வந்ததோ இல்லை.

தாசில்தார் சுந்தரம்பிள்ளை வாயிற் சுருட்டை வைத்துக்கொண்டு கடிகாரத்தின் மேலண்டை மாட்டியிருந்த படத்தைக் கண்ணுற்ற வண்ணம் உலாவிக்கொண்டிருந்தார். அய்யங்கார் ஒரு நாற்காலியில் கால்களை மடக்கியுட்கார்ந்து, மேலணிந்த காஞ்சீபுரம் பட்டுக்கரை வஸ்திரத்தை இரண்டு கரங்களாலும் சேர்த்துப் பற்றிப்பிள்ளையவர்கள் முகத்தைப்பார்த்துக்கொண்

சிகாமணி தன் குல்லாவைக் கழற்றி அவளிடம் கொடுத்து உள்ளே வைக்கும் படியுரைத்து, அவள்கையிலிருந்த செம்பை வாங்கிக்கொண்டு, கீழ்ப்புறமுள்ள சிறுவாயிலைக்கடந்து தாழ்வாரத்தில் காலலம்பிப்பின் அங்கு வெயிலிற்கிடந்து வாடிய மல்லிகைக்கொடிகளை மெதுவாக நிழலிலெடுத்து வைத்துக்கொண்டிருந்தான். அத்தறுவாயில் மரகதவல்லி தன் நாயகனுடைய பையையெடுத்துப் போய்த்திறந்து பார்க்க அதில் இரண்டு வேஷ்டிகளும், மூன்று புத்தகங்களும், ஒரு பேனுக்கத்தியும், காகிதச்சுருளும் இருந்தன. அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்து மீண்டும் வைத்துக் கைகொட்டிச் சிரித்தாள். தெய்வசிகாமணி சற்றுப்பொறுத்துக் கூடத்து வழியேவந்து மேலண்டை அறையுட்புக, உள்ளே யிருந்த மரகதவல்லி வெளியிலோடினாள். தெய்வசிகாமணி, "பெண்ணே, பெண்ணே" என்று இருதரங் கூவியும் அவள் திரும்பிப்பாராததால் அவ்வறையில் திறந்துகிடந்த தன் பையை மூடி ஓர் மூலையில் வைத்து அவண் விரித்த வாறிருந்த புத்தகமொன்றை யெடுத்துக் கட்டிலிற் படுத்துப் படித்துக்கொண்டிருந்தான்.

பின்னர், கறுத்த மேனியும் பருத்த தேகமுமுள்ள ஒருவன் மேலே வந்ததுகண்டு, சுந்தரம்பிள்ளை தலைநிமிர்த்தி "அடா முனியா! இன்னும் என் சமையலாகவில்லை? நான் இன்றுகாலை காபியுங் குடிக்கவில்லையே. மீனாட்சி என்னசெய்கிறாள்? மணி பதினொன்றாகியும் இன்னும் பொங்கலிடுகிறாளோ?" என்று கடினமாகப் பேசினார். முனியன் கைகால் நடுங்கியவண்ணம் "ஐயா, எல்லாம் தயாராயிருக்கிறது. நாங்கள் எவ்வளவோ அவசரமாகச் செய்தும் இந்நேரமாய்விட்டது. குளிக்கவாருங்கள்" என்று சொல்லிப் பின்பு மேலண்டை அறையுட்புகுந்து மாப்பிள்ளையை யழைத்தான். மாப்பிள்ளையும் மாமனாரும் ஸ்நானஞ்செய்யச் சென்றார்கள். அய்யங்கார் தாம்போய் வருவதாகப் புகன்று தமதில்லம் போயினர்.

ஸ்நானமாடித் தெய்வசிகாமணி பிள்ளை நெற்றியில் விபூதியுடன் சந்தனப் பொட்டிட்டான். சுந்தரம்பிள்ளை சாந்துப்பொட்டணிந்தார். இருவரும் கூடி உட்கட்டிற்புக, அங்குள்ள சிறு முற்றத்தில் மண்ணடுப்பியற்றி அதன் மேல் மூன்று மட்பானைகள் வைத்திருந்தன. மீனாட்சி அடுப்பனலினால் நெற்றியில் வியர்வை யெழ, அவ்வியர்வையை அடிக்கடி தன் பட்டுப் புடவையில் துடைப்பதும், துடுப்பினால் பானையைத் துழவுவதுமாயிருந்தாள். உச்சித் தலைமயிர் கொட்டுண்டு பின் தலையில் மட்டும் சிறிது வெள்ளை மயிரையுடைய ஒரு பெரியவர், மூக்கிற் கண்ணாடியணிந்து பொங்கற் பானையைப் பார்த்த வண்ணமிருந்தார். தெய்வசிகாமணி வந்ததும் பெரியவர் கவனமாகப்பார்த்து கண்ணாடியைக் கழற்றித் துணியில் துடைத்து மாட்டிக்கொண்டு, "அப்பா தெய்வசிகாமணி! ஊரில் தந்தை முதலியோர் சுகந்தானா? நீ வந்தது தெரிந்தும் காலில் பலமின்றி நான் மெத்தைமேல் வந்து உன்னைக்காணத் தவறினேன்; நான் மிகவும் தள்ளாதவனானேன்" என்று பிரியமாகச் சொன்னார். தெய்வசிகாமணி, "தாதா, தங்கள் ஆசீர்வாதத்தினால், எல்லோரும் க்ஷேமந்தான்" என்று பதிலளித்தான். உடனே பானையிலிருந்த அரிசி கொதிவந்து

பொங்கியதுகண்டு மீனாட்சி "பொங்கலோ பொங்கல்!" என்றாள். பெரியவரும், பக்கத்தில் அடுப்பெரிய விட்டுக்கொண்டிருந்த ஒரு சேவகனும், வேலைக்காரியும், "பொங்கலோ, பொங்கல்!" என்று கூவினார்கள். மரகதவல்லி கையிற் கண்ணாடியுடன் ஒரு தூணை யணைந்து சிரித்துக்கொண்டிருந்தாள். தாசில்தார், "மீனாட்சி, எனக்குப் பசியெடுக்கிறது. இன்னும் எவ்வளவுநேரம் சும்மா விருப்பது? வாரந்தோறும் இரண்டுநாள் விரதமிருந்து கன்னங் குழிந்த உன்னைப்போல நானும் சுருங்க வேண்டுமோ?" என்று சொல்லி அவசரப் படுத்தினார்.

மூன்றாமதிகாரம்.

புக்குவேட் டகத்தினி லுண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடியென் றுரைக்கும் வையமே. நைடதம்.

இப்போது சுவாமிக்குப்படைத்து வீட்டிலுள்ளோர் சாப்பிட்டாயிற்று; பொழுதும் போயிற்று. முனியன் மெத்தைக்கூடத்திலுப்பண் தொங்கிக்கொண்டிருந்த கண்ணாடி விளக்கை யேற்றிச் சென்றான். அவ்விளக்கு இருளைத் துரத்தும் சூரியனை யொத்து எங்கும் பிரகாசித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மெலிந்த தேகத்தையும், வளைந்த முதுகையுமுடைய ஒருவன் வந்து கூடத்தினடுவில் காலைச் சப்பளமிட்டு உட்கார்ந்தான். அவன் உட்காரவும், நாராயணி மேலண்டை யறையில் மாட்டியிருந்த வீணையை யெடுத்து வந்து அவன்முன் வைத்துப்போனாள். உடனே மரகதவல்லி கையிலொரு புத்தகமேந்தி வந்து அவன் எதிரிற் குந்தி வீணையை மீட்டி, "காமத்தாலே," "கூடடா என்சாமி," "ஆசைக் கண்ணாளனே" என்னும் பதங்களைப்பாடினாள். இடையிடையில் உபாத்தியாயரைப் பார்த்துப் பரிகசிப்பதும், சிரிப்பதுமா யிருந்தாள். உபாத்தியாயர் அரைமணி நேரமிருந்து வீடுபோன பிறகு யாரோ ஒருவர்த்தகன் பொங்கலுக்காக வைரமிழைத்த ஓர் மோதிரம் வைத்துச் சுந்தரம் பிள்ளையைக் கண்டான். அதை மரகதவல்லி கண்ணுற்றதும் ஓடித் தந்தையிடமிருந்து பிடுங்கித் தன் விரலிலணிந்து, "என் கைக்கு நன்றாயிருக்கின்றது இது" என்று குதிக்க, தாசில்தார் சினந்து, "இவ்விதங் கழுதைபோல் குதிப்பதற்கு நீ இன்னுஞ் சிறு பெண்ணன்றே. உள்ளேபோ" என்றனர். உடனே அவள் ஒன்றும் பேசாமல் முகத்தைச் சுளித்து ஓரறையிற்போய்ப்படுத்துக்கொண்டாள். அன்றிரா ஆடவர் சாப்பிட்டானதும் நாராயணி அவளை உண்ணுதற்கழைக்க அவள், "சப்பைமூக்கி, உதட்டுச்சூடு ஞாபகமிருக்கட்டும்" என்று உதைத்தோட்டினாள். அவள் அன்னை பலகால் வேண்டியும் கண்ணைத் திறந்திலள். பின்பு அவள் தந்தை அவள் கோபத்திற்குக் காரணம்தாமென் றுணர்ந்து அருகிற்சென்று, "அம்மா, அம்மா" என்று வருந்தியழைத்தார். எவ்வளவுதான் சொல்லியும் அவள் எழுந்திராமையினால் தாம் வெகுமதியாகப்பெற்ற வைரமோதிரத்தை அவள் கையிலணிந்து இதம் பேசவும், அவள் மெதுவாகக் கண்ணைத்திறந்தாள். அவள் கண்ணிற் காணப்

பட்ட நீர்த்துளிகளைத் துடைத்துத் தாய் ஒரு பக்கமும், தந்தை யொருபக்கமுமாகத் தூக்கி யுட்காரவைத்தார்கள். பின்னர் அவள் மெல்ல எழுந்திருந்து சாப்பிடச்சென்றாள்.

தெய்வசிகாமணி தன் மனைவி சங்கதியினால் மாமனார் மரியாதை செய்யாததையு மறந்து மனம்வருந்தி, மெத்தை மேலறையிலிருந்த கட்டிலில் கீழ்முகமாகக் காலை நீட்டி யுட்கார்ந்து, தன் மனையாள் படுக்கைக்கு வரும் சமயத்தை எதிர்நோக்கினான். அறையில் மெழுகுவர்த்தி எரிந்துகொண்டிருந்தது. வெகு நேரம்பார்த்தும் மரகதவல்லியைக் காணாமையால் அவனுக்குச் சிறிது கோபமுமுண்டாயிற்று. கொஞ்சநேரம் மஞ்சத்தின் மேற்கிடந்த தமிழ்ப் புத்தகங்களை ஒவ்வொன்றாகத் தள்ளுவான்; கொஞ்சநேரம் சொக்கட்டான் பலகையை யெடுத்துத் திருப்பித்திருப்பிப் பார்ப்பான்; கொஞ்சநேரம் கதவினோரத்தில் நின்றுகொண்டு ஏதோ குழறுவான். ஆனால் ஒன்றிலும் அவன்மனஞ் சென்றிலது.

வீதியிற் பேரிரைச்சல் கேட்டு, மாட்டுப் பொங்கலாதலால் ஜனங்கள் காளியம்மனுக்குப் பொங்கலிட்டு வருகிறார்களோ என்றையுற்றுப் பலகணியருகிற்போக, மாடுகள் நெற்றியில் நாமத்தைத் தரித்துத் தாமரை, அல்லியாதிய பூக்களைக் கொம்பிற் சூடிக் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் கலகலவென் றிசைத்தவண்ணம் ஓடிவந்தன. பின்னால் செந்நிறத்தை யுடைய நீண்ட தடிகளுடன் ஆண்பிள்ளைகள் வந்தனர். அவர்கள் பின் சிறிது தூரத்தில் சிலர் நாகசுரம், கர்ணா, பேரி, தவுல், தாளம் முதலியவை வாசித்தும், பலர் துணியான் மூடிய பெரிய மூங்கிற் கூடைகளைச் சுமந்தும், அவர்களுக்கப்பால் அநேகர் தலையில் உருமாலை தரித்தும், கையிற் பிரம்பூன்றியும் வந்துகொண்டிருந்தார்கள். தெய்வசிகாமணி சின்னேரம் இவ்வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் தன்னறைக்குள் நுழையும் சந்தடிகேட்டு, "பெண்ணே, மரகதம்! மரகதம்! ஏது இவ்வளவு நேரம்? உனக்காகக் காத்துக்காத்துக் கண்ணும் நோகின்றதே" என்று சொல்லித் திரும்பினான். தாம்பூலம் நிறைந்த ஒரு வெள்ளித்தட்டையும், பனிநீர்ச் செம்பையும் கையிற்றாங்கிக்கொண்டு வேலைக்காரி வந்தாள் தெய்வசிகாமணி, "ஓகோ! நீயா நாராயணி? நமது மரகதவல்லி யென்றெண்ணினேன். நல்லது, தட்டையும் செம்பையும் கட்டிலின்மேல்வை. மரகதம் இன்னும் என்ன செய்கிறாள்? மணிகிட்டத்தட்ட பத்தரையாகின்றதே. மரகதத்தைச் சீக்கிரம் வரச்சொல்வாயா?" என்ன, அவள் "ஆகட்டும்" என்று திரும்பிப்போனாள்.

பின்னர் மரகதவல்லி அழகிய ஆடை அணிகளணிந்து படுக்கையறைக்கு வரும்போது; மணி பதினொன்றடித்துப் பதினைந்து நிமிஷமிருக்கலாம். அவளுடைய சரிகைச்சேலையையும், பட்டு இரவிக்கையையும், விலையற்ற நகைகளையுங் கண்ணுற்று ஏழைத் தெய்வசிகாமணி ஏதோ எண்ணிப் பின்வாங்கினான். ஆனால் மறு நிமிஷத்திற்கெல்லாம் அவ்வெண்ணம் பறந்தது. எவ்வளவு தான் உயர்ந்தவளாயினும், மரகதவல்லி அவனுடைய மனைவி தானே. ஆகவே அவன் அவளுடைய கையைப்பற்றிக் கட்டிலி லுட்கார

வைத்துத் தான் பக்கத்திற்குந்தி, "பெண்ணே! உன்னைப்பார்த்துச்சுமார் எட்டுமாதமாயும் உனக்கு இரக்கம் வரவில்லையோ? நான் உண்டு இவ்வறைக்கு வந்ததுமுதல் எப்போது வருவாயென்று எட்டியெட்டிப்பார்த்து என்க்ண் வலிப்பதுடன் கழுத்தும் நோகிறது. மாமனார் வீடுவந்த என்னை உன் தந்தை மரியாதை செய்யாவிடினும், என் மனைவியாகிய நீயும் அலட்சியஞ் செய்வது தகுதியோ? இது போகட்டும். இன்று உங்கள் வீட்டில் நடந்தவனைத்தும் எனக்கு அருவருப்பைத்தந்தது. அதனோடு உன் செய்கை எனக்குத் துக்கத்தை மூட்டியது. பதினைந்து வயது பாலிகையாயும் நீ பசுங்குழந்தைபோலும் நடக்கின்றனை. நீ அழுவதும்-சிரிப்பதும், படிப்பதும்-பாடுவதும், பரிகசிப்பதும்-விளையாடுவதும், எனக்குத் துக்கத்தோடு வெட்கத்தையுந் தருகின்றது. இதோ இப்புத்தகங்களைப்பார். இவ்விந்திரசபாவும், இம்மதுரைவீரன் நாடகமும், அக்கூளப்ப நாயகன் காதலும் பாவையர் படிக்கத்தக்க நூல்களோ?" என்று சொல்லுகையில் மரகதவல்லி, கையைத்திமிறி முகத்தைத் திருப்பிக்கொண்டாள். தெய்வசிகாமணி பின்னும், "மரகதம், பெண்ணாய்ப்பிறந்து ஏழைக்கு வாழ்க்கைப்பட்ட உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? பெண்ணுக்குரிய குணங்களி லொன்றேனும் உன்னிடமிலது; குடித்தனஞ் செய்யுமுறையும், மனைவிக்குரிய கடமையும் இன்னதென்றறியாய். புருஷனிடத்துப் பத்தியும், பெற்றோர்பால் அன்பும், அயலார்வயின் வணக்கமு மொழிந்தாய். உன்னை வெறுப்பதிற் பயனில்லை. எல்லாப்பிழையும் உன் பிதாவைப்பொருந்தியது இன்னும் சிறிதுகாலம் நீ இங்கேயேயிருப்பாயானால், ஒன்றுக்கும் உதவாதவளாவா யென்பதி லையமில்லை. நான் சமயத்தில் வந்து சேர்ந்ததற்காகச் சந்தோஷப்படுகின்றேன். பெண்ணே, இதோ இப்புத்தகத்தில் (தன் பையிலிருந்து ஒரு புத்தகத்தை யெடுத்து) குடித்தனஞ்செய்ய முறைமைகளும், பெண்டிர்க்குரிய கடமைகளும் செவ்வையாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. தினந்தோறும் நீ இதைப் படித்துவர வேண்டும்" என்று சொல்லிக்கொடுக்க, அவள் அதை வாங்காமல் மஞ்சத்திற் கவிழ்ந்து படுத்தாள். தெய்வசிகாமணி அவளுடைய முகத்தைத்திருப்பி, "நான் சொல்வதென்ன? நீ படுப்பதென்ன? இதுதானோ இதுகாறும் உன் தந்தையார் உனக்கு வீட்டில் கற்பித்தது? உன்னை நான் ஒருபொழுதும் இவ்விட மிருக்கவிடேன். நாளைக்கு என்னோடு உன் மாமியாரில்லம் போகத் தயாராகவேண்டும்" என்ன, அவள் கண்களைக் கையால் மூடித் தேம்பியழத் தலைப்பட்டனள். தெய்வசிகாமணி திரும்பவுஞ் சினங்கொண்டு, "உனக்கு வெட்கமில்லையோ? பதினைந்து வயது தடிப்பெண்ணாகிய உனக்கு அழுகையென்னகேடு? அப்படி யழுவதற்கு நான் என்னசெய்தேன்?" என்று சொல்லியும் அவள் பின்னும் கண்ணீர் பெருக்கினாள். சிரிப்பை யுண்டாக்கவல்ல நயவார்த்தைகள் பலபுரிந்தும் அவள் கேட்டிலள். "பெண்ணே, நீ அழுவது நன்றன்று. உன்னைப் பெற்றவர்கள் நீ அழுவதைக்கேட்டால் நான் உன்னையடிப்பதாக எண்ணுவார்களே! வேண்டாம். இந்நூல் வெகு நன்றாயிருக்கும்; நான் வாசிக்கிறேன் கேள்" என்று மீண்டும் பிரியமாகப் பேசிப் பார்த்தான். அப்போதும் அவள் ஓய்ந்திலள்.

இவ்வுலகில் இதமொழிக்கிணங்குபவர் சிலருளர்; அடியொன்றிற்கே யடங்குபவர் சிலருளர். இவற்றுள் மரகதவல்லி யிரண்டாமினத்தைச் சேர்ந்தவள். எவ்வளவு சொல்லியும் கேளாமையால் தெய்வசிகாமணி கோபாவேசங்கொண்டு வலக்கையாலோங்கி அவள் முதுகில் அறைந்தான். அவ்வறை பட்டவுடனே மரகதவல்லி வீறிட்டெழுந்து, "கொல்லு, கொல்லு காலிற் செருப்புக்கும், தலையிற் குடைக்கும் வழியற்ற உனக்கு இவ்வளவு ஆணவமா? இதோ என் தந்தையிடம் போகிறேன். உன் ஆணவத்தை அறிகிறேன்." என்று கூவிச் சென்றாள். அவள் பிரிந்ததும் தெய்வசிகாமணி கதவை மூடியுள் தாளிட்டு மெத்தைமேற்படுத்துப் பலவாறு சிந்திக்கலானான்.

அடுத்த நாள் அவனிடம் மாமனார் வார்த்தையாடிலர்; மாமியாருக்கு மனத்தி லிஷ்டமிருப்பினும் வெட்கத்தால் மௌனமாயிருந்தாள். அவன் மெத்தையிலிருந்தால் அய்யங்காரும், கீழிறங்கினால் பெரியவருமே ஏதாவது பேசுவார்கள். மாமனார் பார்க்கும் போதெல்லாம் முகத்தைச் சுருக்கித் தம்மிடமுள்ள சேவகர்களிடத்தும் கையெழுத்திற்குவரும் குமஸ்தாக்களிடத்தும் கோபித்து வாயில் வந்தபடி திட்டுவார். அவர்கள் எதிரில் பயந்து பேசுவதையும், பின்னால் மறைந்து ஏசுவதையும் தெய்வசிகாமணி அறிந்து: மாமனாரிடத்தில் உத்தியோகம் சதமன்றென்றும், எவரிடத்தும் அன்பாயிருப்பதழகென்றும் கூறினான். சுந்தரம்பிள்ளை அதைப் பொருள் செய்யாமல் பின்னும் அவர்கள்மேற் கோபிக்கலாயினார்.

அன்று மாலை நான்கு மணிக்கு அவன் தன்பையை யெடுத்துக்கொண்டு கீழ்கூடத்தில் இரத்தினக் கம்பளிமேற் குந்தித் தாம்பூலந் தரித்துக்கொண்டிருந்த தாசில்தாரிடம் போய்த் தானுமுட்கார்ந்து, "மாமா, நான் ஊருக்குப் போய்வருகிறேன். உத்தரவு தரவேண்டும். என் மனையாட்டியையும் கூட அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான். சுந்தரம்பிள்ளை அதைக் கவனியாதவர்போல அங்குக்கிடந்த ஓர் புத்தகத்தை யீர்த்து ஏடுகளைத் தள்ளிக்கொண்டிருந்தார். தெய்வசிகாமணி மறுபடியும், "மாமா, இதுவரையும் எனக்குச்செய்த அவமரியாதை சாலுமே. மருமகனென்னும் தோஷத்திற்காவது தலை நிமிர்ந்து என் பேச்சைக் கேளீரோ? நான் ஏழைக்குடியிற் பிறந்தவனெனினும், தாழ்ந்த கல்வியுடையவனெனினும் என்னைப் பார்க்கீரோ? தங்கள் மகளை மணந்தவனன்றோ? என் மனைவியை என்னுடன் அனுப்பவேண்டும்" என்றான். சிறிதுநேரமாயும் பதில் வராமையால், தாசில்தாருடைய தந்தையார் மூக்கிலிருந்த கண்ணாடியை நெற்றியில் தள்ளி தலை நிமிர்ந்து, "அப்பா, சுந்தரம், மாப்பிள்ளை ஏதோ சொல்லுகிறானே. மகளை அனுப்புகிறதுதானே. என்றைக்கேனும் பெண்ணானவள் புருஷன் சுதந்தரமன்றிப் பெற்றவர் சுதந்தரமன்றே. வயதாகிய பெண்ணை நாம் வைத்திருப்பது நல்லதல்ல. எத்தனைமுறை சொல்லியும் கிழவன் பேச்சை நீ கேட்பதில்லை" என்றார். உடனே அய்யங்கார் இடுப்பிலிருந்த சிமிழையெடுத்துத் திறந்து ஒரு சிட்டிகைத்தூளெடுத்து மூக்கிலுறிந்து, மற்றொரு சிட்டிகைத் தூளைக் கையிற்பற்றி, "ஆமாம். பெண்ணை அனுப்பவேண்டியது கிரமந்தான்.

பெற்றவர் வீட்டில் பெருஞ்செல்வ மிருப்பினும், பெண்களுக்குப் புருஷர் வீடே சதம்” என நவின்று அங்கிருந்த பெரியவரையும், சுந்தரம்பிள்ளையையும், தெய்வசிகாமணியையும் ஒவ்வொருவராகப் பார்த்தார்.

சுந்தரம்பிள்ளை, “அய்யங்காரே, நீர் உண்மையை யுள்ளபடி யறியீர். மரகதவல்லியை நாங்கள் கண்ணுக்குக் கண்ணாகவும், உயிருக்கு உயிராகவும் எவ்வளவோ செல்வமாக வளர்த்தோம். இவற்றோடு படிக்கவும், பாடவும், வீணை வாசிக்கவும் கற்றுக்கொடுத்தோம்” என்று கூறியதை, வேலைக்காரர்களுக்குப் பொங்கற்சோறு போடுவதில் தலையிட்டு இந்தண்டை அந்தண்டை நடந்துகொண்டிருந்த மீனாட்சி கேட்டு, “மேலும் இவள் சின்னஞ் சிறியவள். வீட்டுவேலையைச் செய்தறியாள்; கஷ்டமென்பதை அநுபவித்துணராள். இவ்வாறுள்ள என் புதல்வியை எப்படிக் கனுப்புவேன்?” என்றாள்.

அய்யங்கார்:—ஆம். ஆம். (என்று தலையை யாட்டுதல்.)

தெய்வ:—என்னுடைய ஏழ்மைத்தனத்தைத் தெரிந்திருந்தும் எனக்கேன் உங்கள் செல்வமகளைத் தரவேண்டும்? மணமான பெண்ணை மாமி வீட்டிற்கனுப்புவதில்லை யென்பது சரியன்றே.

மீனாட்சி:—என் மகளுக்குக் காலையில் காப்பியும், மாலையில் தேத்தண்ணீரும் வேண்டுமே. படுக்கப் பஞ்சணையும், உட்கார நாற்காலியும் வேண்டுமே. நினைத்தபோதெல்லாம் பலவித பலகாரங்களும், பழவர்க்கங்களும் அக்குப்பைக்காட்டில் எங்கிருந்து கிடைக்கும்? மற்ற ஏழைச் சிறுமியர்போல என் மகள் மாமியார் மனையில் வாழ்வதென்றால் என் மனந் தாங்காது.

தெய்வ:—ஆம். அக்குப்பத்தில் இவைகளெல்லாம் கிடையாவே. ஆனால் புருஷரோடு கூடிச் சுகமுந் துக்கமும் அநுபவிப்பது பூவையர் கடமையன்றோ? புருஷர் கஷ்டப்படவும் பூவையர் தாய்வீட்டில் சுகமாய்க் காலந்தள்ளுதல் நீதியோ? மாமி, நீங்களாவது என் பட்சமாகப்பேசுவீரென் றெண்ணினேன். என்போல நாட்டுப்புறத்தில் ஏழைக்குடும்பத்திற் பிறந்த நீங்களும் இவ்விதம் சொல்வது அழகோ?

பெரியவர்:—ஆமாம். மீனாட்சி, மாப்பிள்ளை யுரைப்பது ஞாயந்தான். மரகதவல்லியை யனுப்புங்கள். நமக்கிஷ்டமானபோது, திரும்பவும் அழைத்துவரலாம். ‘வாழ்கிறபெண்ணைத் தாயார் கெடுத்தாள்’ என்னும் அபவாதம் வேண்டாம்.

மீனாட்சி, “சரிதான். எனக்கேன் அச்சங்கடம்? மாமனுருண்டு, மருமகனுண்டு” என்றுசொல்லி வெளியிற்போனாள்.

சுந்தரம்:—உமக்கென்னதெரியும்? போம். போம். இராத்திரி நடந்த சங்கதி தெரியுமோ? உமது பேச்சைக்கேட்டு நான் அனுப்புவேனானால் நகத்தில் அழுக்குப்பட்டறியாத என் மகள் அடிபட்டுச் சாகவேண்டியதுதான். நமது வீட்டிலேயே நேற்றிரா ஏதோ வேலைசெய்யவில்லையென்று அடித்தபோது தனியே என்ன நடக்குமென்பதைக் கேட்கவேண்டுமோ? நீர் என்ன சொல்லியும் நான் அனுப்பப்போவதில்லை. இஷ்டமிருந்தால் மாப்பிள்ளை என் வீட்டிலேயே யிருக்கட்டும்.

தெய்வ:—(சிரித்து) பளா, பளா ! நன்றயிருக்கிறது. பழையகதை மறு படியுங் கிளம்பியதோ ? என்னைப் பெற்ற தாய் தந்தையரையும், மற்றச் சுற்றத்தாரையும் விட்டுத் தங்கள் வீட்டில் மானமிழந்து கையேந்திக் காலங் கழிக்க ஒருபோதும் ஒப்பேனெனக் கலியாண நாளன்று சொல்லியும், பிறகு பன்முறை கடிதமூலமாகத் தெரிவித்தும் திரும்பவுங் கேட்பது சரியல்ல. உங்கள் வீட்டிலிருப்பதும், நான் ஊரில் இரப்பதும் ஒன்றுதான். தங்க ளுடைய உதவியின்றிக் குடித்தனஞ்செய்ய என்னாலியலும். எனக்கு நேர மாகிறது. பெண்ணை யனுப்பும் பெண்சாதியிருக்கவேண்டியது புருஷனிட த்திலன்றோ?

சுந்தரம்:—(அந்நியர் யாராவது உற்றுக்கேட்கின்றரோ என்றையுற்றுச் சுற்று முற்றும்பார்த்து ஒருவருமில்லாததுகண்டு) புருஷனிடத்தில் பெண் சாதியிருக்கவேண்டு மென்னு நீதி எனக்குத்தெரியும். ஆனல் உன் மனைவி யை வைத்துப்படைக்க உனக்கு வழியிருக்கிறதா ?

தெய்வ:—மாமா, என்னை அவ்வளவு தாழ்த்திப் பேசவேண்டாம். நான் தங்களுடைய குமஸ்தாக்களில் ஒருவனல்லன். எப்படியேனும் தங் களுக்கு மருமகனேயாதலால், மருமகனுக்குரிய மரியாதை சிறிது வையுங் கள். ஏன் பன்னிப் பன்னிப் பலவாறு பேசவேண்டும் ? இதோ நான் ஊருக் குப்போக ஆயத்தமாயிருக்கின்றேன். என்மனைவியை யனுப்புகிறீரா? இல்லையா ?

சுந்தரம்:—பொறு, அப்பா, பொறு. வெறியனைப்போலும் பிதற்ற வேண்டாம்.

தெய்வ:—பணமென்னும் நோயினாற் கண் மறைந்த தங்களுக்கு மரு மகன் வெறியனகத்தான் தோன்றுவான். நல்லது, அதிகம் பேசாதீர். எதற்கும் ஒரு வரம்புண்டு. அவ்வரம்பு மீறினல் மரியாதை கெடும்.

அய்யங்கார்:—தம்பி, கோபம்வேண்டாம். மாமனர் பேச்சைக்கேள். அவர் உமக்குப் பெரியவர்.

தெய்வ:—பெரியவரென்றெண்ணியே நான் இது வரையும் தாழ்மை யாய்ப்பேசினேன். அவர் என்தாழ்மையையும், ஏழ்மையையுங் கருதி என்னை வெறியனென்றர். நான் வந்தது தொடங்கி அவர் எனக்குக்காட்டிய மரி யாதையைத் தாங்கள் அறிவீர். தங்கள் மருமகனுக்குத் தாங்கள் செய்யும் உபசாரமும் இவ்வாறுதானே ?

சுந்தரம்:—(முகத்தைச் சுளித்து) நான் பெண்ணையனுப்புவதில்லை. போ, போ.

தெய்வ:—அனுப்புவதில்லையா ? இதோ தங்களுக்கு வேண்டிய அய்யங் கார் இருக்கிறர். அதோ தங்களைப்பெற்ற தந்தையாருள்ளார். அவர்களறி யச் சொல்லுங்கள்.

சுந்தரம்:—ஆம். அனுப்புவதில்லை. மச்சுவீட்டில் வாழ்ந்த என் மகள் குச்சுவீட்டில் வாழமுடியாது.

தெய்வசிகாமணி:—"ஐயா, அப்படியாயின் உங்கள் குமாரத்தியை மச்சு வீட்டிலேயே வைத்துக்கொள்ளுங்கள். ஏதோ கடவுள் கடாட்சத்தால் நானும் மச்சுவீட்டிலிருக்க காலம்வந்தபோது அனுப்பலாம். ஆனல் இவ் வெழ்மை நிலையிலுள்ளவரையும் நான் இனித் திரும்பவும் இம்மனையில் அடி வையேனென்றறியுங்கள். இதோ போகின்றேன். உங்களனைவர்க்கும் வந்தனம்" என்று கோபமாகச் சொல்லி யெழுந்து கையிலிருந்த பையோடு திரும்பிப்பாராமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். பொங்கலுக்குப்பெற்ற சரிகை வஸ்திரங்களிரண்டும் அப்படியே கிடந்தன; மாமனர் புதிதாக வாங்கிக்கொடுத்த சோடும், குடையும் அவன் எடுத்துப்போகவில்லை.

நான்கா மதிகாரம்.

அல்லற்பட் டாற்ற தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. குறள்.

தெய்வசிகாமணி வேலூரை விட்டுப்போனதாக நாம் மேலே கூறினேம். ஆயினும் போனவிடம் இன்னதென்றறியோம். இரண்டு நாள் கழித்துத் தன்மகனையும், மருகியையும் விரைவில் அனுப்பும்படி அவன் தந்தையிடமிருந்து சுந்தரம்பிள்ளைக்கு வந்த கடிதத்தால் அவன் சீனிவாசபுரத்திற்கும் செல்லவில்லை யென்பது தெளிவாகின்றது.

சுந்தரம்பிள்ளை தம்மருகன் கோபித்துச் சென்றதைச் சிறிதும் பொருள் செய்திலர். தம்மரியாதையை மறந்து அய்யங்கார் எதிரில் தம்மை அவன் தாழ்த்திப் பேசியதைக்குறித்து மனநொந்தார். மனையாள் ஏதோ சிறிது வருத்தப்பட்டா ளெனினும், மாமிவீடுபோவதால் தன் மகளுடைய செல்வம் சீரழியுமென்பதை யெண்ணி அவ்வருத்தம் நீங்கினள். அன்று பகலெல்லாம் மெத்தைமேற் சொக்கட்டானடிக்கொண்டிருந்த மரகதவல்லியோ, கணவன் போனதையறிந்து களிப்புற்றாள். உண்மையில் உள்ளம் மாழ்கினவர் பெரியவரொருவரே. அவர் தமது வாணளில் நெடுநாள் சிறுமையை யடைந்தவர்; பல கஷ்டங்களை நுகர்ந்தவர்; செல்வ நிலையாமையை யோர்ந்தவர். ஆகவே தங்குமாரனகிய சுந்தரம்பிள்ளை தாம் தாசீல்தாரென் றகம்பாவங்கொண்டு மாப்பிள்ளைக்கு மரியாதை செய்யா தொழிந்ததும், மனநோவ மொழிந்ததும் அவர்க்குச் சம்மதமாகுமோ?

சுந்தரம்பிள்ளை பி. ஏ., பரீக்ஷை தந்தவர். ஆனல் பரீக்ஷைதந்த நாளே தம் படிப்பை யொழித்தார்; புத்தகமென்பதைக் கையிலேந்தியு மறியார். கடிதங்களை மிகப் பிழைபட எழுதுவார்;

சாதாரண விஷயங்களையும் தவருய்ப்பேசுவார். தாம் எழுதும் கச்சேரிக் கடிதங்களில் தம் பேருடன் பி. ஏ, என்னும் சொற்களிரண்டினைத்தவிராது சேர்த்தும், கல்வியில் தமக்கிணையாவார் யாருமில்லையென்று கண்டவரிடமெல்லாம் சொல்லியும் அவர் படித்தவரென்று அந்நியர் நம்பும்படி செய்

வார். ஆயினும் அவர் குடிகளும் குமஸ்தாக்களும் அவர் திறமையைப் பேசிச் சிரிப்பார்கள்.

இவ்விதம் அவர் கல்வியிலேனும் வேலையிலேனும் சிறந்தவரல்லரெனினும் தந்திரத்தில் தேர்ந்தவர். சிரஸ்தேதார், டிப்டி கலெக்டர் முதலியோரை எளிதில் கைவசஞ்செய்ய வல்லவர். ஆதியில் முப்பது ரூபாய் குமாஸ்தாவாயிருந்த அவர் இரண்டு வருஷத்தில் நூற்றெழுபத்தைந்து ரூபாய் தாசில்தாரானது அத்தந்திரத்தின் முடிவேயாம். தாசில்வேலை கிடைத்ததும் தமது பழைய நிலைமையை முற்றுமறந்து தாம் வேலூரைப் புரக்கும் வேந்தனென எண்ணி இறுமாப்புற்று நடக்கலானார்.

தாம் கச்சேரிக்குச் செல்வதைவிட்டுக் குமஸ்தாக்கள் தம் வீட்டிற்கு வந்து வேலைசெய்யும்படி கட்டளையிட்டார். மாதம் பதினைந்துரூபாய் பெறும் ஏழைக் குமஸ்தாக்கள் தினந்தோறும் காலை ஏழுமணி முதல் இரவு பத்துமணி வரையில் கைநோக, கண்வலிக்க வேலைசெய்து தங்கள் மனைக்குச்செல்வார்கள். சேவகர்களெல்லாம் இராப்பகல் அவர் வீட்டிலேயேயிருப்பார்கள். காலையில் அவர் கால்வாய்க்குப் போவதாயிருப்பினும் இரண்டு சேவகர் பின்தொடரவேண்டும். கச்சேரிக்குப்போக நேரிடின் முன்னேயிருவர் எச்சரிக்கைசெய்தும், பின்னேயிருவர் காகிதப்பெட்டி சுமந்தும், பக்கத்திலொருவன் குடைபிடித்தும் போகவேண்டும். தாசில்தார் கீழேபார்த்தால் தங்கனத்திற்குக் குறைவாமென்றுன்னி ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு தாமணிந்த திரிசிராப்பள்ளி சோடுகளிரண்டும் குதிகாலில் அடித்துத் தொனிசெய்யுமாறு நடப்பார். வண்டிக்காரர்கள் வழியிற் சந்தித்தால் தாசில்தாருக்குப் பயந்து வண்டிகளைத் திருப்பியோட்டிச் செல்வார்கள். ஜனங்கள் வீதிமுழுதும் அவருடையதென் றெண்ணிக் கூசி நடப்பார்களேயன்றித் தமக்குங் கொஞ்சம் சொந்தமிருப்பதாக வீசிநடவார்கள். அவர் பார்வை சிங்கப்பார்வையென்று சொல்லலாம். வீட்டில் தம் மனைவி மகளாகிய இருவர்தவிர மற்றையரிடம் அவர் பேசுங்காலைப் புருவத்தை நெரித்துத் தலையைச் சாய்த்துப்பேசுவார். சிரித்தலென்பது அவரிடங் கிடையாது. ஆனால் தம்மின் மிக்கோரான டிப்டி கலெக்டர், அசிஸ்டண்டு கலெக்டர் முதலிய அதிகாரிகளைப் பார்த்தாலோ தலைதாழ்த்தி வணங்கி அவர்கள் வேண்டும் பணியாவும் தாமே செய்வார். அவர்கள் அவரை அடுத்துட்காரச் சொல்லினும் அவர் உட்காராமல், எதிரில் நின்று அவர்கள் பேசும்பொழுது ஆம், ஆம் என்று தலையை யாட்டுவதும், அடிக்கடி புன்னகை புரிவதும், இச்சகமொழி பகர்வதுமாயிருப்பார். இங்ஙனம் அவருடைய நடை மேலோரிடத்து ஒன்றாயும், கீழோரிடத்து வேறாயுமிருந்தது.

எந்தத் தாசில்தார் குடிகளிடத்து நிலவரியைப் பூர்த்தியாய்க் குறித்த காலந் தவறாமல் வாங்குகிறாரோ அவரே திறமுள்ளவரென்பது சில அதிகாரிகளுடைய கொள்கை. இதைச்செவ்வனே ஓர்ந்த சுந்தரம்பிள்ளை இரக்கமென்பது எவ்வளவுமின்றி ஏழைக்குடிகளுக்கு எண்ணிறந்த கொடுமை புரிந்து இறையைப் பெறுவார். அவர்கள் உண்ண உணவிற்கும், உடுக்க ஆடை

க்கும் வழியில்லையென்று முறையிடினும் அவர் கவனியார். அந்தணராதிய உயர்குலத்தவ ரகங்களில் தோட்டிகள் நின்று பறையடிக்கவும், தலையாரிகள் புகுந்து சாமான்களை வாரவும் மணியக்காரர்களுக்கு உத்தரவு செய்வார். அவ்வடாத செய்கைகளுக் கஞ்சிப் பின்வாங்கும் மணியக்காரர்களையும், தோட்டிகளையும், தலையாரிகளையும் வேலையைவிட்டு நீக்குவார். வரிவாங்கும் விதத்தில் அவர்செய்த அக்கிரமத்திற்கு அளவு கிடையாதென்னலாம். பயிர் செய்துமழையின்றிச்சாவியாயினும், சிறிதுமழைபெய்துபயிர்செய்யாவிடினும் வரியைக் குறையார். வர்த்தகர்களுடைய வருமான வரிகளை யுயர்த்துவார். நூறு இருநூறுகொண்டு சிறுவாணிபஞ் செய்பவர்க்கும் ஐஞ்ஞூறு, அறுநூறு இலாபங் கிடைக்கிறதென்று கிராமாதிகாரிகளைப் பொய்யுரைக்கச் செய்து அவ்வாக்குறுதியின்மீது அவ்வியாபாரிகளுக்கு வரிவிதிப்பார். சுருக்கிப்புகின் அவர் சர்க்கார் வரும்படியிற் கண்ணோக்கமேயன்றி, குடிகளுடைய க்ஷேமத்தை ஒருநாளுங் கோரவில்லை. அவர் அப்போதைக்கப்போது கிராமசஞ்சாரஞ் செய்கையில் சமையலுக்காகத் தம்மோடு ஒருவண்டியில் விறகேற்றிச் செல்வதால், வெளியில் காண்பவர் தாம் கண்டிப்புள்ளவரென்றெண்ணும்படி செய்து இரகசியத்தில் நூறு, இருநூறாக லஞ்சம் பெற்று ஞாயவிரோதஞ் செய்வார். இம்மட்டோ? தம்முதவியை நாடிய ஏழை உறவினரைக் கடுஞ் சொற்புகன்று நீக்கினார். தம்மொரே பெண்ணைமணந்த மருமகனையே அலட்சியஞ் செய்தபோது மற்றவரை மரியாதை செய்வது எங்ஙனம்? வரவர குடிகளனைவரும் முறையிடலாயினர். குமஸ்தாக்களெல்லாம் குறை கூறலானார்கள்.

இவ்வனியாயங்களை யெல்லாம் கண்ணாரக்கண்டும், காதாரக்கேட்டும் பெரியவர் மனம் பொறாமல் ஒரு நாள், தலையிற் குல்லாவும், கழுத்திற்பட்டையும், வலக்கையிற் பிரம்பும், வாயிற் சுருட்டும் பிடித்துத் தெருக்குறட்டிலுலாவிக்கொண்டிருந்த சுந்தரம்பிள்ளை யிடம்போய், "மகனே, சுந்தரம்! ஊரில் நடக்குஞ் செய்தி உனக்குத் தெரியுமோ?" என்று வினவ, சுந்தரம் பிள்ளை சுருட்டினுனியைப் பற்களால் கடித்துக்கொண்டு, "என்ன விசேஷம்?" என்றார். பெரியவர் அவரை நடையறையி லழைத்துப்போய், "ஊரெங்கும் மூலைக்கு மூலை உன்னுடைய விசேஷந்தான். உன் குடிகளும், உன் குமஸ்தாக்களும், உன் சேவகர்களும், உன் வேலைக்காரர்களும் உன்னை வாயில் வந்தபடி வைகிறார்கள்" என்று சொன்னார்.

சுந்தரம்பிள்ளை வாயிலிருந்த சுருட்டைக் கடைவாயில் றள்ளிச் சிறிது சிரித்துப் பின்பு திரும்பவும் அதை வாயின் மத்தியில் கொண்டுவந்தார்.

பெரியவர்:—உன்னை நல்லவனென்று சொல்லுபவர் இவ்வூரில் ஒருவருமில்லையே.

சுந்தரம்:—(வாயிலிருந்த சுருட்டை இடக்கையி லெடுத்துப் பிடித்துக் கொண்டு) சீசீ! இவர்கள் என்னை நல்லவனென்று சொன்னாலென்ன? கெட்டவனென்று சொன்னாலென்ன? இந்த நாய்களா லென்னவிருக்கிறது?

பெரி:—அப்பா, அப்படியன்று. நீ அவ்விதம் தூஷிக்கலாகாது. அவர்களும் உன்னைப்போல மனிதர்களே. உனக்குத் தாசில்வேலை கிடைத்து இன்னும் மூன்றுமாதம் முற்றப்பெற வில்லையே. அதற்கு முன்னம் நீ இருந்த அந்தஸ்தை ஆலோசிக்க வேண்டாமா? இவ்வுத்தியோகம் உனக்கெந்நாளும் நிலைத்திருக்கு மென்பது உறுதியோ? குடிகளெல்லாங்கூடித் துரையிடம் குறைகூறினால் அது என்னாகும்?

சுந்தரம்:—என்னையசைக்க இவர்களாலும் ஆகாது; இவர்களைப் படைத்த பிரமனாலும் ஆகாது. துரைமார்கள் எனக்குத் துணைநிற்கையில் இவர்கள் என்னை யாது செய்யக்கூடும்? பழைய கலெக்டரைப்போலவே நமது சப்கலெக்டரும் இரண்டு மாதங்களாக என்வேலையை மெச்சி வருகிறார்.

பெரி:—ஆமாம். அவர்கள் உன் செய்கையை உள்ளபடி யுணர்வார்களானால் அப்போதும் உதவிபுரிவார்களோ?

சுந்தரம்:—குடிகளிடத்துப் பணம் வசூல் செய்வதிலும், துரைகளுக்கு வேண்டிய உபசாரனை செய்வதிலும் என்னிலுஞ் சிறந்தவர் இச்சில்லாவில் எவரிருக்கிறார்கள்? ஆகவே அவர்களுக்கு என்மீது துவேஷம் உண்டாவதெப்படி? மேலும் குடிகள் இரண்டு மாதத்திற் செலுத்தவேண்டியதை நான் ஒரே மாதத்தில் வாங்கிவருகிறேனே. பயிர் சாவிபோயினும் நிலவரி தள்ளேனே. வருமான வரியெல்லாம் உயர்த்துகிறேனே.

பெரி:—மகனே, இவ்வனியாயத்திற்குத்தான் குடிகளியாவரும் உன்னைக் குறை கூறுகின்றனர். இது வேண்டாமென்று எத்தனை முறை சொன்னாலும் நீ காதிற் போட்டுக்கொள்வதில்லை. குடிகளை வருத்தி நீ அடையும் இலாபம் என்ன? நீ தாசில்தாராயிருப்பது குடிகளுக்கு நன்மைபயப்பதற்கன்றோ? இதையேன் எண்ணலாகாது? எனக்குக் கால் நோகிறது. நின்று பேசத் திறனில்லை. (என்று சொல்லிக் கையிலிருந்த தடியைக் கீழ்வைத்துத் தாமு முட்கார்ந்தார்.)

சுந்தரம்:—உமக்கென்ன தெரியுமென்று உளறுகிறீர்?

பெரி:—எட்டுப்பிள்ளை பெற்று எழுபத்திரண்டு வயதாகிய என்னிலும் நீ அதிகம் தெரிந்தவனோ?

சுந்தரம்:—ஆமாம். எட்டுப்பிள்ளை பெற்றுக் குட்டிச்சுவரானீரேயாழிய வேறொன்று மில்லை.

பெரி:—என்னடா, சுந்தரம்? எப்போது பார்த்தாலும் என்னை யலட்சியமாகப் பேசுகிறாய்? தளர்ந்த பருவத்தில் 'மகன் தந்தைக் காற்றுமுதவி' இதுதானோ?

இவ்வளவில் ஒரு சேவகன் ஓடிவந்து, "ஆற்காடு தாசில்தாரவர்கள் தங்களைக்காண வந்திருக்கிறார்" என்றான். சுந்தரம்பிள்ளை நல்லதென்று அங்கிருந்த ஓர் நாற்காலியிற்குந்தித் தமது தாதையை யுள்ளேசெல்லும்படி யுரைத்தார். பெரியவர், கீழே தவறிவந்த மூக்குக்கண்ணாடியைச் சரியாயணிந்து தரையில் வைத்த தடியையூன்றி மெதுவா யெழுந்திருப்பதற்குள், வெளியிலி

ருந்து சிறிய முகமும், மெலிந்த உதடும், மேலெழுந்த மூக்குமுடைய ஒருவர் வர, சுந்தரம்பிள்ளை கலகலவென்று நகைத்து அவருக்குக் கைலாகுகொடுத்துத் தம் பக்கத்திலிருந்த மற்றொரு நாற்காலியிலுட்காரும்படி சொன்னார். வந்தவர் உட்கார்ந்து, "பெரியவர் யார்?" என, சுந்தரம்பிள்ளை, "இந்தக் கிழப்பயலா—" என்று ஏதோ சொல்லத்தொடங்கினார். இவ்வுரை காதில் விழவும், நடைவாயிலைத்தாண்டி உள்ளே போய்க்கொண்டிருந்த பெரியவர் திடீரென்று திரும்பி, "பயலே சுந்தரம். என்னவென்கிறாய்? உன்னைப் பெற்றுவளர்த்ததோடு வாயை வயிர்றைக்கட்டிக் கல்வியும் போதித்த உன் தந்தை கிழப்பயல்தான். என்னடா என்னை முறைத்துப்பார்க்கிறாய்? பிள்ளையென்னுந் தோஷத்திற்காக நீ செய்வனவெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க நீ தாண்டித் தலைமேல் ஏறுகிறாயா? நல்லதாகட்டும். வருவார் போவாரிடத்தில் இந்த ஞாயத்தைச்சொல்லி உன் வெட்கத்தை வாங்குகிறேன். அடா பாவி! பரமசண்டாளா! இதற்குத்தானா உன்னைப் பெற்றுவளர்த்தேன்? இதற்குத்தானா உன்னைப் படிக்கவைத்தேன்? ஊரார் வயிறும், என் வயிறும் ஒன்றுசேர்ந் தெரிகையில் நீ உருப்படுவதெங்கே?" என்று சரமாரியாகக் கடுஞ்சொற்களைப் பொழிந்தார். அதற்குப் பதிலொன்றுங் கூறாமல் சுந்தரம்பிள்ளை தலைகுனிய, வந்தவர் சங்கதி யறிந்து மெல்ல எழுந்துபோய் விட்டார்.

என்ன நடந்திடினும், சுந்தரம்பிள்ளை தமது இறுமாப்பையும், துன்மார்க்கத்தையும் விட்டவரல்லர். நாள் ஏறஏற அவைகளும் அதிகமாயின. குடிகள் அவருடைய தொந்தரையைச் சகியாதவராகிச் சப்கலெக்டருக்குப் பல விண்ணப்பங்கள் அனுப்பலானார்கள். ஆனால் துரையோ பிள்ளையவர்கள்மேல் முதலிற்கொண்ட பட்சத்தால் அவற்றைக் கவனியாதொழிந்தனர். பின்னர் எட்டுமாதத்திற் கெல்லாம் அவர் மாற்றப்பட, அவருக்குப் பதிலாய் வந்தவர், அவ்விண்ணப்பங்களைப்படித்துக் கலெக்டருக்கனுப்பியதோடு சுந்தரம்பிள்ளை தாசில் வேலைக்குத் தக்கவரல்லரென்று சிபார்சும் செய்தார். கலெக்டர் அவை யனைத்தும் பார்வையிட்டுச் சுந்தரம்பிள்ளையை முப்பதுரூபாயில் சப்கலெக்டர் கச்சேரியில் குமஸ்தாவாய்ப் போம்படி உத்தரவுசெய்தார்.

அவவுத்தரவு பெற்றபோது சுந்தரம்பிள்ளைக் குண்டாகிய துக்கத்தை என்னவென்போம்? நூற்றெழுபத்தைந்து ரூபாயிலிருந்து முப்பது ரூபாய்க்குப்போவது யாருக்குத்தான் மனம்வரும்? அதிலும் தாம் தாசில்தாராகவிருந்து இஷ்டானுசாரம் அதிகாரம் நடத்திய உள்ளூரிலேயே சாதாரண குமஸ்தாவா யிருப்பதென்றால் எவ்வாறிருக்கும்? ஆயினும் என்செய்வது? வேலையை விட்டுவிடத் தீர்மானித்தாரெனினும் செலவு பெற்றுச் சீமைக்குச் சென்ற கலெக்டர் தமக்கு வேண்டியவரானதுபற்றி அவர் திரும்பிவந்தால் நலஞ் செய்வாரென்றெண்ணி அவ்வேலையை யொப்புக்கொண்டார் குடிகளும் குமஸ்தாக்களும் அன்று விழாநாளாகக்கொண்டு ஆனந்தமடைந்தார்கள். அவரைப்பெற்ற தந்தையும் களிப்புற்றாரென்றால் வேறு சொல்ல வேண்டுவதென்ன?

தாசில்வேலை போனபிறகு சுந்தரம்பிள்ளை பற்பிடுங்கிய பாம்பைப்போலாகிப் பலராலும் இகழப்பட்டார். அவரை மரியாதை செய்பவரும், அவருக்காக மனமிரங்குபவரும் வேலூரில் ஒருவருமில்லை. குடிகள் காணும் போதெல்லாம் கைகொட்டிச் சிரித்தனர். குமஸ்தாக்கள், "தாசீல்தார்! தாசில்தார்!" என்றுகூவி ஏளனஞ்செய்தனர். இப்பொழுது முப்பது ரூபாய் குமஸ்தாவாகிய அவர் யாரை என்ன செய்யக்கூடும் ?

மாதச்சம்பளம் முப்பதாகக் குறைந்தும் மீண்டுந்தாசீலாவோம் என்னுங் கருத்தால் அவருடைய குதிரை வண்டிகளையும் மாட்டுவண்டிகளையும் விற்கவில்லை. மாதம் பத்துரூபாய் கொடுத்துக் குடியிருந்த வீட்டையும் விடவில்லை. தாசில்வேலை யிழந்திடினும் பழையபடி கச்சேரிக்கு வண்டியிற்போவதும் வருவதுமாயிருந்தார்.

அவர் தம் வேலையைக்குறித்துச் சென்னையிலுள்ள நியாயவிசாரணைசங்கத்தாருக்கு விண்ணப்பஞ் செய்து வெகு நாள் எதிர்பார்த்தும் விடைகிடைத்திலது. அவருடைய கெட்டகாலத்திற்கேற்ப, செலவுகழித்துச் சீமையிருந்துவந்த கலெக்டர் மற்றொரு மண்டலத்திற்கு மாற்றப்பட்டார். பின் கொஞ்சநாளைக்கெல்லாம் தள்ளாதவராகிய அவரது தந்தையார் சுரங்கண்டிறந்தார். சுந்தரம்பிள்ளை தாம் தாசில்தாராயிருந்தபோது ஊராரையும் உறவினரையும் பகை செய்துகொண்டதால் தந்தை இறந்தநாள் அவர் வீட்டிற்கு ஒருவரும் வரவில்லை. அவரும் அவர் மனைவியும், மகளும், வேலைக்காரியுமே பிணத்தருகிலிருந்து செய்வதின்னதெனத்தோன்றாது தியங்கிக்கொண்டிருந்தார்கள். பின் வெகுநேரம் பொறுத்து அக்கம்பக்கத்தார்களிற் சிலர் வீடு வந்து, தங்கள் மனமிரங்கியது அவர்க்கல்லவென்றும், அவருடையதந்தையார்க்கென்றும் செம்மையாகச் சொல்லிப்பிறகு தம்மாலியன்ற உதவிபுரிந்தனர். அன்று சுந்தரம்பிள்ளையோ தாராளமாய்ப் பொருட் செலவிட்டுத் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கருமங்களனைத்தும் சீராய்ச்செய்தார். இருக்கும் போதெல்லாம் தந்தையை மனம்போனபடி தூஷித்து இறந்த பின்னர் வெளியார் மதிக்கப் பூசித்தலாற் பயனென்னை ? உயிர்நீங்கிய தேகத்தை நார்த்தொடுத்து ஈர்க்கிலென்ன ? நன்றாய்நடக்கி லென்ன ?

வரவர அவருக்குப்பொருள் கஷ்டந்தோன்றியது. குடிக்கூலி, வேலைக்காரர் சம்பள முதலான பலவீட்டுச் செலவோடு பொம்பாய் மரணநிதியில் அவர் சேர்ந்திருந்ததால் அதற்கு மாதந்தோறும் இருபது ரூபாய் அனுப்பவேண்டியதாயிற்று. இச்செலவுக்கெல்லாம் முன்னம் நூற்றெழுபத்தைந்து ரூபாய் போதாதபோது இப்பொழுது அவற்றை முப்பதுரூபாயில் அடக்க முடியுமோ ? ஆகவே தாம் வெறு மார்க்கத்தி லீட்டிய பொருளைச் செலவிடத்தொடங்கிக் கொஞ்சநாளையில் அப்பொருளும் போய் வருவாயேதுமின்றிவருத்தப்படலானார். விசனத்தினாலும் வெட்கத்தினாலும் ஆதியில் பூசனிப்பழம் போன்று வெளிவந்த அவர் தொப்பை பாம்புபோலாயிற்று ; கொடும் பார்வையைத் தந்த வட்டமுகம் ஒளி மழுங்கிச் சுருங்கியது. தேகம் கறுத்தன்றி நெற்றியில் விசாரத்தைக் காட்டும் கோடுகள் விழுந்தன.

இப்போது நமது மரகதவல்லி நிலைமை என்னவெனக் காண்போம்.

சுந்தரம்பிள்ளை தாசில்தாராயிருக்கையில் அடிக்கடிவந்து மரகதவல்லியினுடைய வடிவழகையும், நகையுயர்வையும், செல்வமிகுதியையும் வர்ணித்துக்கொண்டிருந்த அண்டை அயலத்துப் பெண்கள் தாசில் வேலைபோய்த் தந்தை இப்பொழுது பணத்திற்குக் கஷ்டப்படக் காலம்வந்ததால் அவளிடம் வருவதை யொழித்தார்கள். ஒருகால் இரண்டொருவர் எப்போதாவது வரினும் முன்போல் அவர்கள் மரகதவல்லியைப் புகழ்வது நீக்கித் தம்மைப் பற்றியும், தம்புருஷரைப்பற்றியும் பெருமைபேசத் தலைப்பட்டார்கள். அவளைக் கண்ணிமைபோற் காத்துவந்த அன்னையும் அப்பனும் தங்களுடைய துன்பத்தை முன்னிட்டு அவளை அசட்டை செய்யலாயினர். எந்நேரமும் அவளோடு கூடவிருந்து உபசரித்துவந்த நாராயணியும் வீட்டுவேலை மிகுதியினால் அடிக்கடி அவளைத் தனியேவிட்டுச் சென்றாள். அதனால் மரகதவல்லி அனைவரும் தங்கள் சுயநலமே பெரிதாகக்கொண்டு தன்னை அலட்சியஞ் செய்வதாக நினைத்து உள்ளம் வருந்தினாள். அவளுடைய வருத்தத்தை விசாரித்து அவ்வருத்தம் தமதென்றெண்ணி அவளுக்கு இன்சொல் புரிபவர் எவருமில்லையோ? தன் தந்தை தாசில்வேலையிழந்ததே அதற்குக் காரணமென்றால், அத்தாசில்வேலை யில்லாத அண்டை வீட்டு எளிய பெண்கள் இன்புற்றிருக்க வில்லையோ? அவர்கள் தந் தாய்தந்தையரைவிட்டு அயலூரில் ஏழைக் கணவர்களுடன் சுகமாயிருக்கவும், தான் பெற்றோரகத்தில் சுற்றத்தார்சூழ இன்னுஞ் செல்வமாக விருந்து துக்கப்படவும் வேண்டியதேன்? இன்னனைய எண்ணங்கள் எழுந்து தனியே யிருக்குங் காலையில் அவள் மனத்தை நலிவுறுத்தின. அவளுக்குப் பலநாள் பொறுத்துக் காரணம் இன்னதெனப் புலப்பட்டது. அக்காரணமாவது கணவனேயாம். தன் கணவனிருப்பானானால் மற்றவரைப்போலும் இப்போது தன்பாற் பராமுகமாயிரானே. உடனே அவள் தனக்குக் கடிமணமானபோதொருநாளும், கடந்த பொங்கல் நாளும் தன் நாயகன் தன்னிடம் பேசிய வார்த்தைகளை நினைவுகூர்ந்தாள். அவைகள் இன்று தேன்மொழிபோலுந் தோன்றின. அவ்வாறு தோன்றவும் தான் சொன்ன வெஞ்சொற்களை நினைத்து வியாகுலப்பட்டாள். அக்காலங்களில் அவள் புருஷனை மதியாததற்குக் காரணம் பணச்செருக்கன்றோ? அய்யோ! அவள் ஓர் ஏழை வீட்டில் பிறந்திருந்தால் இவ்வளவு சங்கடம் நேரிட்டிராதே. மற்ற மாதர்களைப்போல அவளும் கணவனோடு காலங்கழிக்கலாமே. அவளை ஒருவரும் இப்போது அசட்டை செய்யாரே. ஆயினும் கடந்த விஷயத்திற்கு யார் என்னசெய்யலாம்?

புருஷன் தன்மேலும் தன் தந்தைமேலும் சினந்து தேசாந்திரியாய்ப் போய்விட்டதை அவளறிந்து, தான் பேதைமையாற்செய்த பிழையைப் பொறுத்துத் திரும்பிவருவாரோ என்றையுற்றுத் தன்னைத்தானே நொந்தாள். அதுமுதல் அவளுடைய விளையாட்டுத் தன்மை ஒழிந்தது. அவள் பாடுவதையும், படிப்பதையும், சிரிப்பதையும், ஆடுவதையும் விட்டாள். சிறந்த ஆடை தரிப்பதையும், உயர்ந்த நகை பூண்பதையும் நீக்கினாள். சாப்

பிட்டநேரம்போக மிகுந்த நேரமெல்லாம் பாயும் படுக்கையுமாகவே இருப்பாள். யாராவது பேச நேரிட்டால் அவர்களோடு சிரித்து வார்த்தையாடுவது போய்க் கோபமாக வார்த்தையாடுவாள். அதனால் அவள் மனத்தில ஏதோ குறையொன்று குடிகொண்டிருப்பதாகக் கண்டார்கள். அவள் அன்னை அவ்வேற்றுமைக்குக் காரணம் யாதென்று நாலைந்துமுறை கேட்டாளெனினும் அவள் தனக்கு உடம்பு குணமில்லையெனக் கூறினளே யன்றி உண்மையைக் கூறவில்லை.

இப்போது அவள் மனமுழுதும் அவளது மணாளனிடத்திற் சென்றது. தெய்வசிகாமணி ஆடை யலங்கோலத்தையும், எழ்மை நிலைமையையுமறந்து அவனைப்போலும் சுந்தரமுள்ள வேறொரு புருஷன் கிடையாதென நிச்சயித்தாள். காதலென்பது இன்னதென்றுணராத அவள் உள்ளத்தில் அது திடீரெனத் தோன்றி வளர்ந்து புஷ்பித்து, அவள் கண்களிலும், கன்னங்களிலும் அடிக்கடி சிவந்து காணப்பட்டது.

ஐந்தா மதிகாரம்.

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.
காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு.

குறள்.

ஆறுவருஷங்களாயின. முன் பனிக்காலம் போய் பின்பனி ஆரம்பித்து இன்று இருபது நாட்களாகின்றன. நரசிங்கசுவாமிக்குத் தேருற்சவமாதலால், விநாயகர் வீதியில் இன்று நீர்தெளித்துப் பெருக்கிக் கோலமிட்டிருக்கிறது. சனங்கள் தலையில் பூச்சூடியும், சிறந்த உடைதரித்தும் கும்பல் கும்பலாகக் கோயில்முகஞ் செல்லுகிறார்கள். ஆயினும் அவ்வீதி தென்னண்டை வரிசை நடுவிலுள்ள மெத்தைவீடுமட்டும் பெருக்காமலும் கோலமிடாமலும் இருப்பதேன்? வீடுமெழுகிக் கோலமிடுவது சுந்தரம்பிள்ளைக்கு இப்போதும் கூடாதென்பதோ? இல்லை. இல்லை. அந்த ஞானமெல்லாம் அவர்க்குத் தாசில் வேலை போனபோது கூடவேபோயிற்று. வேலைக்காரர் இல்லாததே அதற்குக் காரணம். வருவாய் குறைந்தும், செலவுமிகுந்தும் வந்ததால் இப்போது அவர் வீட்டில் வேலைக்காரர் ஒருவராயினுங் கிடையார். மீனாட்சி இரண்டு முறை கையில் திடைப்பத்தோடு வெளியிற் போகப் பார்த்து, சுந்தரம்பிள்ளை வீதியிற் போவார் நகைப்பாரென்று சொல்லி அவளை யுள்ளே யனுப்பிவிட்டு ஏதோ காரியமாகத் தாம் வெளியே சென்றார். அவர் கையிலுள்ள வளைத்தும்போய் மூப்பது ரூபாயிற் காலந்தள்ள நேரிட்டதால் தம் வேலையாட்களை நீக்கினர். வீட்டிலுள்ள விலையுயர்ந்த சாமான்களை விற்றார். வண்டிகளையும், குதிரைகளையும், மாடுகளையும் தொலைத்தார். கடைசியில் தம்மனைவியும், மகளும் அணிந்திருந்த நகைகளையும்

அடகு வைக்கலானார். இப்போது அவருடைய பொருளும், புகழும், கனமும் போயின. தம் பழைய ஸ்திதியைப்பற்றிச் சில சமயங்களில் தாம் தனியே சிந்திப்பதாலும், சில சமயங்களில் தம் மனைவி மகளிடம் பேசுவதாலுமாகிய சந்தோஷ மொன்றே தவிர வேறு சந்தோஷ மில்லை. அவருக்கு நாளுநாளும் வறுமை மேலிடவே அவர் தம் நிலைமையை யுணரலானார். தேசாசாரங்களை யிகழ்வதையும், தெய்வத்தை நிந்திப்பதையும் விட்டார். உறவினர்களை அலட்சியஞ் செய்வதையும், பெரியவர்களைத் தூஷிப்பதையும் நிறுத்தினார். அவர் தம் பூர்வ ஸ்திதியை யெண்ணி யேங்கி வந்ததை மறக்கவும் முயற்சிசெய்தாரெனினும், உயர்ந்த சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களையும், திரண்ட பொருளுடைய குடிகளையும் வெளியிற் காணுந்தோறும் பொறாமையுண்டாகும். அந்நேரம் அப்பொறாமை யென்னும் புழுக்கள் அவர் உள்ளமாகிய பூவையரித்துத் துன்புறுத்து மாதலால், அவர் அதைத்தாங்க வலியற்றுத் தலைகுனிந்து வீட்டிற்குத்திரும்பி அன்றெல்லாம் தம் மனைவிமகளுடன் பேசாமலும், சரியாய்ச் சாப்பிடாமலும் ஒரு மூலையிற் படுப்பார். அவர் அடிக்கடி அவ்வாறு நடந்துவந்ததால் நாளாவட்டத்தில் இளைத்து எலும்பாய்ப் போனாரே யொழிய, வேறு பயன் கண்டிலர். இவ்வுலகில் பொறாமைப்பட்டுப் பொருள் பெற்றவரும் உண்டோ ?

திருநாளன்று ஏதோ காரியமாக வெளியிற்போன சுந்தரம்பிள்ளை, திரும்பவும் வந்து வீட்டிற்புகுந்து நடையினோர் மூலையில் தலையை நட்டுக்குந்தி ஏதோ யோசித்துக் கொண்டிருக்கையில், மீனாட்சி அவரிடம் போய் வழக்கப்படி இடக்கையை யிடுப்பிலும், வலக்கையை மோவாய்க் கட்டையிலும் வைத்து, “வெளியில் வெகுதூரம் வேகமாகச் சென்ற தாங்கள் உடனே திரும்பி ஓடிவரவேண்டியதென்ன ? வழியில் யாரைக்கண்டு 'வயிறெரிந்து வந்தீர் ?” என்று பரிகாசமாய்க் கேட்டாள். சுந்தரம்பிள்ளை அதற்கு விடையளிக்கவில்லை.

மீனாட்சி:--அது கிடக்கட்டும். இன்று தேராயிற்றே, கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்யவேண்டாமா? ஒரு ரூபாயிருந்தாற்கொடும்.

சுந்த:—என்னடி தெரியாதவளாயிருக்கிறாய்? இல்லாதபோது பணங் கேட்டால் எங்கிருந்து கொடுப்பேன் ?

மீனாட்சி:—இருந்தபோது மட்டும் தாராளமாய் இறைத்தீரோ ? கடவுளை வஞ்சித்ததனால்தானே உங்களுக்கு இந்தக்கேடு வந்தது. காலந்தவறாமல்செய்ய வேண்டிய வற்றைச் செய்து வந்தால் மற்றவரைப்போல் தாங்களும் சுகமாயிரீரா ? இப்போது பணக்காரரைப்பார்த்து வயிறெரிந்து மூலையிலமர்ந்தால் என்ன இலாபம் ? இதுபோகட்டும். நான் கேட்ட சங்கதியென்ன ?

சுந்த:—என்னடி, இல்லை யென்று சொல்லியும் மறுபடியுங்கேட்கிறாய். நான் சம்பளம்வாங்கி. இன்னும் ஐந்துதினங்களாகவில்லை யெனினும், கையிற்காசொன்று மில்லை. பழைய கடன்களெல்லாம் குன்றம்போலுங் குவி

ந்தன. குதிரைக்காரன் என் குடுமியைப் பிடிக்கிறான். கடைக்காரன் காதைப்பிடிக்கிறான். வீட்டுக்காரனுக்கோ கடந்த ஒரு வருஷமாக ஒன்றுங்கொடுக்கவில்லை. அவன் எப்போது என் ஊட்டியைப்பிடிப்பானோ தெரியாது என்னடி மீனாட்சி, இதையெல்லாம் அறியாமல் என்னைத் தொந்தரவு செய்கிறாய். நான் தாசில் வேலையி லிருக்கையில் வேலைக்காரர்கள் என்னருகில் வந்து தங்கள் சம்பளங்கேட்க அஞ்சினார்கள். இப்பொழுதோ என்னை வெளியிற்கண்டால் மடியில் கைபோட்டிழுக்கிறார்கள். எனக்குக் கடன்கொடுப்பாரு மில்லை; என்னிடங் கலந்துபேசுவாருமில்லை. நம்மிடம் நட்புடையவராக நடித்த அய்யங்காரும் நேற்றுமுதல் என்னைக்கண்டால் பார்க்காததுபோலும் போகிறார். என்னசெய்வேன்! அதோ அந்த நாலணாவைத்தவிர என்னிடம் ஒருகாசுமில்லை.

மீனாட்சி, "சரி சரி. உமது பழையபாரதத்தை விரிக்கவேண்டாம். அந்த நாலணாவைக் கொடும்" என்றுசொல்லிப் பெட்டியைத்திறந்து, அதிற்கிடந்த ஒரு வெள்ளி நாணயத்தை யெடுத்துக் கையிற்பிடித்து ஏதோ குழறிக்கொண்டு மெத்தைமேலண்டை அறையிலிருந்த தன் புதல்வியிடஞ் சென்றாள்.

அப்போது மரகதவல்லி கட்டிலிற் கவிழ்ந்து படுத்துக் கையிலிருந்த ஏதோ படமொன்றை நெடுநேரம் உற்றுப்பார்த்தவண்ண மிருந்தாள். கருமேகமானது வெண்திங்களை மறைக்குமாறு அவளுடைய கூந்தல் சோர்ந்து முகத்தை மூடியது. கண்களினின்று நீர் தாரை தாரையாகக்கிளம்பிக் கன்னங்களைக் கழுவி மயீரை நனைத்தோடியது. மரகதவல்லி தன் அன்னை வருகிற சாடையறிந்து, கையில் வைத்திருந்தபடத்தைப் பாவாடையில் ஒளித்து ஒன்று மறியாதவள் போலப் படுத்தவாறிருந்தாள். மீனாட்சி அவளருகிற்போய், "மரகதம், பொழுதுபோம் வேளையாயும் ஏன் இன்னும் படுத்துக் கொண்டிருக்கிறாய்? இன்று தேராயிற்றே. எழுந்து வெளியிற் போய் வேடிக்கை பார்க்கலாகாதா? உன்னைப்போன்ற பெண்களியாவரும் இன்று சந்தோஷமாயிருக்க நீமட்டும் வருத்தப்படவேண்டியதென்ன? உன் தந்தையும் நானும் பலவித கஷ்டப்படினும் உனக்குக் குறையொன்றுஞ் செய்திலோமே. மகளே, எழுந்திரு. இந்தநாலணாவைப்பிடி. நாம் கோவிலுக்குப் போய்வருவோம்" என்றுசொல்லி அவள்கையிற் கொடுக்க, மரகதவல்லி அதைவாங்கவில்லை; படுக்கையைவிட் டெழுந்திருக்கவுமில்லை. மீனாட்சி மீளவும், "மகளே, நீ மவுனமாயிருக்க வேண்டியதேன்? உன்மனத்திலுள்ளதென்ன?" என்று நாலைந்துதரங் கேட்டும் மரகதவல்லி விடைதராமலிருந்ததால், அதள் கீழேபோயினாள். அப்பெண் அன்னையினிடம் தன் அந்தரங்கத்தைச் சொல்லுங்காலங் கடந்தது. அவள் தன்னைப் பெற்றவளெனினும், தனக்குயிர்போன்றவளெனினும் மரகதவல்லியினுடைய உள்ளமானது அவ்விரகசியத்தை வெளியிட நாணிற்று அன்று உற்சவநாளானதால் அண்டை வீட்டுப்பெண்கள் அணிகலன்கள் பூண்டு தங்கணவரோடு அழகாயிருப்பதுகண்டு, அவள் பெருமூச்சுவிட்டுத் தன்விதியை நொந்தாள்.

தன் நாயகன்போய்ச் சுமார் ஆறுவருஷங்களாகின்றனவே. அவர் உயிரோடிருப்பதும் இல்லாததும் தெரியவில்லையே. இருந்தால் இத்தனைநாள்வராமலிருப்பாரோ? தன்னண்டை தன் புருஷனிருந்தால் மற்றப் பெண்களைப் போலத் தானும் சுகமா யிருக்கலாகுமே என்னும் இன்னனைய எண்ணங்கள் உதித்து அவள் மனத்தை வருத்தின. இதை வாசிப்பவர்களே! அவள் கையிலிருந்தது இன்னதென்று அறிவீர்களோ? அது அவள் புருஷனுடைய புகைப்படம். ஓர்கால் தன் புருஷனுடைய நடையையும், உடையையும், கண்டு பரிகசித்த அவள் இப்போது அவனுடைய புகைப்படத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிடுவது கூடுமோ என்று நீங்கள் சந்தேகிப்பீர்கள். காதலே அதற்குக் காரணமாம்.

காதலென்பது சாமானியமன்று; அதுமனித சமுத்திரத்தின் அலைகளையாளும் ஞானமென்னுஞ் சந்திரனும்.

ஆண் சிங்கமென்ன ஆற்றலுடையவரும், அவனியை யாளும் அரசர்க்கரசரும் அதற்கடிமையாவர். முற்றத்துறந்த முனிவரும் முன்னில்லாரென்றால் அதன் மாண்பை நாம் எங்ஙனம் விரித்துரைக்க வல்லோம்?

காதலானது ஆன்மாவின் ஓர் அணுவாதலால் ஆன்மாவும் காதலும் தன்மையி லொன்றாம். ஆன்மாவைப் போன்றே அது அழியாதது; உறுதியுள்ளது; உயர்வுள்ளது; அலகற்ற பரஞ்சோதியாவது. அவியாததும், எங்கும் இலங்குவதுமான ஒரு விளக்கைப்போல நம்மிதயத்தில் என்றும் எரிந்து கொண்டிருப்பதும் அதுவே.

காதலே சொர்க்கமாகும்; காதலே கடவுளாகும்; காதலே மற்றெல்லாமாகும். காதலின்றி வானுலகே இல்லையென்றால், பூவுலகின் செய்தியைப் புகலவேண்டுமோ?

காதலுள்ளோர் ஆயுள்விர்த்தி யொன்றேயன்றிக் கடவுளைவேறு வேண்டார். இவ்வுலகில் காதல்தரும் இன்பத்தைப்போலப் பிறிதொன்று மில்லையாதலால், அவர்கள் கடவுளிடத்தில் பெறவேண்டுவது யாதுள்ளது?

காதலுடைமையின் அழகே அழகு! காதல் என்றுண்டாகிறதோ அன்றே எல்லாத் திறனும் உண்டாகின்றது. இனிய எண்ணங்கள் எழுகின்றன. அன்பும் அறனும் வளர்கின்றன.

இதை இம்மட்டோடு நிறுத்தி இப்போது தெருவில் கேட்குஞ் சத்தம் என்னவெனக் காண்போம்.

ஒரு மாட்டுவண்டி வந்துகொண்டிருந்தது. அவ்வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் வண்டிக்காரனுடன், "இவ்வீடுதான், நிறுத்து, நிறுத்து" என்று உரத்துக்கூவினன். வண்டியோட்டிய ஒரு துலுக்கன் மாட்டின் மூக்குக்கயிற்றை யிழுக்க வண்டி நின்றது. உள்ளேயிருந்தவன் ஒரு துணிமூட்டையைக் கையில் தூக்கிக்கொண்டு வண்டியினின்று மிறங்கினன். அவன் தலையில் பூவேலை செய்திருந்த ஒரு கறுப்புக்குல்லாவும், மேலே அழுக்குப்படிந்த ஒரு வெள்ளைச்சட்டையு மிருந்தன. அவ்வெள்ளைச் சட்டைக்குள் இருக்கவேண்டிய உட்சட்டையைக்காணேம். இடையில் இரண்

டாகமடித்த ஒரு பெரிய வஸ்திரந் தொங்கியது. அவன் இறங்கிய சந்தடி கேட்டு நடையில் உட்கார்ந்துகொண்டிருந்த சுந்தரம்பிள்ளை உடனே எழுந்து உட்சென்று, அங்கு கூடத்தூணில்சார்ந்து கால்நீட்டிக் குந்தித்திரி திரித்துக் கொண்டிருந்த தன் மனைவியிடம் போய், "மீனாட்சி, வீட்டுக்காரன் பணங் கேட்க வருகிறான். நான் இல்லையென்று சொல்" என்றுரைத்துக் கூடத் தறையுட் புகுந்தார்.

இவ்வளவில் வண்டியினின்றிறங்கிய வாலிபன் உள்ளே வந்து, கையிற் கொணர்ந்த மூட்டையை ஓர் மூலையில்வைத்து நகைவிளங்கு முகத்துடன், "மாமி, தாங்கள் க்ஷேமந்தானா? மாமனார் எங்கே? மரகதம் எப்படி யிருக்கிறாள்?" என்று விசாரித்தான். மீனாட்சி தலை நிமிர்ந்து நோக்கித் திடுக்கிட்டு அறைக்குள் பதுங்கிக்கொண்டிருந்த கணவனிடம், "மாப்பிள்ளை" என்ன, அவர் "சும்மா" என்றார். உடனே தெய்வசிகாமணி (வந்தவன் தெய்வசிகாமணி என்று நாம சொல்லவேண்டுவதில்லை.) அறைவாயிற்போய், "மாமா, தங்களுக்குத் தேகசவுக்கிய மில்லையோ? இதென்ன இவ்வாறு இளைத்துப் போனீர்கள்?" என்று தன்வழக்கப்படி பிரியமாய்ப்பேசவே, வந்தவன் வீட்டுக் காரனல்லனென்றும், தம் மாப்பிள்ளையென்றும் தெரிந்து சுந்தரம்பிள்ளை வெளியில் வந்தார். பின்னர் மீனாட்சி, ஒரு செம்பில் தண்ணீர்கொண்டுவந்து வைக்க, தெய்வசிகாமணி காலலம்பிக் கூடத்திற் போட்டிருந்த கோரைப்பாயிற்குந்தி நாலண்டையும் பார்க்கலானான். ஆதியிலிருந்த அழகும் சுத்தமும் போய் வீடுமுழுதும் அவலட்சணமாகத் தோன்றியது. கீழே குப்பையும், மேலே ஒட்டடையும் நிறைந்து கிடந்தன. வெளியிலிருந்த பூஞ்செடிகளையும், உள்ளே யிருந்த நாற்காலிகளையும் காணோம்.

மரகதவல்லி இப்போது என்னசெய்து கொண்டிருக்கிறாள்? அவள் தன் புருஷன் வரவை யறிந்ததும் கண்பெற்ற குருடனைப்போலுங் களித்து மெத்தையைவிட்டுக் கீழிறங்கிச் சரேலென் றோடிவந்தாளெனினும், தான் தேடிவந்த பொருள் கூடத்திலிருக்கப் பார்த்து அவள் வெட்கமடைந்து உட்கட்டுக்குச் சென்றாள். இந்துமாதர் எப்போதும் நாணமும், அச்சமு முடையவர்கள். அவர்களுக்குத் தங்கணவரிடத்தில் எத்துணை அழுத்தமான ஆசையிருப்பினும், அதை வெளியிற்காட்டார்கள்.

சுந்தரம்பிள்ளைக்குப் பழைய கர்வமொழிந்து மாப்பிள்ளையோடு வார்த்தையாட மனமிருப்பினும், தம் வறுமையை யெண்ணி மௌனமானார். தெய்வசிகாமணி, "மாமா, தங்களுக்கு இடையிலுற்ற இடுக்கண்களையும், தாதா காலஞ்சென்றதையும் வழியில் கேள்விப்பட்டு மிக்கவருத்தமடைந்தேன். இறைவன் சித்த மதுவாயின் நாமென் செய்வோம்? நாம் வாழ்ந்ததை யெண்ணி வருத்தப்படுவதால் பயனில்லை. நேர்வனவெல்லாம் அனுபவித்தே தீரவேண்டும். 'குணமென்னும் குன்றேறி நின்ற' நளன், அரிச்சந்திரன், தருமன் முதலியோர் அரசிழந்து துன்புற்றதாகக் கேள்விப்படவில்லையோ?" என்றான். அவ்வார்த்தைகள் கேட்கவும் சுந்தரம்பிள்ளை துக்கமிகுந்து தலை குனிந்து முகத்தைத் திருப்பிக்கொண்டார். துக்கமானது அந்நியர் ஆறுதலை செய்வதால் அதிகமா மன்றோ?

பின்னர் சுந்தரம்பிள்ளையும், மீனாட்சியும் மாப்பிள்ளைக்கு விருந்து செய்யக் கையிற் பணமில்லாமல் மிணமிண வென்று பேசுவதையும், அந்தண்டை இந்தண்டை போவதையும் பார்த்து, தெய்வசிகாமணி அவர்களருகிற்போய், "மாமா, தங்கள் நிலைமையை நான் நன்குணர்வேன். தாங்கள் ஏன் சிந்திக்க வேண்டும்? நான் நேற்றுவந்த புதிய மாப்பிள்ளையல்லனே. மேலும் நான் ஏழைக் குடும்பத்திற் பிறந்து இளம்பருவந் தொடங்கி எளிய உணவைஉண்டு பழகியவன். எனக்கு விருந்தென்பது வேண்டாம். தாங்கள் உண்ணும் சாதாரண உணவேசாலும்" என்றான்.

பிறகு தெய்வசிகாமணிபிள்ளை அன்னமருந்தி மெத்தைமேற் சென்றான். ஆதியில் மெத்தைக்கூடத்தில் விரித்திருந்த இரத்தினக்கம்பளியும், அதன் மேற்பரப்பியிருந்த பலவித நாற்காலிகளும், சுவரில் மாட்டியிருந்த சித்திரக் கடிகாரமும் போய், எங்கும் கணவனற்ற கைம்பெண்ணைப்போலும் அழகற்றிருந்தது. மேலண்டை அறையில்மட்டும் பழையபடி கட்டிலும், நிலைக் கண்ணாடியுமிருந்தன. தெய்வசிகாமணி அக்கட்டிலிற் கீழ்ப்புறமாகக் குந்தித் தன் மனைவி வரவை யெதிர்நோக்கினான்.

மரகதவல்லி சற்றுநேரத்திற்கெல்லாம் வெள்ளைச் சல்லாவுடுத்துத் தாம்பாளத்தில் தாம்பூலமேந்திச் சுற்று முற்றும் பார்த்தவண்ணம் மெதுவாய் நடந்துவந்து, அறைக்குக்குட்புகுந்து ஓர் மூலையிற்போய்நின்றுகொண்டாள். தெய்வசிகாமணி "மரகதம், என்மேல் உனக்கு இன்னும் இரக்கமில்லையோ ? என்னைக்கண்டு எட்டிச்சென்றதற்கு நான் என்ன கொடுமை செய்தேன் ?" என நயமாய் நவின்று கட்டிலினின்றிறங்கி அவளண்டைபோய் அவளது கைகளைப்பற்றினான். புருஷன் கை பட்டவுடனே ஓர் விதமான உணர்ச்சியுண்டாகி அவள் உள்ளெல்லாம் பரவிப் பெருகிப் பரவசத்தை யளித்தது. ஆகவே அவள் இம்முறை கையைத் திமிறாமல் தலைகுனிந்தாள். தெய்வசிகாமணி அவளை மெதுவாக நடத்திவந்து கட்டிலிற் சேர்த்து, "பெண்ணே ! முன்னம்பூத்துத் தளிர்த்த பொற்கொடிபோலும் தோன்றின நீ இப்பொழுது தலை விரிகோலமாகக் காணப்படுவதேன் ? உன்னுடைய சரிகைச்சேலை எங்கே ? பொம்பாய் பட்டுக்குட்டை யெங்கே ? உன் தளுக்குப் பொட்டெங்கே? உன் மக்மல் ரவிக்கை எங்கே ? சூரியனைப்போலுந் துலங்கிய திவ்வியமான ஆபரணங்களெங்கே ?" என்று கேட்டான். அப்பரிகாசவார்த்தைகள் மரகதவல்லிக்கு விஷம்போலுந் தலைக்கேறி ஒரு நிமிஷநேரம் கலப்பற்ற அவளுடையகாதலைக்கெடுத்தது. அதனால் அவள்பேசாதிருக்கக்கண்டு தெய்வசிகாமணி மீண்டும், "பெண்ணே, உன் ஏழைப்புருஷன் மீதுள்ள அருவருப்பு இன்னும் தொலையவில்லையோ?" என்றான். மரகதவல்லி மெதுவாய், "தாங்கள் என்னை அவமானஞ்செய்யவேண்டாம். என் நிலைமையை யான் உள்ளபடி உணர்ந்தேன்" என்று குயில்போலும் பேசித் தன் நாயகனைத் தலை நிமிர்ந்து பார்க்க நாணி ஒரு கண்ணைச் சுருக்கினவள்போலப் பார்த்து முறுவலித்தாள். அவளுடைய கருங்கண்கள் தன் பெருங்கண்களிற்படவே தெய்வசிகாமணி அவற்றினை வெகு நேரமளவும் விடாது பார்த்துப்பிறகு அவளைத்தழுவி முத்தந்தந்தான். அதன்பின்னர் மரகதவல்லி எல்லாருடனும் பேசுவதும்,

சிரிப்பதும், படிப்பதும், பாடுவதுமானாள். அவளது பழைய சந்தோஷ நிலைமை மீண்டுந் திரும்பியது.

தெய்வசிகாமணி இரண்டுநாள் அங்கு தங்கியிருந்து மூன்றாநாள் பிரயாணத்திற்குச் சித்தமாகி மாமனாரிடம்போய்த் தன் மனைவியை யனுப்பும்படி வேண்டினான். அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மீனாட்சி, "நம்முடைய மகள் இதுகாறும் நம்மோடு நன்றாய்ப்பேசாதிருந்ததற்கும், நாளுக்கு நாள் மனம் வேறு, சொல் வேறானதற்கும் காரணம் இப்போதுதான் தெரியவருகிறது. பாரும், நமது மாப்பிள்ளை வந்தது தொடங்கி அவள் எப்படியிருக்கிறாள்! ஆகையால் நமது மகள் சந்தோஷமாயிருப்பதற்கு மாப்பிள்ளை யிருக்க வேண்டியதுதான்" என்றாள். சுந்தரம்பிள்ளை, "ஆம், பெண்ணே! நீ நமது சிறுமையை யோசிக்கவில்லையே. நம்முடைய வயிற்றை வளர்ப்பதே பெரிதாயிருக்கையில், மாப்பிள்ளையையும் வைத்திருப்பதெங்கே?" என்று மனையாள் காதில் மறைவாயோத, மீனாட்சி, "அப்படியானால் மரகதவல்லியை மாமி வீட்டிற்கனுப்புங்கள்" என்றாள். மரகதவல்லிக்குத் தன் மணவாளனோடிருக்கச் சம்மதமெனினும், தன் பெற்றோரை விட்டுப்பிரிவது பெரியதுக்கத்தைத் தந்தது. அவள் ஓடிவந்து தன் தாயின் கழுத்தைக்கட்டிக்கொண்டு காம்பொடிந்த பூங்கொத்தைப்போலும் தலையைச்சாய்த்து மாலைமாலையாகக்கண்ணீர் சொரிந்தாள். தம் மகளை ஒரு நாளும் விட்டுப்பிரிந்திராத தாய்தந்தையர்க்கு அக்காட்சியைக்காண எவ்வாறிருக்கும்? மீனாட்சி தன் முன்றானையால் தன் விழிகளைமூடி யழுதாள். சுந்தரம்பிள்ளை வலக்கண்ணிலும் ஒரு பெரிய நீர்த்துளிதோன்றி நெடுநேரம் விழாமல் ததும்பிக்கொண்டிருந்தது.

பின்னர் பயணத்திற்கு ஆயத்தமாயிற்று. மரகதவல்லி தன்னுடைய பல வர்ணப் பட்டுச்சேலைகளையும், இரவிக்கைகளையும், தாவணிகளையும் வண்டியில் நிரப்பினாள். அவற்றின்மேல் வீணையையும், புத்தகங்களையும், விளையாடும் மரப்பாவைகளையும் அடுக்கினாள். அவற்றின்மீது சொக்கட்டான் பலகையும், நாலுண்டைகளையும், பலவர்ணப் பந்துகளையும் எடுத்துவைத்தாள். அதனைக்கண்டு தெய்வசிகாமணி, "பெண்ணே இதெல்லாமென்ன? உனது சாமான்களே வண்டியை நிரப்பினால் நாம் உட்காருவதெங்கே? வண்ணான் மூட்டையைப்போலும் உனக்கு இத்தனை ஆடைகளேன்? நாம் தருமஞ்செய்தால் இவைகளை நூறுபேர் உடுப்பார்களே. விற்றோமானால் உங்களுடைய கஷ்டகாலத்தில் ஏழெட்டுமாதச்சாப்பாட்டிற்கு வருமே" என்றான். ஆயினும் மரகதவல்லிக்கு அவற்றி லொன்றேனும் விட்டுப்பிரிய மனமில்லை. சாமான்களை வண்டியிலேற்றியதும், தெய்வசிகாமணி தன் மனைவியைப்பார்த்து, "மரகதம், இதோ உன் தாய்தந்தையர் காலில் விழுவாய்" என்ன, அவள் அவ்வழக்க மறியாதவளாதலால் திருடனைப்போலும் விழித்தாள். பின்பு தெய்வசிகாமணி தானே விழுந்துகாட்டி அதைப்போல தன் இல்லாளை விழச்செய்து, "மாமா, மாமி! உங்களுடைய பேதைமகளும், ஏழை மருகனும் நமஸ்கரிக்கின்றோம். சிறியவராகிய நாங்கள் பிழைசெய்திருப்பின் மன்னித்து எங்களை ஆசிர் வதியுங்கள்" என்ன, அவர்கள் ஆசிர்வாதஞ் செய்தார்கள். மீனாட்சி, கண்ணனைய தன் மகளைப் பிரியமாகப்பார்க்கவும், சுந்தரம்பிள்ளை அடிக்காதிருக்கவும் மாப்பிள்ளையை வேண்டினார்கள்.

நமது மரகதவல்லியும் தெய்வசிகாமணியும், விடைபெற்று வண்டியிலேறிப் புகைவண்டிச்சாலையை நோக்கிப்போய்க்கொண்டிருந்த பொழுது; சுந்தரம்பிள்ளை பெருமூச்சுவிட்டோடிவந்து தம் மகள் கையில் காகிதச்சுருளொன்றைப் போட்டுப்போனார். அதை அவள் பிரித்துப்பார்க்கையில் இரண்டு ரூபாய்கள் இருந்தன. தெய்வசிகாமணி அதைக்கண்டதும், "பெண்ணே! உன் பெற்றோர் உன்னிடம் வைத்துள்ள பட்சத்தைப்பார்த்தாயா? அவருடைய சொந்த கஷ்டத்தைக்கருதாது எப்படியோ மீதிசெய்தோ அல்லது கடன்வாங்கியோ இரண்டு ரூபாய் உனக்குக் கொண்டுவந்து கொடுத்தாரே. இவ்வித உதவியை நீ எப்போது தரப்போகிறாய்? அய்யோ! அவருக்கு ஒரு விதத்திலேனும் கடமைப்படாதவளாகிய என் உள்ளம் நெகிழ்கிறதே. உடம்பு பதைக்கிறதே" என்றான். ஆனால் மரகதவல்லிக்கு ஒன்றுந் தோன்றிலது.

ஆறுமதிகாரம்.

* * * * * காழற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை. திரிகடுகம்.

ஸ்ரீனிவாசபுரமென்பது கண்ணமங்கலத்திலிருந்து ஆரணிக்குப் போம் வழியில் மூன்றுமயில் தூரத்திலுள்ள ஓர் சிற்றூர். உயர்ந்தும் தாழ்ந்துமுள்ள குன்றங்களும், அகன்றும் ஆழ்ந்துமுள்ள பள்ளத்தாக்குகளும் சூழ்ந்து, எங்கும் செடி-கொடி-விருக்ஷங்கள் நிறைந்து கண்ணுக்குப்பசுமையாகக் காணப்படும். இதன் தெற்கில் தெள்ளிய நீரோடுகூடிய நாகநதியானது என்றும் ஓடிக்கொண்டிருக்கும்.

இந்நாகநதிக்கரையில் விஷ்ணுகோயிலும், சிவன்கோயிலுமுண்டு. இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள வேளாளர் வீதி வழியே சென்றால் சிறிது தூரத்தில் கீழண்டை வரிசையில் தெரு முகப்பில் தென்னைமரங்களும், முருங்கைமரங்களும் சேர்த்துவைத்துள்ள கூரைவீடொன்று காண்போம். அவ்வீட்டின் முற்றத்தில் சுமார் ஐம்பதுவயதுள்ள ஒரு பெரியவர் உட்கார்ந்து, செவ்விளநீர்க்காய்களைச் சீவிக்கொண்டிருந்தார். இவர் பருத்த தலையும், தடித்த புயமும், அகன்றமார்பும், நெடிய உருவமும் உள்ளவர். தலையிலுள்ள சிறு குடுமி கறுத்திருப்பினும், முகத்தின்மயிர் முழுதும் வெளுத்துத்தோன்றியது. அவர் எதிரில் ஒரு மூங்கிற்கொம்பில் காவியேறிய வஸ்திரங்களிரண்டு காய்ந்துகொண்டிருந்தன. வேளாண்மைக்குரிய கலப்பை, நுகத்தடி, மண்வெட்டி, கட்டப்பாரைமுதலிய கருவிகள் விசேஷமாய்க் கிடந்தனவெனினும், அவைகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

அவர் கொஞ்சநேரத்திற் கெல்லாம், "இலட்சுமி! இலட்சுமி!" யென்றழைக்கவும், உடனே ஓரக்கண்பார்வையுடைய நீண்டமுகத்தோடு கூடி நாற்பத்தைந்து வயதாகக் காணப்பட்ட மாதொருத்தி, ஏழு வயதுள்ள ஒரு சிறு பெண் பின்தொடரக் கீழண்டைக் கதவைத்திறந்து வெளியில் வந்து அவர் பக்கத்தில் நின்றாள். பெரியவர் கையிலிருந்த கத்தியைக் கீழ்வைத்துத் தலை

நிமிர்ந்து, "இலட்சுமி, நாழிகை யிருபதாகியும் இன்னும் நமது பையனைக் காணோம். அவன் புறப்பட்டிருந்தால் இந்நேரம் வந்திருக்கவேண்டும்" என்றார்.

இலட்சுமி:—ஆமாம், வந்திருக்கவேண்டியதுதான். இன்று கட்டாயம் வருவதாக நமக்கு நேற்றுக்கிடைத்த கடிதத்தில் எழுதியிருந்ததே.

பெரி:—இன்றிருந்து போம்படி ஒருகால் மாமனார்நிறுத்தியிருக்கலாம்.

இலட்சுமி :— (வலக்கையை மோவாய்க்கட்டையில் வைத்து) நமது பையனைப்பார்த்துக் கிட்டத்தட்ட ஆறு பொங்கலாகின்றன. இந்த ஆறு பொங்கலாக அவனுடைய க்ஷேமலாபத்தைக் கடிதமூலமாகக்கண்டுகொள்ளுகிறோமே யொழிய நாம் உள்ளபடி யுணரோம். இடையில் அவனுக்கு என்னென்ன ஆபத்துகள் சேர்ந்தனவோ ? அவைகள் எவ்வாறு நீங்கினவோ ?

பெரி:—பெண்ணே ! எல்லாம் சிவன் செயல்.

இலட்சுமி:—நான் இந்த இரண்டு நாட்களாக எவ்வளவோ ஆசையுடன் எதிர்பார்த்தும் இன்னும் வரக்காண்கிலேன். அவன் பிரிவால் நமக்குண்டாகிய துன்பத்தை அறிந்தும், அவன் இவ்வித ஆலசியஞ் செய்யலாகுமோ? நமது தெய்வசிகாமணி மிக்கயோக்கியனென்றும், நம்மிடத்தில் அதிக அன்புடையனென்றும் நாம் எண்ணி, முடிவில் ஊரிலுள்ள மற்றப் பிள்ளைகளைப் போலவே நடக்கலானான். "பெற்றமனம் பித்து பிள்ளைமனங்கல்" என்பார்களே. அது உண்மைதான்.

பெரி:—பெண்ணே, அவன் நம்மைப் பிரிந்திருந்த காரணத்தை நான் பலமுறை உனக்குக் கூறியுள்ளேனன்றோ ? அவன்மேற் குற்றமில்லை. அவன் பிரிந்தது நம்முடைய நலத்தின் பொருட்டேயாம்.—இலட்சுமி, நீ யென்ன பைத்தியக்காரியா ? எல்லாம்போய் இன்றோ நாளையோ நமது பையன் வருவதாயிருக்கும்போது நீ என் அழவேண்டும் ?

அப்போது இலட்சுமி கண்களில் நீர் கலங்க அந்நீர் பெருகவொட்டாமல் மோவாய்க் கட்டையிலிருந்த கையையெடுத்துக் கண்களை நிமிட்டிக் கொண்டிருந்தாள்

ஓ நண்பர்களே ! நீவிர் உங்கள் வீட்டைவிட்டு வேற்றூர் போவதானால் அங்கே நீங்கள் புதிய நட்புப்பெற்று உங்கள் பெற்றோரை மறக்கக்கூடும். ஆனால் அவர்களோ வீட்டிலிருந்துகொண்டு நீங்கள் அணியும் ஆடைகளையும், அடிக்கடி பேசிய இடங்களையும் பார்த்துப் பெருமூச்சுவிடுவர். அவர்களுடைய உடலானது வீட்டிற் கிடப்பினும் உள்ளம் உங்களிடத்திலிருக்கும். அவர்கள் உண்ணும்போது உங்களைப்பற்றிப் பேசுவார்கள். படுக்கும்போது உங்களையே நினைவு கொள்ளுவார்கள். அவர்கள் உங்கள் பின்னே மனத்தைச் செலுத்தி உங்களுக்கு என்ன நேரிடுகிறதோ என்று பலவாறு எண்ணி ஏங்குவார்கள். நீங்கள் திரும்பவும் அவர்களிடஞ் சேர்ந்தாலொழிய அவ்வேக்கம் அவர்களை விட்டு ஒருபோதும் நீங்குவதில்லை.

சின்னேரமானதும் தெய்வசிகாமணி முன்னும், மரகதவல்லி பின்னும், அவர்களுக்குப் பின்னால் இருபதடி தூரத்தில் பெரியவோர் மூட்டையைத் தலையில் சுமந்துகொண்டு ஒரு கூலிக்காரனும் வந்துகொண்டிருந்தார்கள்.

தெய்வசிகாமணி, “ இதுதான்” என்று சொல்லி அவ்வீட்டுக்குட் புகுந்த போது, தன் வீட்டை யெண்ணித் தலைநிமிர்ந்து அவன் உடன் சென்ற மரகதவல்லி, அரிவுகாலில் தலைமோதி அந்நோயின் கொடுமையால் “ அம்மாடி” யென்றாள். அச்சந்தடி கேட்டுத் தெய்வசிகாமணி திரும்பிப் பார்த்து அவளுடைய தலையைத்தடவி, “ பெண்ணே! இது உன் மெத்தை வீடன்றே. கொஞ்சம் பார்த்துவரலாகாதா? உன் கணவன் வாழ்வது குடிசையென்பதை மறந்தனையோ ? மரகதம், இப்போதாவது குனிந்துவா. இந்த நடை அரிவுகால் இடிக்கும்” என்று சொல்லி, அவளை மெதுவா யழைத்துப் போனான். இவ்வளவில் முற்றத்திலிருந்த பெரியவரும், இலட்சுமியும் ஓடிவந்து தம்மகனையும், மருகியையும் கட்டிக்கொண்டார்கள். அப்பொழுது அவர்களுக்குண்டாகிய ஆனந்தத்தினளவை யாரே சொல்லவல்லார் ? கடலலைபோலும் அவர்கள் மனத்திலெழுந்த சந்தோஷத்தையும், துக்கத்தையும், அன்பையும், ஆச்சரியத்தையும் தமது கண்களினின்று மலையருவிபோற் பாய்ந்த நீராற் காட்டினார்கள். கூலிக்காரன் தான் தூக்கிவந்த மூட்டையை ஓர் மூலையில் வைத்துக் கூலிபெற்றுப் போனான். சற்றுப் பொறுத்துப் பெரியவர், “அம்மா மரகதவல்லி, உன் உடையெல்லாம் சேறாயிருப்பதென்ன ?” என்றுகேட்க, தன் மாமனாரோடு வார்த்தை யாடுவது வெட்கமென்னுங் காரணத்தினாலோ, அல்லது தாசீல்தார் மகளாதலால் தன் அந்தஸ்துக்குக் குறைவென்னுங் காரணத்தினாலோ. அவள் பதிலளிக்காமல் வடவண்டை வைத்திருந்த தூண்பக்கந் திரும்பினாள். உடனே தெய்வசிகாமணி, “ வரும் வழியில் சறுக்கி விழுந்தாள்” என்ன, அவன் தந்தை, “மகனே, மரகதவல்லி வீட்டைவிட்டு வெளியில்வந்தவளல்லளே. அப்படிப்பட்டவளை வயல்வழியாய் அழைத்துவரலாமா? வயலின் வரப்புகளில் இரண்டு மயில் தூரம் எவ்வாறு நடப்பாள்? சரி, சரி, இதற்குத்தான் இவ்வளவு நேரமானாற் போலிருக்கிறது. சாலை மார்க்கமாகப் பிரயாசையின்றி வரலாமே” என்றார்.

தெய்வ:—சாலை சுற்றாதலால் நான் வயல்வழி நேர்வழியென்றெண்ணி வந்தேன். அப்பா, முன்னம் கண்ணமங்கலத்திலிருந்து நம்மூருக்குக்கொண்டு வரும் ஒற்றடிப்பாதை இப்போது கழனிகளாயிற்றே அதென்ன ?

பெரி:—ஆறு வருடங்களுக்குமுன் இருந்ததுபோலவே இன்னும் இருக்குமா? இடையில் பெருமழை பெய்து வெள்ளம் வந்து அநேக மாறுதல்கள் உண்டாயின. காலத்தின் வலியை நீ அறியாய் போலும்.

தெய்:—ஆமாம். நான் பல தடவை பார்த்த விடங்களெல்லாம் இப்பொழுது என் கண்ணுக்குப் புதிதாகத் தோன்றுகின்றன. நமது கருப்பங் கொல்லையைச் சேர்ந்த செங்குன்றருகில் பிரியா தோழரைப் போலும் மருவியோடிய ஓடைகளிலொன்றிருக்க இன்னொன்றெங்கே? செங்குன்று பிளந்து கிடப்ப தென்ன ?

பெரி:— சென்றவருஷம் அச்சிறு மலையி விடிவிழுந்து மேலண்டை ஊற்று மறைந்து போயிற்று. மகனே, இது கிடக்கட்டும். அதோ விசாலாட்சி சுவர்மேல் சார்ந்து உன்னை நெடுநேரமாக உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறாளே. அவளிடம் நீ பேசலாகாதா ?

தெய்வசிகாமணி அங்கிருந்த எழுவயது சிறுபெண்ணையழைத்துத் தன் மடியிலுட்காரவைத்து, " தங்காய், தங்காய். உன்னை நான் இதுவரையும் கண்டுகொள்ளாமற் போனேன். நான் உன்னை விட்டுப் போனபோது ஒரு வயது குழந்தையா யிருந்தாய் இப்போது இவ்வளவு பெரியவளானாயே. கொஞ்சமாவது உனது அடையாளந் தெரிந்திலனே" என்று சொல்லி முத்தந் தந்தான். இவ்வளவில் இலட்சுமி ஒரு பெரிய செம்பில் தண்ணீர் கொண்டு வந்து தன் மகன் மருமகள் இருவரையும் காலலம்பச் செய்தாள். பெரியவர் தாம் வெட்டிவைத்திருந்த தெங்கிளங்காய்களை யெடுத்துத் தந்தார். பின்னர் உண்டானதும், தெய்வசிகாமணி தன்னைப்பார்க்கவந்த உறவினர்களிடத்தும், நேயர்களிடத்தும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

சிறுவயது தொடங்கிச் செல்வமாக வளர்க்கப்பட்டவ ளாதலால் மரகதவல்லியை மாமிவீட்டிலும் அச்செல்வங் குறையாமல் பார்த்தார்கள், பெரியவரும், பிறரும் எளிய உணவை யுண்பினும், மரகதவல்லிக்குமட்டும் நல்ல உணவு தந்தார்கள். எல்லா வேலையும் தாங்களே புரிந்து எவ்விதத்திலும் அவளுக்குக் கஷ்டம் உண்டாகாமற் செய்தார்கள்.

பெரியவர் நாடோறும் பயிர்வேலையைப் பார்த்துவர, தெய்வசிகாமணி அவருக்குதவியா யிருப்பான். இலட்சுமி வீட்டுவேலை யாவும் தானே செய்வாள். மரகதமோ உண்டநேரம்போகப் பகற்பொழுதெல்லாம் தான் கொண்டுவந்த வீண் கதைகளைப் படிப்பதிலேயோ, பாடுவதிலேயோ, விளையாடுவதிலேயே கழிப்பாள். அண்டைஅயல் வீட்டுச் சிறு பெண்கள் அவளிடம் வந்தால் அவர்களை அருகில்வைத்து விளையாட ஆசைதானெனினும் அவர்களுடைய ஆடைத்தாழ்வைக் கண்டு தூரப் போம்படி திட்டுவாள். மாமன் மாமி முதலியோர் தன் மரியாதைக்குப் பாத்திரர்களென்று இறையும் எண்ணாமல் அவர்களை அலட்சியஞ் செய்வாள். அவளுடையமாமன் மாமியார் புத்தியுரைத்து அவள் பிழையைத் திருத்தாது இஷ்டப்படி நடக்கவிட்டது அவள் கெடவேண்டுமென்றல்ல. நெடுநாள் துர்ப்பழக்கம் வெறும் வார்த்தையால் நீங்காதென்பதும் தாங்கள் நடந்துகாட்டி அதைப்போக்கவேண்டுமென்பதும் அவர்கள் கருத்து

தன் வீட்டில் தன்னுடைய தாய், தந்தை வார்த்தைக்கு எதிர் கூறுவதும், தந்தை அடிக்கடி கோபங்கொள்வதும், தான் வேறு தொந்தரைதந்து அக்கோபத்தைக் கிளப்புவதும், வேலைக்காரர் தங்களை முன்னே பூஷிப்பதும், பின்னே தூஷிப்பதும் அங்கே காணோம். எல்லோரும் தத்தம் வேலையை மனமுவந்துசெய்து மற்றையர்க்குஞ் சந்தோஷத்தை யளித்து வந்தார்கள்.

இன்னணமியல, ஒருநாள் இலட்சுமியம்மாளுக்குத் தலைவலியும் சுரமுங் கண்டிருந்ததால், சகலமும் பயின்ற தெய்வசிகாமணி சமையல்செய்ய வாரம்பித்துத் தன் மனையாளைக் கூடவிருந்து குற்றேவல் புரிய வேண்டினான். கூடத்திலிருந்த மரகதவல்லி, அடுப்புப்புகை தன் கண்ணிற்காகாதென்றுரைத்துத் தன் மரப்பாவைகளையும், மதுரைவீரன் சூதலையும் எடுத்துக் கக்

கத்திலிடுக்கி அன்னநடை நடந்துபோய்த் தெருத்திண்ணையிற் குந்தினாள். அங்கே அம்மரப்பாவைகளைக் கீழ்நிறுத்தி, நாளாவட்டத்தில் தனக்குத் தோழிகளான அயலகத்துச் சிறுமிகள் தோளிற் கைபோட்டு,

“ சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு-தாமரைப் பூவே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு-கோவில் புறவே சாய்ந்தாடு
பச்சைக் கிளியே சாய்ந்தாடு-பவளக் கொடியே சாய்ந்தாடு
சோலைக் குயிலே சாய்ந்தாடு-சுந்தர மயிலே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு-கற்பகக் கொடியே சாய்ந்தாடு
கட்டிக்கரும்பே சாய்ந்தாடு-கனியே பாலே சாய்ந்தாடு”

என்னும் பாட்டுப்பாடிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

தாயார் நோயால் வருந்தி யழுவதையும், மனையாள் விளையாடிச் சிரிப்பதையும் தெய்வசிகாமணி செவியுற்றுச் சினங் கொண்டு சமையலறை விட்டு வெளியிலோடி, “பெண்ணே, இதென்ன அழகு! குலமாதுக் குரிய குணங்கள் நான்கினையும் நீ கொத்தோடு விட்டனையோ? வீட்டில் உன் மாமி துன்பப்பட, நீ விலைமாதைப்போலும் வெளியிற்குந்தி விளையாடுவது முறையோ? வீதியிற் செல்லும் விடர்களைக் கண்ணுற்றேனும் உனக்கு வெட்கம் வரவில்லையோ? நீ வாசித்த பெண்ணுதலால் இத் துர்க்குணங்கள் நிறைந்தன போலும் ஆஹா! இக் காலத்திற் கல்வியின் அழகே அழகு? சூது வாது முதலியவற்றில் தேர்ச்சியைத் தருவதும், அச்சத்தையும் - நாணத்தையும் அடியோடு விலக்குவதும், இடம்பத்தைத் தந்து அகங்காரத்தை அதிகப் படுத்துவதும், வீட்டு வேலைக்கு உபயோகமற்றதாக்குவதும், நாஸ்திகம் பேசி நாவுலரச் செய்வதும், வீண்கதைகளைப் படித்துத் தலையை மயக்குவிப்பதும், ஏழைக் கணவருக்கு எல்லையற்ற பணச்செலவு வைப்பதும் கல்விதான். இத்தகைப் பாழுங்கல்வி நமது இந்து மாதருக்கு எந்நாளும் வேண்டாம் மரகதம்! இதோ பார். எழுத்துவாசனை யின்னதென்றறியாத எதிர்வீட்டு எல்லம்மாளுக்குள்ள அறிவும் வணக்கமும் உனக்கில்லையே” என்று சரமாரியாகப் பொழிந்து திரும்பவும் வீட்டுக்குள் சென்றான். அத்தறுவாயில் திண்ணைமேல் விளையாடிக்கொண் டிருந்த சிறுமிகளி லொருத்தி எதிர் வீட்டில் பெருக்கிக்கொண் டிருந்த மற்றொரு பெண்ணை ஆடுவதற் கழைக்க அவள், “என்னடி என்னை மரகதவல்லியென் றெண்ணவேண்டாம். நான் உங்களோடு விளையாடினால் என் வேலையை எவர் செய்வார்கள்? என் தாயார் கோபியாளோ?” என்றாள். இதைக் கேட்டதும் மரகதவல்லிக்குத் தன் புருஷன்மே லுண்டான கோபம்போய் வெட்கம் உண்டாயிற்று. அச் சிறுபெண்ணுக்குள்ள அறிவும் வணக்கமும் தனக்கில்லையென்றது உண்மையெனத் தானே தெளிந்து, கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அடுத்த பெண்கள் மேற் போட்டிருந்த தன் கைகளை யெடுத்துத் தன்தோண்மீதிருந்த அவர்களுடைய கைகளை விலக்கிச் சமையலறைக்குப் போனாள். அவளைக்கண்டதும் தெய்வசிகாமணி தான் சொன்ன சொற்களால் அவளுக்குப் புத்தி வந்ததென்றுன்னி, “பெண்ணே! நீ சமையல் செய்ய வந்தது நல்லதுதான். ஆனால் நீ தரித்துள்ள உயர்ந்த ஆடையோடு அடுப்பருகி லிருந்தால் அவை

கள் அழுக்கேறும். இப் பட்டுப் பாவாடையையும், அச் சல்லாத் தாவணியையும் அவிழ்த்துவைத்துத் தாழ்ந்த உடை யொன்று தரித்துவா” என்றான். அவள் தாழ்ந்த உடை தரிக்க நாணி, அவ்வாடையோடே சமையல் செய்ய ஆரம்பித்தாள். எந்நாளும் அவள் அடுதொழில் செய்தறியாதவளாதலால் அன்று அன்னத்தையும் பதார்த்தங்களையும் பாழ் செய்ததுமன்றி, தான் அணிந்திருந்த ஆடையையும், சிவந்த மேனியையுங் கரியாக்கினாள்.

எவ்வேலைக்கும் அநுபவமே பிரதானமென்றும், அவ்வநுபவ மின்றேல் பயன் படாதென்றும் தெய்வசிகாமணி எவ்வளவு எடுத்துரைத்தும் கேளாமல், மரகதவல்லி இரண்டாநாள் பாக சாஸ்திர மொன்றைப் படித்துச் சாமான்களைத் தூக்கியும் அளந்தும் சேர்த்திடினும், சாமான்கள் அதிகமாயும் பாண்டங்கள் சிறியதாயு மிருந்ததால் அன்றுஞ் சமையல் கெட்டது. அவள் அறியாமையே அதற்குக் காரணமென்று தெய்வசிகாமணி தேர்ந்து அவள் மேற் கோபியாமல் சாந்த வார்த்தைகளால் புத்தி உரைத்தான். அன்று முதல் மரகதவல்லியும் தன் நிலைமையை யொருவாறுணர்ந்து நாயகன் சம்மதப்படி நடக்க முயன்றாள். சிறுபெண்களோடு சேர்ந்து விளையாடுவது இழிவாகத் தோன்றியதால் அதை முற்றும் ஒழித்தாள்; கொண்டுவந்த புத்தகங்களைத் துண்டு துண்டாய்க் கிழித்தாள்; பொம்மைகளை யெடுத்துப் பெட்டியில் வைத்தாள்; வீணையை ஆணியில் மாட்டினாள்; சொக்கட்டான் பலகையைத் தூரவெறிந்தாள். குடித்தன முறைமைக்குரிய விதிகளைத் தன் மாமியிடத்தும், தன் வீட்டிற்கு வரும் மற்ற மாதர்களிடத்தும் கேட்டுத் தெளிந்து அங்ஙனஞ் செய்ய விழைந்தாள். ஆயினும் அடிக்கடி அவள் மனம் நல்ல உணவின்மீதும், உயர்ந்த நகையின்மீதும் செல்லும். சில சமயங்களில் தன் தாய் வீட்டிலிருந்த சீரை யெண்ணி ஏங்குவதுமுண்டு. தொட்டிற் பழக்கமானது சீக்கிரம் தொலையுமோ?

தங்கள் மருமகளிடத்தில் இவ்வித மாறுதலைக் கண்டபின் மாமி மாமனாருக் குண்டான சந்தோஷ மதிகமாம். ஆதியில் ஒன்றுக்கும் உதவாதவளெனத் தெரிந்தும், அவள் தங்கள் வீட்டிற்கு வந்திருப்பதே போதுமென்றெண்ணினார்களென்றால், இப்போது அவர்களுக்கு எவ்வாறிருக்குமென்பதை நாம் சொல்லவேண்டுவ தில்லையே.

ஏழா மதிகாரம்.

ஒண்கதிர் வாண்மதியுஞ் சேர்தலா லோங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

நாலடியார்.

ஓர் நாள், “சீனிவாசபுரம் ம-ள-ள-ஸ்ரீ மாணிக்கம்பிள்ளை யவர்கள் குமாரர் சிரஞ்சீவி தெய்வசிகாமணிபிள்ளை பார்வையிட்டு சௌபாக்கியவதி

மரகதவல்லி யம்மாளுக்குக் கொடுப்பது" என்று மேல்விலாச மெழுதிய கடிதமொன்று தெய்வசிகாமணிக்குக் கிடைக்க, அவன் தன் பத்தினியை யழைத்து, "பெண்ணே! இதோ உனக்குக் கடிதம் வந்திருக்கிறது. இது உன் தந்தையார் எழுத்தென் றெண்ணுகிறேன். தலைப்பில் அவசரமென் றிருப்பதால் இதை உடனே வாசி" என்றான். அவள் அந் நிருபத்தை வாங்கிப் பிரித்துப் பார்க்க அடியில் வருவாறு வரைந் திருந்தது:—

"வேலூர், 1880ௌ ஜனவரிமீ 30வ.

என் பிரியமுள்ள புத்திரியே,

நீ போய் இரண்டுமாதங் கடந்தும் உன் க்ஷேமத்தை விசாரிக்கவில்லை யென்று உனக்கு என்மேற் கோபமுண்டாகலாம். நான் அடியில் எழுதுவதைச் சாவதானமாய்ப் படித்தால் உண்மை புலப்படும்.

பிறந்தமுதல் பிரிந்திராத நீ வீட்டை விட்டுப் போன தினமே உன் அன்னைக்குக் குளிர்சுர முண்டாயிற்று. நாளுக்குநாள் வியாதியின் கொடுமை அதிகரிக்கிறதே யொழியக் குறைய வில்லை. அதனால் அவள் கண் குழைந்து முகம் வெளுத்துத் துரும்புபோலானாள். சுரத்தோடு இருமல் தோன்றி இரவும் பகலும் அவளை வாட்டுகிறது. அவளுக்கு அவுஷதம் வாங்கிக்கொடுக்க என் கையிற் காசில்லை. கூடவிருந்து உபசரணைசெய்யவும் ஆளொருவரு மிலர். அவள் அவஸ்தைப்படுவதைக் கண்டு மனம் விண்டு நான் தான் அவளுக்குப் பத்தியஞ்செய்து கொடுத்து வருகிறேன். எந் நாளும் வழக்கப்பட்டிராத நான் இப்பொழுது காலையிலெழுந்து வீட்டை விளக்குவதும், கரிசட்டிகளைக் கழுவுவதும், சமையல் செய்வதும், சில சமயங்களில் சாதத்தைக் கெடுப்பதும் உனக்குக் கேட்க விநோதமா யிருக்கும். ஆதியில் அரசனுடைய செங்கோலை அங்கையிற் றாங்கிய நான் இப்போது அரிவையைப்போலும் அடுப்பூதலாயிற்று. இது கிடக்கட்டும். மகளே, இன்னொன் றுகேள்.

முன்பு நூற்றெழுபத்தைந்து ரூபாயி லிருந்து என்னை முப்பதுரூபாய்க் குக் குறைத்தது உனக்குத் தெரியுமல்லவோ? இப்போது அந்த முப்பதுரூபாய்க்கும் மோசம் வந்தது. நான் சப்கலெக்டர் கச்சேரியில் குமஸ்தாவாகச் சேர்ந்த கொஞ்சநாளைக்கெல்லாம் எனக்கும் என் தலைவனுக்கும் விரோத முண்டாயிற்றென்றும், அவனுடைய இஷ்டப்படி நான் இணங்கி நடவாததே அதற்குக் காரணமென்றும் அடிக்கடி உன் தாய்க்குச் சொல்லிவந்ததை நீயும் கேட்டிருக்கலாம். அப்போது நான் விளையாட்டாக எண்ணியது இப்போது வினையாய் முடிந்தது. அவன் அவ்விரோதத்தை மனத்தில் வைத்துக்கொண்டு துரையிடம் போம்போதெல்லாம் என்மேல் இல்லாது பொல்லாது கூறி என் பிழைகளை யெடுத்துக்காட்டித் துரைமனத்தைக் கெடுத்ததால் துரை, நான் வேலையிற் சோம்பேறி யென்றும், உதவியற்றவ னென்றும், எதிர்த்துப் பேசுபவனென்றும் கலெக்டருக்கெழுதி என்னை வேலையினின்றும் நீக்கினர். என் னுத்தியோகம்போய் இன்றோடு இருபது நாட்களாகின்றன.

மகளே, இப்பொழுது என்னுடைய கதி யென்னவென்பதை அறிவாயோ ? இதை நான் கடிதமூலமாக உனக்குத் தெரிவிக்க வல்லவனல்லேன். என் உத்தியோகம் நீங்கினதறிந்து கடன்காரர்களனைவரும் நியாயசாலையில் வழக்கிட்டுத் தீர்ப்புப்பெற்று ஜப்தி கட்டளையோடு என்னைச் சூழ்ந்தார்கள். நம்மிடத்தில் விற்கக்கூடிய வென்னவோ அவையனைத்தும் ஒன்றுக்குப்பாதி விலையாய் விற்றுச் சில்லரைக்கடன்களை யெல்லாம் தீர்த்து வருகிறேனெனினும், புற்றீசல்போலப் புதிதுபுதிதாக அநேகர்கிளம்புகிறார்கள். இருபதுமுப்பது வாங்கியவர்க்கெல்லாம் வட்டிசேர்த்து இருநூறு, மூந்நூறாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்னவட்டியோ ? என்ன முதலோ ? ஒன்றும் அறியேன். வெட்கமேலீட்டால் நான் ஞாயஸ்தலத்திற்குப் போய்க்கடன் தீர்ப்பாகும்போது உண்மையைச் சொல்லவும் வலியில்லேன். என்செய்வது ? இது இப்படியிருக்க, என்னிடத்தி லொன்றுமில்லாமை யறிந்து, என்னை அவமானஞ் செய்யக்கருதி இருவர் வாரண்டுங் கையுமாகவந்து தெருமுகப்பிலொருவரும், புறக்கடையில் மற்றொருவருமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கையிலகப்படப்பயந்து நான் இரண்டுதினங்களாக மலஜலபாதைக்கும் வெளியில் நகராமல் கள்வனைப்போலும் பதுங்கிக்கொண்டிருக்கிறேன். இப்போது என்தலையை வெளியிற்கண்டால் போதும், கடன்காரர்கள் என்னைச் சிறைச்சாலைக்கு இழுத்துச்செல்லுவார்கள்.

என் நிலைமையோ இவ்வாறிருப்பதால் உன் தாய்க்கு இந்த இரண்டு நாட்களாய் அன்னந்தண்ணீர் அருத்துபவரிலர். பசிதாகத்துடன் நோயின் கொடுமையு மதிகமாகி அவள்படுகிற வாதையை என்னாற்சொல்ல இயலாது. இவ்வளவு துன்பத்தையும் இவ்வூரார் கண்டுங்கேட்டும் களிப்புற்று வருகிறார்களே யொழிய எங்களிருவருக்கும் 'அய்யோ பாவம்!' என்றிரங்குவாரிலர். ஓ என்மகளே ! இருபத்தைந்து மையிலுக்கப்பாலுள்ள நீ என் துக்கத்தை இன்னதென்றறிவாயோ ? அடிக்கடி என் மனத்திலுண்டாகும் எண்ணங்களைக்காண்பாயோ? என்னுடலை வருத்தும் பசிதாக நோய்களை யுணர்வாயோ?

இவ்வளவையும் பொறுக்கமுடியாமல் இந்நிருபம் வரையத் தொடங்கு முன்னம் தற்கொலை புரிந்துகொள்ளவும் எத்தனித்தேன். அன்னத்திற்காக உன் அன்னை போடும் அழுகுரலைக்கேட்டு அதைத் தவிர்த்தேன். அந்தோ ! நான் தற்கொலை செய்துகொண்டால் அவள்கதி யென்னவாகும்? அவள் இறப்பதோடு எடுப்பவர் கூட இல்லாமல் அவள் பிணம் நாறிக்கிடக்குமே. செய்வதின்னதெனத் தெரியாமல் சேற்றிற் பதிந்த யானையைப்போலும் தியங்குகின்றேன். என் தலைவிதி இப்படியுமாகுமா? மகளே, அழுகையென்பது இன்னதென்றுணராத நான் இப்போது இராப்பகலாகக் கடன் மடையைப்போலும் கண்ணீர் சொரிவதை நீ அறிவாயோ ? உன் அன்னை நம்முடைய கஷ்டகாலத்திற் கையிலில்லாவிடினும் கடன்வாங்கி ஊரிலுள்ள குருட்டுத் தெய்வங்களைக் கும்பிட்டுவந்தும் கடைசியில் அடைந்த பயனென்னவோ இதுதான். உன் அன்னை நோய்மலிந்தும், நான் கடன் மிகுந்தும் கஷ்டப்படலானோம். மகளே, நீ ஒரு பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்

தால் எங்களுடைய சங்கடகாலத்தில் ஏதேனும் உதவி செய்யலாகும். அய்யோ, அதுவுமில்லையே! ஆதியில் எங்கள் அறிவுகெட்டுப் பழைய உறவு போகலாதென்று ஒன்றுக்கும் உதவியற்ற ஓர் ஏழைக்குத் தொலைத்தோமே. நாங்கள் பலவிதத்திலும் பைத்தியக்காரர்களானோம்; பார்த்தபேரெல்லாம் எங்களைப் பரிகாசஞ் செய்கிறார்கள். என்ன செய்வோம்? எவரிடஞ் செல்வோம்? மகளே, நீ அழவேண்டாம். நான் இக்கடிதத்தை யெழுதி வீணே உனக்குத் துக்கத்தைத் தரலாகாதென்றும் முதலில் நினைத்தேன். ஆயினும் இப்போதுள்ள நிலைமையில் எனக்குத் தற்கொலை காவற்கூடமாகிய இரண்டனுள் ஒன்று சித்திப்பது திண்ணமாதலால் இக்கடிதமே கடைசியாமெனவெண்ணி எழுதலானேன்.

உன் தாய்க்கு உன்னிடத்திலுள்ள ஆசை அதிகம். அவள் தன்னுயின் உபத்திரவத்திலும் உன்னை மறப்பதில்லை.

இங்ஙனம்,

கவலைக்கடலில் மூழ்கிக்கலங்கும்

உன்பிரியமுள்ள தந்தை,

சி. சுந்தரம்பிள்ளை.

"மகளே, இன்னும் இரண்டு விஷயங்களெழுத மறந்தேன். பத்து ரூபாய் வாடகை கொடுத்துவந்த பழையவீட்டை விட்டு முன்னம் நமது குதிரைகள் கட்டியிருந்த கொட்டாரத்தில் குடியிருக்கிறோம் பொம்பாய் மரணநிதிக்கு இரண்டுமாதங்களாகப் பணம் அனுப்ப வழியில்லை. குறித்ததேதியில் பணம் அனுப்பத் தவறினால் நான் கட்டிய பணமனைத்தும் இழந்து போவதாய்ச் சொல்லுகிறார்கள். இத்தனை வருஷங்களாக இந்நிதியிற் சேர்ந்து முடிவில் அடையுஞ்சுகம் இதுவே. சி. சு."

இவ்வாறு அடிக்கடிதத்தை வாசித்ததும், மரகதவல்லி, "என் அம்மா! என் அப்பா!" என்று கோவென அலறிக் கீழே சாய்ந்தாள்; இரண்டுகைகளையுந் தலையிற் சேர்த்துக் கூந்தலை விரித்துப்புரண்டாள். கண்களில் நீர் ஊற்றுப் பெருகி அவளது அடர்ந்த கூந்தலையும், அழகிய ஆடையையும் நனைத்தோடியது. அருகிலிருந்த தெய்வசிகாமணி, அவளைத்தூக்கி யுட்காரவைத்துக் கண்களிலோடிய நீரையும், முகத்திலெழுந்த வியர்வையையும் துடைத்து, "பெண்ணே, மரகதம், துக்கமென்பது இன்னதென்றறியாமல் செல்வமாகத் தாய்வீட்டில் வளர்ந்த நீ இப்போது இவ்வாறு புலம்புவது எனக்குத் துக்கத்தை யுண்டுபண்ணுகிறது. நீ அழவேண்டாம், அழவேண்டாம்" என்றான்.

மரகதம், "என் அன்னை இன்னும் உயிரோடிருக்கின்றாளோ? என் தாதைக்கு இதுவரையில் என்னகதியாயிற்றோ? அவர்களுடைய நிலைமையையறிந்தும் இனி நான் சும்மாவிருப்பதெப்படி? இதோ நான் வேலூருக்குப் போகிறேன்" என்றெழுந்தாள். தெய்வசிகாமணி அவளுடைய கையைப் பிடித் துட்காரவைத்து, "மரகதம், நீ ஊருக்குப் போகிறேனென்கிறாயே. புகைவண்டிச் சத்தத்திற்கு என்னிடத்திற் பணமில்லையே. இந்தக் கொடிய வெயிலில் வேலூர்வரைக்கும் நீ நடந்துதான் போகவேண்டும். அப்படி நீ

கஷ்டப்பட்டுப் போயும் உன் தந்தையினுடைய கடனைத் தீர்க்கக்கூடுமோ? அல்லது உன் தாயினுடைய நோயைப் போக்கமுடியுமோ? இவ்விரண்டனு ளொன்றேனும் இயற்ற உன்னிடத்தில் திறமிருந்தா லொழிய நீ போய் என் செய்வது? கஷ்டத்தின்மேல் கஷ்டமாகுமன்றோ? அவர்களே அன்னத் திற்கு அலையும்போது உனக்கு எங்கிருந்து போடுவார்கள்? இவையெல்லாம் யோசித்துப்பார்.

மர:—எனக்கு அன்னம் வேண்டுவதில்லை. பட்டினி கிடக்கிறேன். அவர்களைப் பார்த்தலொன்றே சாலும்.

தெய்:—மரகதம், நன்றாயிருக்கிறது. அவர்களைப் பார்த்தலொன்றே உன்பசியைத் தீர்க்குமென வைத்துக்கொள்ளினும், நீ இவர்களுக்கு ஆற்று முதவியென்ன? உன்னைப்பார்த்து அவர்கள் இன்னும் வயிறு எரிவதற்கோ? பெண்ணே, நீ அழவேண்டாம். இவ்வுலகம் துக்கசாகரமாம். எரிவாய் நரக மென்பதும் இதுவே. இதன் வயப்பட்டு அலையாதவர் ஒருவருமிலர். நம்போன்ற ஏழைகள் கூலிவேலை செய்து பகற்பொழுது வருந்துகின்றன ரென்றால், தனவான்கள் இராப்பொழுதும் தூக்க மின்றிப் பலவித விசார மடைவார்கள். பிறவியே துக்க மாதலால், இவ் வுலகிற் பிறந்த நமக்கு இது இயற்கை யென்றெண்ணி நாம் என் செய்வோமென்றேங் காமல் அதனைச் சந்தோஷமாகக் கொள்ளவேண்டும். பெண்ணே, என் இளமையிலிருந்து எனக்கும் பல துன்பங்க ளிருந்தன. ஆயினும் அவற் றை நான் பொறுமையுடன் அநுபவித்துத் தீர்க்க முயன்றேன். அவை கள் துன்பங்களாக எனக்குத் தோன்றில. நீயும் அவ்வாறுசெய்ய எத் தனித்தால் உன் துன்பமும் விலகும் உன் பெற்றோர்க்காக நீ வீணே மனம் வருந்தவேண்டாம். நீ ஆற்றும் உதவி அவர்களுக்கு ஒன்றுமில்லை. வேண்டுமானால் நீ கழுத்தில் தரித்துள்ள இவ்விரண்டு பொற் காசை யும் அனுப்பு; இக் கஷ்டகாலத்தில் அவர்களுக் குதவியாகும்" என்றான். மரகதவல்லி தன் பெற்றோர்க்காக எவ்வளவோ வருந்திடினும் நகை யிடத்துள்ள ஆசையை இன்னும் ஒழித்தில ளாதலால் கணவன் கூறி யபடி பொற்காசைத் தர மனம் வரவில்லை அதற்குள் அவனுடைய தந்தைவந்து சங்கதி தெரிந்து, "எல்லாஞ் சிவன்செயல் ; நம்மைக் காப்பது அவருடைய பாரம்" என்றார்.

துக்கமானது என்றும் ஒரேதன்மையுடையதல்ல. நாளுக்கு நாள் அதன் ஆற்றல் தேய்பிறை போலும் குன்றும். தாய்தந்தையர் விசனத்தில் தன்னை மறந்த மரகதவல்லி தான்போய் அவர்களுக்குச் செய்வதொன்று மில்லை யெனக்கண்டு, நாளளவில் அவ்விசனத்தை அகற்றினாள். வரவர அவள் தன் நிலைமையை யுணர்ந்து அந்நிலைமைக் குரியபடி நடக்கலானா ள். பெண்களுக்கு வீடே கைலாசமென்றும், வேலைசெய்வதே தருமமென் றும் அவள் எண்ணி எந்நேரமும் வேலையுங் கையுமாகவே இருப்பாள். வயது தளர்ந்த தன் மாமி மாமனார் ஏதேனும் வேலை செய்யப்புகுந்தால் உடனே அவ்வேலையைத் தான் வாங்கிச்செய்வாள். அயல்வீட்டு வாயாடிப் பெண்கள்

வந்தால் அவர்களோடு வார்த்தையாடிப் பொழுது போக்காமல் தன் சொந்த வேலையிற் கவனமாயிருப்பாள். அவளுக்குப் புருஷனிடத்தில் பத்தியும், அந் நியரிடத்தில் நாணமும் உண்டாயின; அவற்றோடு பெரியவர்க ளிடத்தில் வணக்கமும், பிச்சைக்காரர்களிடத்தில் இரக்கமும் எழுந்தன. வரவர அறி வு-அன்பு - அடக்கமாதிய நற்குணங்கள் பிறந்து வளர்ந்தன.

எல்லாத் துர்க்குணங்களையும் பூஷணமாகப் பூண்ட மரகதவல்லிக்கு இரண்டு மூன்று மாதங்களில் இவ்வித மாறுத லுண்டானது நமது கதை வாசிப்பவர் ஆச்சரியமெனக் கொள்ளினும், சற்றுக் கவனிக்குமிடத்து இது சாதாரணமாகக் காணப்படும். வறுமையும் கூட்டுறவுமே இதற்குக்காரணங் களாம். இவ்விரண்டனுள் வறுமையானது நமது நிலைமையை யுள்ளபடி உணர்த்த, கூட்டுறவென்பது நமது நண்பருடைய குணத்தைத்தருகின்றது. ஆகவே மரகதவல்லி, பகலவன் கிரணம்பட்டுப் பல நிறங்களையடையும் பூவை ப்போலவும், பூவோடு கூடிமணங்கமழும் நாரைப்போலவும், தான் தின்னும் தழையின் மயத்தைப்பெறும் பூச்சியைப் போலவும் நல்லவரைச் சேர்ந்து அவர்களுடைய குணத்தையடைந்து அதனை விர்த்தியாக்கினாள். குடித்தன விஷயத்தில் அவளுக்குண்டாகிய கருத்தை அடியிற் கூறும் திருஷ்டாந்தத் தால் அறியலாம்.

ஒருநாள் தெய்வ சிகாமணி தன் பெண்சாதியை நோக்கி, "மரகதம், சிதம்பரம் நடேசரைத் தரிசனஞ்செய்துவர எண்ணுகிறேன். என் பெற்ற வரும் சம்மதித்திருக்கிறார்கள்" என்ன, மரகதவல்லி, "நாதா, சிதம்பரம் செல்ல வேண்டுமானால் நாற்பது ஐம்பது செலவாகுமே. கையிலொன்று மில்லாத நாம் கடன்தானே வாங்கவேண்டும். நம்முடைய எளிய நிலைமை யில் இது வீண்செலவாகத் தோன்றுகிறது. இதைச் சற்று யோசியுங்கள்" என்றாள். தன் மனையாளுக்குக் குடித்தனத்தில் கவன முண்டானதைக் கண்டு தெய்வசிகாமணி களிப்படைந்து, "மரகதவல்லி, என் தாய் தந்தை யர் இதுகாறும் ஊரைவிட்டு வெளியிற் போனவரல்லர். அவர்கள் வயது முதிர்ந்த பருவத்தில் தீர்த்த யாத்திரை செய்வது புண்ணியமன்றோ? கடவு ளுக்காகக் கடன் படுவதில் குற்றமில்லை" என்றான்.

மர:—ஆமாம், என் தாயார் கடவுளுக்காக வாரம் இருமுறை பட்டினி கிடந்தும், கையிலில்லாவிடினும் கடன் வாங்கிச் செலவுசெய்தும் அடைந்த பயன் தாங்கள் அறிந்ததுதானே. எங்களுடைய குடும்பத்தின் செய்தியைத் தெரிந்த பின்னும் எனக்குக் கடவுளிடத்தில் பத்தியும் உண்டாமோ?

தெய்வ:—அப்படியன்று, பெண்ணே அடிக்கடி நமக்குச் சங்கடம் வரு வது கடவுளுடைய காரியமன்று நாமே தேடிக்கொண்ட கருமத்தின் பயனு ம். ஆகவே அது கடவுளால் நேர்ந்ததென்று அவரை நோவுதல் தவறு. தாயி னும் அன்புள்ள தயாபரன் நமக்குக் கேடுசூழ்வது கூடுமோ? நமக்குச் சங்க டம் வருகிறதென்று நம்முடைய பத்தியைத் தவிர்க்கலாகாது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது பழமொழி. இப்போது உங்களுக்குத் துன்பம் நேர்ந்ததால் அத்துன்ப மொழிந்து இனி எந்நாளும் இன்பம் வரா தென்பது உன் எண்ணமோ?

மர:—தங்களுடைய சம்மதப்படியே ஆகட்டும்.

வேற்றூர்போய் அறியாத பெரியவருக்கும் பெரியம்மாளுக்கும் சிதம்பரம் போவது சந்தோஷத்தைத் தந்தது. அன்று மறுநாள் யாவரும் பிரயாணத்திற்கு ஆயத்தமானார்கள்.

எட்டா மதிகாரம்.

நல்லாரைக் காண்பதுவு நன்றே. நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே.—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே. அவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

மூதுரை

இவ்விளவேனிற் காலத்தில் இன்று காலை என்ன உல்லாசமாயிருக்கின்றது! மல்லிகை முல்லை முதலிய மலர்க்கொடிகள் பூத்தும், மகிழ்புன்னை ஆகிய மரங்கள் தழைத்து முள்ளன. பறவைகள் கிளைகளிற் படிந்து பாடுகின்றன. வண்டுகள் தேனருந்திக் களிகூர்கின்றன. இளந்தென்றலோ அத்தாமரை யோடையின் நீரைப்பருகி மகரந்தப் பொடியைப் பூசி மெல்ல மெல்ல வந்து நம்மைத் தழுவுகின்றது. மூன்று பக்கம் பானிறப் பனிமலை சூழ்ந்த அந்தப்பள்ளத்தாக்கில் மிருதுவும் புதியதுமான புற்களும், அவற்றினிடையிடையே பொன்போற் றுலங்கும் பூக்களையுடைய ஆவாரஞ் செடிகளும் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. சில சிறுவர் அவ்வாவாரங் கொத்துகளைப் பறித்தும், துள்ளிப்பறக்கும் வெட்டுக்கிளிகளைப் பிடித்தும் விளையாடுகின்றனர். அப்பால் மாடுகள் ஒருபுறமும் ஆடுகள் ஒரு புறமும், நிரை நிரையாக நின்று மேய்கின்றன. அதோ அந்த மாமரத்தின் பைந்தளிர்களையும், அவற்றின்மேல் தேர்போல் நிற்கும் பூக்களையும், மரகதங்களெனக் கீழ்தொங்கும் காய்களையும் பாரும். கரையிலுள்ள மலையினிழலால் இவ்வேரி நீரிற்பாதி கருமையாகக் காண்பதும், சூரியனொளியாற் பாதி தகதகவென மின்னுவதும், இப்புலங்களின் நெற்பயிர் காற்றிலசைவதும் விநோதத்தைத் தருகிறதன்றோ?

இக்காட்சியினழகைப் பெரியவரும், பெரியம்மாளும் உள்ளபடி யுணர்ந்து அநுபவியாதுவிடினும், தோன்றியதெல்லாம் புதிதானதுபற்றிச் சந்தோஷத்தைத்தர அவர்கள் புகைவண்டியி னிருமருங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துச்சென்றார்கள். மரகதவல்லி தன் தந்தையுடன் பலகால் சுற்றுப்புறங்களுக்குப் புகை வண்டியிற் பிரயாணஞ் செய்ததை நினைவுகூர, அவள் மனத்தில் எண்ணாத எண்ணங்கள் எழுந்ததால் சிறிதுநேரம் கதவின்மேற் கையையூன்றி அதன்மீது கன்னத்தைச் சாய்ப்பதும், சிறிதுநேரம் தலைநிமிர்ந்து எதிரில் காண்பனவற்றைச் சும்மா பார்ப்பதுமாயிருந்தாள். தெய்வசிகாமணியோ இவ்வதிசயங்களைக் கண்டு மகிழ்வு கூர்ந்ததன்றி வழியில் பெரிய ஊர்களும் உயர்ந்த கோபுரங்களும் எதிர்ப்படுந்தோறும், அவற்றைப் பற்றித் தான் அறிந்த மட்டும் தாய் தந்தையர்க் குரைப்பான்.

இங்ஙனம் அவர்கள் அநேக ஊர்களைக் கடந்து சிதம்பரத்தை அணுகிய போது மாலை ஆறுமணியாயிற்று. தெய்வசிகாமணி வண்டியினின் றிறங்கவும், தலையிற் பாகையும், மார்பிற் பில்லையுந் தரித்த இரண்டு சேவகர்கள் ஓடிவந்து கும்பிட்டு ஒருவன் விசாலாட்சியையும் மற்றொருவன் மூட்டையையு மாகத் தூக்கிக்கொண்டார்கள். அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த புகைவண்டிச் சாலை யதிகாரியும், மற்றுஞ் சில உத்தியோகஸ்தரும் தெய்வசிகாமணியைக் கண்டதும் வந்தனஞ்செய்ய, அவன் அவர்களோடு கொஞ்ச நேரம் இங்கிலீஷில் ஏதோ பேசிப் பின்னர் சேவகர் முன்சொல்ல, பெற்றோரும் பெண்சாதியும் பின்தொடரச் சாலையின் வெளியிலேகி அங்கே காத்துக்கொண்டிருந்த குதிரைவண்டியிலவர்களை யேற்றித் தானும் கூடக்குந்தினான். சேவகரிருவரும் சாமான்களை யெடுத்துச் சென்றார்கள். வண்டி போம்பொழுது வழியிற் சந்திப்பவர்களனைவரும் வணக்கமாய் நின்று தெய்வசிகாமணிக்கு வந்தனஞ் செய்தார்கள். வண்டி கடைத்தெருவைத் தாண்டி வடக்கு மாடவீதியே சென்று மேற்பாலுள்ள சின்னதம்பிராயர் தெருக்கோடியில் நாற்புறமும் மதில்களும் மரங்களுஞ் சூழ்ந்து தெற்கைப் பார்த்த மாளிகை யருகில் நின்றது. தெய்வசிகாமணி யிறங்கி விசாலாட்சியைத்தூக்கிக்கொண்டு தன் பெற்றோர் முதலியோரைப் பின்னே வரும்படி கூறித் தான் வீட்டிற்குள் நுழைந்தான். மரகதவல்லியும், அவளுடைய மாமி மாமனாரும் மதில் வாயிலைத் தாண்டி மெதுவா யுள்ளேபோய் எட்டிப் பார்த்தார்கள். எதிரில் நடையும், அதற்கப்பால் கூடமும், வலப்புறமும் இடப்புறமும் நீண்ட இரண்டறைகளுமிருந்தன. நடையோரத்தில் சிறுமட்சாடிகளில் நானாவித புட்பச் செடிகள் வைத்திருந்தன. கூடத்தைச் சுற்றியிருந்த நான்கு வாயில்களின் மேலும் நான்கு சித்திரப்படங்கள் மாட்டியிருந்தன. கூடத்தின் நடுவில் தொங்கிய கண்ணாடி விளக்கினொளியும், சுவரிற்பூசியிருந்த சுண்ணாம்பின் வெண்மையுஞ் சேர்ந்து சூரியனைப்போலுந் துலங்கியதால் வடக்கிலிருந்தது இலட்சுமியென்றும், கிழக்கில் பரமேஸ்வரனென்றும், தெற்கில் சரஸ்வதியென்றும், மேற்கில் கிருஷ்ணனென்றும் எவரும் எளிதில் சொல்லக்கூடும். கீழே சிவப்புங் கருப்புங்கலந்த கோடுகளுள்ள அழகிய கம்பளமொன்று விரித்திருந்தது.

கீழண்டை அறையின் சுவரையணைத்து ஓர் அலமாரியும், அடுத்து ஒரு மேசையும், மேசைக்கெதிரில் நாற்காலியொன்றும் போடப்பட்டிருந்தன. அலமாரியில் புத்தகங்களும் மேசைமீது புட்டிகளும் வரிசையாயடுக்கி யிருந்தன. மேலே பெரிய கடிகாரம் வைத்திருந்தது. ஓர் மரக்கொம்பில் தலைப்பாகையும், சட்டைகளும் மாட்டியிருந்தன. வடவண்டைச் சுவர்மேல் விநாயகர் படமொன்று தொங்கிற்று. மேலண்டை அறையில் ஒரு பெட்டியும் இரண்டு கட்டிலும் தவிர வேறொன்றுங் காணோம்.

கூடத்துட் சென்ற தெய்வசிகாமணி தன்பெற்றோரும் மனைவியும் பின்வரக்காணாமல் சங்கதி யென்னவென்றறிய வெளியில் வந்தான். உள் நுழையப்பயந்து நடையில் நின்றவண்ணம் எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டிருந்த அவர்களை யுள்ளே அழைத்துப்போய்க் கம்பளத்தின்மேற் குந்தச்சொன்

ஞன். மரகதவல்லி மாத்திரம் உட்காராமல் வடக்குவாயின் முகப்பிற்போய்த் தலைகுனிந்தவாறு நின்றுகொண்டிருந்தாள். சற்றுப் பொறுத்து கறுத்த மேனியையுடைய ஒருவன் வந்து, “சாப்பாடு தயாராயிற்று, வாருங்கள்” என்று சொல்ல, தெய்வசிகாமணியும், மாணிக்கம்பிள்ளையும் எழுந்திருந்து குளித்துப் பிறகு வடபாலுள்ள சமையலறையில் உண்டார்கள். பின்பு மரகதவல்லியும், இலட்சுமியும், விசாலாட்சியும் சாப்பிட்டார்கள். இவ்வளவில் கீழறையிலிருந்த கடிகாரத்தில் ஒன்பதுமணி அடித்தது. தெய்வசிகாமணி சிறிது நேரம் வெளியிலுலாவி மேலறையிற் போட்டிருந்த கட்டில்களில் இரண்டைக் கூடத்திற் கொண்டுவரச்செய்து தாய் தந்தையரையும் தங்கையையும் படுக்கச்சொல்லித் தான் அவ்வறையிற் புகுந்து அங்கு கிடந்த மற்றொரு கட்டிலிற் குந்தி மனைவி வரவுக்காக எதிர்ப்பார்த்திருந்தான். நெடுநேரமாயும் அவள் வாராததால் இரண்டு தடவை “மரகதம், மரகதம்” என்று கூவ, சமையற் கூடத்தில் தனியே யுட்கார்ந்துகொண்டிருந்த மரகதவல்லி எழுந்துபோய்க் கணவனருகில் வணக்கத்துடன் நின்றாள். தெய்வசிகாமணி, “பெண்ணே, இது உனது மச்சுவீட்டைப்போலில்லையோ ? இன்னும் என்மீது அருவருப்போ?” என்று சொல்லிச் சிரித்து அவளுடைய கையைப்பற்றிக் கன்னத்தில் முத்தமிட்டான்.

மரகதவல்லி முகத்தில் சிறிதும் நகைதோன்றிலது. அவளுடைய ஊன்றிய பார்வையும், பரந்தநெற்றியும் ஆலோசனையை அறிவித்தன. புகைவண்டியிலிருந் திறங்கியது தொடங்கி நடப்பன யாவும் அவளுக்கு விபரீதமாகக் காணப்பட்டன. இரண்டொருநாள் தங்கிப்போக வந்தவர் குதிரைவண்டியிலேறிப் பங்களாவில் ஏன் குடியிருக்கவேண்டுமென்றும், கையிற் பொருளில்லாதிருந்தும் ஏன் இந்த வீண்செலவென்றும் தன் புருஷனைக் கேட்க இருமுறை எத்தனித்தாளெனினும் ஏதோ எண்ணிச் சும்மாவிருந்தாள்.

பொழுது விடிந்ததும் அவ்வூரிலுள்ள அனேக கனவான்கள் கையில் எலுமிச்சை மா முதலிய பழங்களுடன் தெய்வசிகாமணியைக்கண்டு அவன் சுபத்தையும், தாய் தந்தையருடைய சுபத்தையும் விநயமாக விசாரித்துச் சென்றார்கள். தெய்வசிகாமணி காலைக் கடன்களை முடித்துக் கீழறையிலிருந்த பாகையுஞ் சட்டையுந் தரித்துக் காலில் பாதரட்சையணிந்து கரத்திற் குடையேந்திக் கூடத்தில் வந்து பெற்றோர்க்கிறைஞ்சி அவர்களுடைய ஆசிர்வாதம்பெற்று வைத்தியசாலைக்குப் போய்வருவதாகச் சொல்லுமளவில், இரண்டுபேர் “அம்மா, அப்பா” என்று அலறும் ஓர் சிறுவனைத் தூக்கிவந்து, தெய்வசிகாமணியைப்பார்த்து, “சுவாமி, நேற்றுச் சாயந்திரம் சுவர்மேலேறி விழுந்து இவனுடைய முழங்கால் முட்டி முறிந்துபோயிற்று காலைமுடக்கவும் நீட்டவும் முடியவில்லை. நாங்கள் எத்தனையோ வைத்தியங்கள் செய்தும் பயனின்றி நோயின் வலிமிகுந்து ஓயாமற் கத்துகிறான். என்னசெய்வோம்!” என்றுகூறினார்கள். தெய்வசிகாமணி பையனைக் கீழே படுக்கவைத்துச் சற்றுநிதானித்துத் தன் அன்னையை யழைத்துஓர் மாம்பழம் எடுத்துவரப் புகன்று கொண்டுவந்ததும் அதைவாங்கி, “ தம்பி, இப்பழம்

நன்றாயிருக்கிறதா சொல்லு" என்று சிறுவன் வாயில் வைக்க, அவன் அதை யுண்ணுஞ் சமயநோக்கித் தன் வலக்கையால் முழங்கால் முட்டியைத் திருப்பி, "குழந்தாய், பழம் எப்படியிருக்கிறது ? எழுந்திரு" என்றான். பையன் நோயற்றவன்போலக் காலை யூன்றி எழுந்திருந்தான். தெய்வசிகாமணி கீழண்டை அறையின் மேஜைமேல் வைத்திருந்த புட்டி யொன்றை யெடுத்துவந்து அதிலிருந்த தைலத்தில் கொஞ்சம் முழங்காலில் தடவிப் பையனையும் வந்தவர்களையும் பார்த்து, "குணமாயிற்று. இனிப்போகலாம்" என்றுரைத்துத் தான் வெளியே போனான்.

மணி ஏறக்குறைய எட்டானதால் மரகதவல்லி சமையல் செய்ய வேண்டி அங்கிருந்த மனிதனைச் சமையல் பாத்திரங்கள் எங்கே யென்று கேட்க அவன், "அம்மா, வேலையாள் நானிருக்கவும் தாங்கள் ஏன் தொந்தரவுபடவேண்டும் ? சும்மா இருங்கள். சமையல் நடந்துகொண்டிருக்கிறது" என்றான். அத்தறுவாயில் அக்கம்பக்கத்துப் பெண்கள் ஐவர்வந்து பெரியம்மாளிடத்தில் குளிர்ந்த வார்த்தையாடிப் பின் மரகதவல்லியை யணுகி மிகவும் மரியாதையாக க்ஷேமம் வினவி, 'அம்மா, நாங்கள் புதியவரெனினும் நீர் எங்களுக்குப் பழகியவராகத் தோன்றுகிறீர். எல்லா நற்குணங்களுக்கும் உறையுளாய் உயிர்களிடத்து அளப்பரும் அன்புடையவராகிய நமது டாக்டருக்கு வாய்த்த மனைவியார் எவ்வாறிருப்பா ரென்று நாங்கள் அடிக்கடி சிந்தித்து மனத்தில் ஒருருவமைத்து உங்களை நேரிற் கண்டு களிக்க நாடோறும் எதிர்பார்த்துவந்தோம். உங்கள் பாக்கியமே பாக்கியம்! கும்பிடுந் தெய்வமென்று உங்களுடைய புருஷரைக் கொண்டாடாதவர் இவ்வூரில் எவரிருக்கின்றார் ?" என்று பிரியமாய்ப் பேசினர். மரகதவல்லி ஆச்சரியத்தால் விடையளிக்கத் தோன்றாமல் மௌனமானாள். தன் கணவன் ஏதோ கொஞ்சம் இங்கிலீஷ் வாசித்தவனெனினும் பரீட்சை யொன்றுந்தராதது தனக்குத் தெரியும். அவ்வாறிருக்க அவரைக் கண்டவர்களெல்லாம் வணங்குவதும், அநேகர் காணவருவதும் எப்படி? முட்டி நழுவிய பையனைக் குணப்படுத்திய தெவ்விதம்? பின் உடுத்து வைத்தியசாலைக்குப் போவதாய்ச் சொல்லிப்போனதும், இப்பொழுது தன்னிடம் வந்த பேர்கள் டாக்டர் என்று கூறியதும் எங்ஙனம்? தாங்கள் சிங்காரமாளிகையிற் குடியிருப்பதும் தான் ஒருவேலையுஞ் செய்யவிடாமல் வேலைக்காரர் செய்துவருவதும் ஏன்? இவற்றையெல்லாங் காண அவளுக்கு மேன்மேலும் ஆச்சரியம் விளைத்ததேயன்றி உண்மை விளங்கவில்லை.

ஒன்பதா மதிகாரம்.

மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார்,
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்,
கருமமே கண்ணுயினர்.
நீதிநெறிவிளக்கம்.

இப்பொழுது மரகதவல்லியைப்போலவே நங் கதையை வாசிப்பவரும் சங்கதியறிய ஆத்திரப்படுவர். இதை நாம் சொல்வதற்குக் கதையின் பின்னே நெடுந்தூரம் போகவேண்டும்.

மூன்றும் அதிகாரத்தின் முடிவில் தெய்வசிகாமணி தன் மாமனர்மீது கோபித்து வீட்டைவிட்டு வெளியிற் படர்ந்ததாகக் கூறியிருந்தோம். சென்னைப் பச்சையப்பன் பாடசாலையில் ஏழைப் பிள்ளைகளுக்குத் தர்மத்திற்குக் கல்வி போதிக்கிறார்களென்ற செய்தி கேட்டுத் தான் எவ்வாறேனும் பிரவேச பரீட்சையாவது தந்து மாமனைப்போல ஓர் உத்தியோகம் வகிக்க வேண்டுமென்னும் ஆசை பிடித்து அவன் நேரே சென்னப்பட்டணம் சென்று அப்பாடசாலைக் காரியதரிசியைக் கண்டான். அவர், தேவையான சிறுவர்கள் முன்னமே சேர்ந்திருக்கிறார்களென்றும், இனிப் புதிதாயெடுப்பதில்லையென்றும் சொல்ல, தெய்வசிகாமணி சம்பளம் கொடுத்துப் படிக்க வழியின்றி அவ்வெண்ணத்தை யகற்றினன். அவன் கொண்டுவந்த சிறிது பணமும் நாலைந்து நாட்களில் செலவழிந்துபோக அன்னத்திற்கு அலைச்சலுண்டாயிற்று. இந்துக்களுக் கிருக்கவேண்டிய பரோபகாரமொழிந்து மேனாட்டு நாகரீகத்தாலாய சுயநலம் பெருகிவரும் சென்னை நகரில் அவனுக்கிரங்கி ஏனென்று கேட்பவரெவருமிலர். கச்சேரியில் ஒன்றைப்பார்த்துப் பிழையின்றி யெழுதவும், சாதாரண கடிதங்கள் வரையவும் போதுமான கல்வி யிருந்திடினும் சிபார்சில்லாமையால் சேர்வதற் கியலவில்லை. பின்னர் அவன் அவ்வூரிலுள்ள சில பெரியோர்களைக்கண்டு அவர்கள்பால் தன் ஏழ்மையைப் புகன்று உதவிபெற முயன்றான். ஆயினும் அவ்வாறு சென்ற போதெல்லாம் அவர்கள் வேலையா யிருக்கிறார்களென்றோ, வெளியில் உலாவப்போ யிருக்கிறார்களென்றோ, இது சமயமல்லவென்றோ, அடிக்கடி வந்து தொந்தரவு செய்யவேண்டாமென்றோ விடை கிடைத்ததன்றிக் காசொன்றுங் கிடைத்திலது. தெய்வசிகாமணியை நாம் செம்மையா யறிவோம். ஒருவரிடத்தில் தலைகுனிந்து இச்சகம்பேசி உதவி யடைவதென்பதை அவன் உள்ளமற வெறுத்தவன். வறுமையின் கொடுமையால் அவன் இப்போது இன்னணஞ் செய்ய நேர்ந்தது. ஊரிலிருந்திடின் ஏதோ ஒரு வேலைசெய்து தன் உறவினரோடு சுகமாயிருக்கலாமே யென்று திரும்பிச் செல்லவும் நினைத்தான். ஆனால் தன் கையிற் காசின்மையும், மாமனரிடங் கூறிய வீரவார்த்தையும் அவனுக்குக் கிலேசத்தை யுண்டாக்கி அந்நினைவை மாற்றியது. இங்ஙனம் சிலநாள் சிறுமையடையக் கடைசியில் ஓர் வர்த்தகசாலையில் மாதம் ஐந்து ரூபாய் கணக்குப்பிள்ளை அலுவல் கிடைத்தது.

அவ்வலுவலி லமர்ந்ததும் அன்னவிசாரந் தொலையவே கொஞ்சக்காலம் சுகமாயிருந்தா னெனினும், பிறகு தான் எத்தனை வருஷம் இவ்வாறிருப்பதென்றும், தன் ஏழைக் குடும்பத்தை எங்ஙனம் காப்பதென்றும், மாமனாரிடத்திற் பேசியசபதம் எப்படி முற்றுப் பெறுவதென்றும் எண்ணம் பிறந்து அவன் மனத்தைப் புண்படுத்த ஆரம்பித்தது.

இன்னணமியல, சென்னை வைத்திய வித்தியாசாலையில் அபாத்திகரி வகுப்பிற் பிரவேசிப்பவர்க்குப் பகிரங்கமான போட்டிப்பரீட்சை (Competitive Examination) நடக்கப்போகிறதென்றறிந்து தெய்வசிகாமணி வேண்டிய நூல்களைப்படித்து அப்பரீட்சைக்குச் சென்றான். பரீட்சை தந்த பத்தாநாள் அவன் அதில் ஒப்பேறியதாகவும், அப்பாத்திகரி வகுப்பிற்சேரு நாள் முதல் மாதம் பத்துரூபாய் துரைத்தனத்தார் கொடுப்பதாகவும் வைத்தியசாலை அதிகாரி யெழுதவே, தெய்வசிகாமணி தான் அதுகாறும் பார்த்துவந்த அலுவலைவிட்டு வித்தியாசாலையிற் பிரவேசித்தான்.

வித்தியாசாலைக்கு வேளை தவறாது சென்று பாடங்களை ஐயமற ஓதித்தெளிந்து கேட்டகேள்விகட்குச் சரியான விடையளித்து வந்தமையாலும் பெரியோரிடத்தில் வணக்கமும், சிறியோரிடத்தி லன்பும் காட்டி நடந்தமையாலும், சுருட்டு, பொடி, சீட்டு, குடி முதலான துர்வழக்கங்களைக் கைக்கொள்ளா திருந்தமையாலும் உபாத்தியாயர்கள் அவன்மீது பட்சம் வைக்கலானார்கள்; மாணாக்கர்கள் அவனது நட்பைப்பெற விழைந்தார்கள். இப்பொழுது மாதம் பத்துரூபாய் கிடைத்துவந்ததால் ஆறு ரூபாயில் தன் சொந்த செலவையடக்கி மிகுந்த நான்கு ரூபாயைத் தந்தைக்கனுப்பி வந்தான். இதனோடு இரண்டு இளைஞர்க்கு இராவேளையில் பாடஞ் சொல்லிவந்ததா லடைந்த மூன்று ரூபாயைக்கொண்டு தான் குடியிருப்பதற்கு வசதியான ஒரு தனிவீடு தேடிக்கொண்டான்.

இங்ஙனமாக மூன்று வருஷம் வாசித்து மூன்றாம் வருடமுடிவில் நியமித்த அபாத்திகரி பரீட்சையில் முதல் வகுப்பில் முதன்மையாக ஒப்பேறினான். பரீட்சையில் முதலிற் தேறுவோனுக்குத் துரைத்தனத்தார் அவன் பெயரைப்பதித்த பொற்பதக்கம் ஈவது வழக்கமாதலால் அவ்வருடம் அது நமது தெய்வசிகாமணிக்குக் கிடைத்தது. வித்தியாசாலைத் தலைவர் தங் கையால் தெய்வசிகாமணிக்கு அவ்வெகுமதியைத் தந்தபோது, அவனுடைய நடையின் வணக்கத்தையும், கல்வியின் கவனத்தையும், அறிவினுயர்வையும் சபைமுன் வியந்து மற்றைச் சிறுவரும் அவ்வாறு நடக்க முயலவேண்டுமென்று பேசினார். இளமையிலுண்டாம் வறுமையானது எவ்வித கஷ்டப்பட்டேனும் எடுத்த காரியத்தைச் சாதிக்கச்செய்யும். இவ்வுலகிற் பெருந்தன்மை வகித்துப் பலராற் பகழ்பெற்றவர்களெல்லாம் இவ்வாறு வறுமையென்னு மன்னையால் வளர்க்கப்பட்டவர்களாவார். வறுமையானது உடலைச் சுருக்குகிறதெனினும், உள்ளத்தைப் பெருக்குகிறது.

பரீட்சையில் தேறிய பத்துத் தினங்களில் தெய்வசிகாமணியை மாதம் ஐம்பது ரூபாய் அபாத்திகரியாகச் சிதம்பரத்தில் நியமித்தார்கள். அவன் சென்னையிலிருந்து நேரே சிதம்பரஞ்சென்று அவ்வுத்தியோகத்தை ஒப்புக்

கொண்டு துரைத்தனத்தார் கட்டியுள்ள மாளிகையிற் குடியிருந்து வீட்டு வேலைக்கு மாதம் இரண்டு ரூபாயில் ஒரு கிழவியையும், சமையலுக்கு ஐந்து ரூபாயில் ஒரு ஆளையும் ஏற்படுத்திக் குடித்தன விஷயத்தில் கருத்தாய்ச் செலவிட்டுத் தன் தந்தைக்கு மாதம் பத்துரூபாய் அனுப்பிவந்தான். எவருக்கு என்ன நேரிடினும் தனக்குற்ற தெனத் தன் கண்ணையுங் கருத்தையு நாட்டிக் கைம்மாறுகவாமல் வைத்தியஞ்செய்து வந்ததாலும், நன்மார்க்கத்தில் நடந்து வந்ததாலும் அவனை நேசியாதவர் அவ்வூரிலொருவருமிலர்.

இவ்வாறு மூவாண்டானபின் தெய்வசிகாமணி சம்பளத்துடன் மூன்று மாதம் செலவுபெற்று வேலூருக்கு வந்து தன் மாமனாரைக் கண்டான். "இவ்வேழ்மை நிலையிலுள்ளவரையும் இனித் திரும்பவும் அடிவையேன்" என்பன அவன் மாமனுருக்கு முடிவிற்கூறிய வார்த்தைகள் இப்பொழுது மேலுச்குப் பழைய கோலமே தரித்திடினும் அவன் வார்த்தையை மெய்ப்பித்தா னென்பதை நீங்கள் அறியலாம். செல்வச் செருக்காலும பொய்க் கல்வியாலும் உதவியற்ற தன் மனையாளை வழிக்குக்கொண்டுவரக் கருதித் தன் நிலைமையை யுரையாது அவளைத் தன் சொந்த ஊருக்குக்கொண்டு சென்று மூன்றுமாத மானபின் சுவாமி தரிசனம் செய்யப்போவதாக அங்கிருந்து சிதம்பரம் அழைத்துவந்தான். தான் வருங்காலத்தைக் கடிதமூலமாக முன்பே தெரிவித்திருந்தமையால் அவனுடைய சேவகர் குதிரைவண்டியுடன் புகைவண்டிச் சாலையிலும், வேலைக்காரர் சமையல் செய்து மாளிகையிலும் காத்துக்கொண்டிருந்தனர். பெற்றோர்க்கு இவ்வுண்மை தெரிந்திடினும், சிதம்பரம்வந்து சேருந்தனையும் பிறரறியலாகாதென்று தெய்வசிகாமணி கூறியிருந்தமையால் மருமகள் தங்களோடிருந்தகாலத்தில் அவர்கள்சொல்லாதொழிந்தனர்.

மரகதவல்லி, தன் கொழுநன் சிதம்பரம் சிவில் அபாத்திகரி யென்றும், தானிருக்கும் மாளிகை தன் கொழுநனுடைய தென்றும் அறிய அவளுக்குண்டாகிய ஆனந்தத்தினளவை யாரே சொல்லவல்லார் ? நாளாவட்டத்தில் துர்க்குணங்களை யொழித்து நற்குணங்களைக் கைக்கொண்டு ஏழையாயினும் "குலமகட்குத் தெய்வங்கொழுநனே" என்றபடி, புருஷனே தெய்வமெனப் போற்றினுளெனின், புருஷன் எல்லாரும் மதிக்கக்கூடிய உத்தியோகத்திலுள்ள சங்கதி தெரிந்தபோது அவளுக்கு எத்துணைப்பத்தியும் மகிழ்ச்சியுமிருக்கும் ? அப்பன் உத்தியோக மிழந்து அவமானப்படுவதும், அன்னை நோயின்கொடுமையால் அவஸ்தைப் படுவதும் இனியொழிந்ததென் றகங்கனிந்து கணவனிடம் சங்கதி யுரைப்பதற்கெண்ணி அவன் வைத்தியசாலையிலிருந்துவரும் வேளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் தெய்வசிகாமணி பத்துமணிக்கு வந்து உள்ளே நுழைந்தபோது அவனைக்கண்டது ஏதோ நினைத்து சாயந்திரமாகட்டு மென்று வாளாவிருந்தாள். மணி பதினென்றானதும் யாவரும் ஸ்நானமாடி ஆலயத்திற்குப்போய் அங்குள்ள அற்புதமான சித்திரங்கள் நிறைந்து ஆகாயத்தைத் தடவுமுயலும் கோபுரங்களையும், கீழே கற்களுக்கும்மேலே ஓடுகளுக்கும் பதிலாகப்பதித்த பொற்ற

வேலூர், பிப்ரவரி௴ 15௳

எனது அரிய மருமகப்பிள்ளையே.

கடந்தமாதம் 30௳ என்மகளுக்கெழுதிய நிருபத்தால் என்னிலைமையின்னதென்பது ஒருவாறு உமக்குத் தெரியவரலாம். கடிதம் வரைந்த ஐந்தாநாள் வெளியிற் காத்துக்கொண்டிருந்த கடன்காரர் உபத்திரவமும், உள்ளே கதறிக்கொண்டிருந்த மனைவியின் சங்கடமும் பொறுக்கமுடியாமல் தூக்கிட்டுக்கொள்வதே உத்தமமென் றுறுதிசெய்து அதற்காக ஓர் கயிற்றை யெடுத்துச் சுவர்மேலிவர்ந்து கொட்டாரத்தின் உச்சியிற் பிணித்துக்கொண்டிருந்தேன்.

அச்சமயத்தில் தெருக்கதவைத் தட்டி எவரோ "தாசில்தாரே, தாசில்தாரே !" என்று கூவுஞ்சத்தங் கேட்கவே, உத்தியோகம் ஒழிந்தபின் ஊரிலுள்ளவர் என்னைக் காணுந்தோறும் "தாசீல்தார்" என்று கைதட்டிப் பரிகசிப்பது வழக்கமாதலால் நான் விடைதராமல் சற்று சும்மாவிருக்கவும், மீண்டும் அச்சத்தம் உண்டாகக் கவனித்தேன். அது தபாற்காரன் தொனியாகத் தோன்றியபடியால் என் மகளிடமிருந்து கடிதம் வந்திருக்கலாமென்றெண்ணி எனது ஒரே மகளாகிய மரகதவல்லி என்ன வெழுதியிருக்கிருளென்பதை யறிந்து பின்ன ரிறப்போமென்று கீழ்குதித்து மெதுவாய்க் கதவைத் திறந்தேன். தபாற்காரன் இரண்டு கடிதங்களையும், ஒரு சிறு பெட்டியையுங்கொடுக்க வெளியில் தலையை நீட்டி அவற்றை நான் வாங்குகையில் எனக்காகக் காத்துக்கொண்டிருந்த இரண்டு கடன் காரர்கள் ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டார்கள். அப்போதிருந்த என் நிலைமையை இன்னதென்றெழுதுவது என்னளவல்ல. கள்ளனைப்போலும்காவற்கூடத்திலிருக்கச் சம்பவித்ததே யென்னு மெணணம் எனக்குண்டாயிற்று. உடனே கைகால் நடுங்கிக்காகிதத்தைப் பிரிக்க இயலாமல் விழித்தேன். அப்போதுதபாற்காரன், "இதை யெண்ணிப்பாருங்கள். மூந்நூறிருக்கும்"என்று தன் பையிலிருந்து ரூபாய்களைக் கொட்டினன். நெடுங்காலமாக ஓர் செம்பு நாணயத்தையுங் காணுத நான் அவ்வளவு வெள்ளி நாணயங்களைக்கண்டவுடனே, தெய்வந்தான் நம்முடைய காலகதியைக்கண்டு பரிதாபங்கொண்டு இப்பணத்தை யனுப்பியதென்றும், எல்லார்க்குங் கொடுமைபுரிந்த நம்பால் தெய்வத்திற்கு எவ்வாறு கருணையுண்டாயிற்றென்றும், நாம் காண்பது மெய்யோ அல்லது பொய்யோ என்றும் பலவாறு சிந்தித்து ஆசைமிகுதியால் காகிதத்தைப்பாராமலே தரையிற்கிடந்த பணத்தை எண்ணிப் பெற்றுக்கொண்டு, என் கழுத்தைப் பிடித்தவாறிருந்த கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய நூற்றைம்பது ரூபாயைக் கொடுத்தொழித்தேன்.

என்மனம் சிறிது நிம்மதியடைந்தபிறகு கடிதத்தைப் பார்த்து அம்மூந்நூறு ரூபாயும் நீரனுப்பியதென் றறிந்தபோது நான் அடைந்த ஆனந்தம் இவ்வளவு அவ்வளவன்று. அத்தனை நேரம் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த தபாற்காரனை யனுப்பிவிட்டுச் சாவதானமாய்க் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். அதில்,

கனந்தங்கிய மாமா, இன்றனுப்பும் மூந்நூறு ரூபாயையும் தாங்கள் தயவு செய்து பெற்றுக்கொண்டு ஏழையேன் அதிகம் அனுப்பாததற்கு மன்னியுங்

கள். இதனோடு கிடைக்கும் பெட்டியிலுள்ள மருந்தை அதில் குறித்துள்ளவாறு எனது மாமியாரவர்கட்குக் கொடுங்கள். கடவுள் கிருபையாற் குணந் தரும்' என்று நான்கு வரிகள் எழுதியிருந்தன. இவை நான்கே வரிகளெனினும் வாசிக்க வாசிக்க எனக்குச் சந்தோஷத்தையும், துக்கத்தையும், வெட்கத்தையும், அச்சத்தையும் தந்தன. இதுவரையுஞ் செய்து வந்தது போதாமல் என் மகளுக்கனுப்பிய கடிதத்திலும் உம்மை நிந்தித்தேன். அவ்வனைத்தினையும் மறந்து எங்களுடைய ஆபத்து வேளையில் போதுமான பொருளைத் தந்ததுமன்றி அதிகம் அனுப்பாததற்கு உம்மை மன்னிக்க வேண்டுமென்கிறீர். இப்பொழுது மன்னிக்க வேண்டியது நீரோ அல்லது நானோ? யான் செய்த பிழைகளெல்லாம் ஒருங்குசேர்ந்து சுவர்போல என்முன் நிற்கின்றன. அந்தோ, என்னருமை மருமானே ! அவற்றில் ஒன்றை நினைத்திடினும் நீர் என்னைப்பார்க்க நாணுவீர்.

பொம்பாய் மரணநிதிக்கு இரண்டு மாதம் சேரவேண்டிய நாற்பது ரூபாயும், சில்லரைக் கடன்களுக்கு ஐம்பது ரூபாயும் போக மீதியை வைத்திருக்கிறேன். என் மனைவிக்கு நீர் எழுதியபடி எட்டுநாள் மருந்து தர அவளுடைய நோய் நீங்கிற்று.

இங்ஙனம்,
பிரியமுள்ள
சி. சுந்தரம் பிள்ளை."

இவ்வாறு வாசித்துச் சித்திரம்போ லசைவற்று நின்ற மரகதவல்லியை நோக்கித் தெய்வசிகாமணி, "பெண்ணே, உனது கோபம் நீங்கியதோ? இனி யாவது என்னுடன் இன்சொற் புகலாயா?" என்றான். மரகதவல்லி, "நான் கும்பிடுங் குலதெய்வமாக எழுந்தருளிய தங்கள்மேல் எனக்குக் கோபமோ? அடியாள் தங்களைப் புருஷராய்ப் பெறத்தக்கவளோ என்றை யுறுகிறேன். இது ஏதோ நான் பூர்வ சன்மத்திற் செய்த புண்ணியத்தின் பயனன்றி வேறன்று. எல்லாத் தீக்குணங்களுங் கூடிய என்னைத் திருத்தியவரும், என் உள்ளத்தில் அறிவாகிய விளக்கையேற்றியவரும், எனக்கு எல்லையற்ற சுகமும் பொருளுமீன்றவரும் தாங்களன்றோ? இனிக் காணப்போவதில்லை யென் றெண்ணிய என் பெற்றோர் கவலையை யொழித்துக் கனத்தையுந் தந்த காதலரே! பலரறியத் தீவினை சூழ்ந்தார்க்கும் ஒருவருமறியாமல் நன்மைபுரியுந் தங்களை நான் என்ன வென்பேன்? எவ்வாறு துதிப்பேன்? ஓ என் பிராண நாயகரே ! நாங்கள் செய்த பிழைகளனைத்தினையும் மன்னியுங்கள்—" என்று நாக்குழறியும், குரன் மெலிந்தும் நவின்று தன் கருங் கண்களில் வெண் முத்துப் பொருந்திய தென்ன நீர்த்துளிகள் ததும்பவும் ஆடையுங் குழலுஞ் சோரவும் கட்டினின் றிறங்கிக் கணவன் காலில் வீழ்ந்தாள். தெய்வசிகாமணி, "மரகதம், என்றன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பதற்கு நீ என்ன பிழை செய்தாய்?" என்று சொல்லிக்கொண்டே கீழ் குனிந்து மனைவியைத் தூக்கி மடிமீ துட்காரவைத்துத் தலையை நிமிர்த்து முத்தந்தந்து விடாதோடிய கண்ணீரைத் துடைத்துத் தலைமயிரையும், மேலாடையையுந் திருத்தினான்.

———

பத்தா மதிகாரம்.

* * * * அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

உற்ற னளவும், பிணியளவும், காலமும்,
கற்றன் கருதிச் செயல். குறள்.

ஏழைகள் செல்வமுற்றபோது தம்மை மறந்து அடாத காரியங்களிற் புகுந்து உற்றார்க்கும் மற்றார்க்கும் துன்பந் தருவார்களென்பது உலக வழக்கு. ஆனால் தெய்வசிகாமணிபிள்ளையின் குடும்பத்தார், சிதம்பரம் சேர்ந்த நாண் முதல் சத்தியம், சாந்தம், அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களில் முன்னிலும் அதிகமாக விளங்கி இல்வாழ்க்கையை இனிது நடத்திவந்தனர்.

"எல்லாம் சிவன் செயல்" என்றோர்ந்த மாணிக்கம்பிள்ளை விசேஷபத்தியுடையவராய் நாடோறும் நல்ல நூல்களை வாசித்தும், நடராச மூர்த்தியைத் தரிசித்தும் வருவார். இலட்சுமியம்மாள் வீட்டுச் சிறு பணிகளில் தன் மருமகளுக்குதவிசெய்வாள்.

தெய்வசிகாமணிபிள்ளையோ சென்னை வைத்திய வித்தியாசாலையில் வாசித்துப் பரீட்சையி லொப்பேறிப் பொற் பதக்கம் பெற்றதை யறிந்தோம். பாடசாலையோடுபடிப்பையும்விடும் தந்தோழரைப்போலின்றித் தாம்,வியாதியைக்குறித்தும், வியாதியைக் கண்டிக்கும் முறைகளைக் குறித்தும், உடற்கூறு உடற்றொழிலைக் குறித்தும் எழுதியுள்ள கிரந்தங்கள் என்ன விலையாயினும் வாங்கிப்படிப்பார். கூரியமதியும், ஞாபக சக்தியும், தளரா முயற்சியும், மனவுறுதியும், தேகபலமும், அதிகபொறுமையு மிருந்தபடியால் படித்தவற்றைத்தெற்றெனத்தெளிந்து, நுண்ணிய வாராய்ச்சி செய்து, அரியவிஷயங்களைக்கிரகிப்பார். இவற்றுடன் சுதேசவைத்தியத்தில் நாட்டமுண்டாகி, நமது வைத்திய சாஸ்திரங்களைச் செவ்வையாய்க் கற்றுணர்ந்து வைத்தியத்தில் தேறின சிலரையடுத்து, அவர்களால் நோயாளியி னிலைமையையும், நோயின் வரலாற்றையும், காலத்தினளவையும், வாத பித்த சிலேட்டுமங்களின் கூறுகளையும், நாடி, நேத்திரம், நா, குரல், மூத்திர முதலிய குறிகளையும், ஔஷதங்களுக்குரிய பதார்த்தங்களின் இலட்சணங்களையும், அவ்வௌஷதங்கள் செய்யு முறைகளையும் அறிந்து, சிந்தூரம், மாத்திரை, பஸ்பம், சூரணம், கிருதம், இலேகியம், தைலம், ரசாயன முதலான அநேகவித அருமையான அவுடதங்களைச் செய்துகொண்டார்.

கனவான் – ஏழை, பெரியவன்– சிறியவன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்னும் வித்தியாசமின்றி வைத்தியசாலைக்கு வரும் எல்லாரிடத்தும் அன்புடையவராய் மருந்தளிப்பதோ இல்லம் வருவார்க்கும் தம் சொந்த மருந்தை இலவசமாய்த் தருவார். நோயின் தொந்தரவினலோ, குலம் - தனமாதிய உயர்வினலோ, அல்லது வேறு காரணத்தினலோ வைத்தியசாலைக்கு வரக்கூடாத நோயாளிகள் வீட்டிற்குத் தாம்போய்த் தக்க அவுஷதங்கள் கொடுத்து வருவார். அன்புடைமை யென்பது அவரிடம் ஓங்கி வளர்ந்ததால்

ஊரில் ஒருவராவது பிணியால் வருந்துவதைப் பார்க்க அவர் மனங்கொள்ளாது. சிலசமயங்களில் தம்மை யழைக்காவிடினும் தாமே போவதுமுண்டு. வியாதியஸ்தர் வியாதியின் கொடுமையாலும், இதர முகாந்தரத்தாலும் தம்மை வைதிடினும், காறி உமிழ்ந்திடினும், கன்னத்தி லறைந்திடினும் மனங்கோணாமல் அவர்களுடைய குணத்தை நன்கறிந்து, அவர்களுக்குப் பிரியத்தைத் தரவல்லது ஏதெனத் தெரிந்து அவ்விதம் நடந்து பிறகு மருந்தீவார். ஏழைகளாயிருப்பின் பத்தியத்திற்குச்செலவும் தாமே கொடுப்பார். பெண்கள் பிரசவவேதனை படும்போது கூடவிருந்து அவர்கள் சுகப்படும் வரையும் வேண்டிய மருத்துவஞ் செய்வார். அவரவர்கள் தெய்வசிகாமணி பிள்ளையைத் தங்கூடப்பிறந்த சகோதரராகப் பாவிப்பார்களே யொழிய அயலாரென்றும், உத்தியோகஸ்தரென்றும் எண்ணார்கள். அவருடைய வீடு இரவும் பகலும் திறந்தவாறிருக்கும். வைத்தியர் வீடு ஒருபோதும்மூடப்படாதென்பது அவருடைய துணிபு. காற்று மழை கூடிய நள்ளிரவெனினும், யாராவது தம்மை அழைப்பாராயின் அக்கணமே அவரோடு சென்று நோயாளியைப் பரீட்சித்து அவனுக்கு ஏதேது செய்யவேண்டுமோ அத்தனையுஞ்செய்து முடித்தபின்பே வீட்டிற்குத் திரும்புவார். பார்ப்பவர், இவ்வாறு மழையிலடிபடுவதும், இரவி லெழுந்திருப்பதும் தொந்தரவல்லவா வென்றால், தாம் எந்நாளும் சுகத்தைப்பழித்துக் கஷ்டத்தை யேற்று இஷ்டம் போல வளையும் ஈயமெனத் தந் தேகத்தை வசப்படுத்தி வருவதாலும், தாம் எல்லார்க்கும் ஊழியக்காரனென எண்ணுவதாலும் தமக்குத் தொந்தரவாகத் தோன்றுவ தெங்ஙனம் என்பார்.

அவர் தந் தந்தையைப்போல அடிக்கடி ஆலயஞ் செல்லாவிடினும், காலையிலெழுந்ததும் கால் கை சுத்திசெய்து நெற்றியில் நீறுபூசி, கீழண்டை அறைக்குள் மாட்டியிருந்த கணபதி படத்தெதிரில் கண்களைமூடிக் கால் மணிநேரம் நிற்பதைத் தவறார்.

"அப்பாநான் வேண்டுதல் கேட் டருள் புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்."

என்பதுதான் அவருடைய பிரார்த்தனை. பொருளைப்பற்றிய ஏற்றத்தாழ்வு பூர்வகன்மத்தின் பயனெனத் தேர்ந்து தம்மைப்பற்றியாவது, தங்குடும்பத்தைப்பற்றியாவது ஒருநாளுஞ் சிந்தியார். அவர்வெளியிற் போகுங்காலையில் காண்போரனைவரும் முகமலர்ந்து கைகூப்பி வணங்குவதும், வீதியில் விளையாடுஞ் சிறுவர் தம் விளையாட்டை விட்டுச்சுருக்குடனெழுந்து வந்தனஞ் செய்வதும் பார்ப்பவர்க்கு ஆனந்தத்தை விளக்கும்.

புஸ்தகமில்லாத வீடு உயிர்நீங்கிய உடம்பை யொக்கும் என்றும், பண்டித சிரோமணிகள் தங்கள் உயர்ந்த எண்ணங்களை மேலான நடையில் புத்தகவாயிலாக நமக்குத் தந்திருக்கிறார்களென்றும் சொல்லி அவர், வைத்தியத்துடன் தேசசரித்திரம், வானசாஸ்திரம், இயற்கைச் சாஸ்திரம், பூமிசாஸ்திரம், இலக்கியம், இலக்கணம், தர்க்கம், தத்துவ முதலியவற்றைக் குறித்த நூல் பலவாங்கி வாசித்துவருவார். ஆங்கிலத்தில் உயர்ந்த பரீட்சை தாராவிடினும் உண்மையுணரவேண்டு மென்னும் உவகையோடு நாள் தவறு

மல் சிறிது சிறிதாகக் கற்றுவந்தமையால், நாளடைவில் கல்வியில் விசேஷத் திறமை யடைவதானார். ஒழிந்த சமயங்களில் தம் மனையாளுக்கும், தாய் தந்தையருக்கும் நீதிக்கதைகளையும் ஞானபோதங்களையும் ஓதி வருவார். மதவிஷயத்தில் மனவாக்குக்கெட்டாத பிரமத்தைப் பற்றியும், மாயையைப் பற்றியும், உலக விகற்பங்களைப்பற்றியும் காரண மறியவும். பிறரிடம் பேசவும் விரும்பார். தம்மைப்போன்ற நாயினுங் கடையோர் அத்தகைய விஷயங்களை யாராய்ச்சி செய்வது அடாதெல்றும், விநாயகர் அல்லது அவருடைய அடியார்களைச் சிந்தித்தலே சாலுமென்றுஞ் சொல்வார்.

இனி நமது கதாநாயகியைப் பற்றிப்பேசுவோம். மரகதவல்லி இட்ட வேலைசெய்ய ஏவலாள ரிருப்பினும், குடும்பத்திற் கண்ணோக்கமாய்த் தானே யாவும் பார்ப்பாள். மாமி மாமனாருக்கும், மணாளனுக்கும் குளிப்பாட்டல், அன்னமிடுதல்,படுக்கைவிரித்தல்முதலிய வேலைகளைக்கண்ணியமாய் எண்ணி அப்பாக்கியத்தைப் பிறர் கொள்ளலாகாதென்று தானேசெய்வாள். வீட்டைச் சுத்தமாயும் அழகாயும் வைத்திருப்பதும், வந்தவரை உட்காருவித்து உபசரிப்பதும், ஏழைகளுக்கு அன்னமிடுவதும் அவளுடைய வேலைதான். ஓய்வான சமயங்களில் தன் நாயகனும் மாமனாரும் ஓதிவரும் தேனினுமினிய போதங்களைச் செவியாரமடுத்தும், நீதிநெறியை யுணர்த்தும் புத்தகங்களை மனம்பதியப்படித்தும். மாமியாரிடத்தும், மற்றமாதரிடத்தும் குடித்தன முறைகளைக்கற்றும்வருவாள். வீட்டுப்புரோகிதரேனும், வேறெந்தப் பெரியவரேனும் வந்தால் ஆசனந்தந்து அவர்களை யுட்காரச்செய்து அவர்கள் சொல்லும் நீதியை அன்போடும் பத்தியோடும் கேட்பாள். கடவுளைத்துதிசெய்வதற்கும், கணவன் களிப்பதற்கும் திருநெறித் தமிழ்வேத பாராயணஞ் செய்து வீணையிற் சேர்த்துப் பண்ணாரப்பாடுவாள். ஆதியில் சங்கீதத்தில் பயின்றிருந்தமையால் அவளுக்கு இப்பொழுது இப்பாட்டுப்பாடவும், வீணைவாசிக்கவும் எளிதாயிற்று. வீட்டிலுள்ள யாவரும் உண்டபின் உண்பதும், புருஷன் தூங்கியபின் தூங்குவதுமானாள். அதிகாலையி லெழுந்திருப்பது அறம்பொருளின்பம் வீட்டையுந் தரவல்லதென்று கணவன் அடிக்கடி சொல்லிவரக் கேட்டுக் கோழிகூவ விழிக்க விழைந்தாளெனினும், தன் தாய்வீட்டிற் சூரியனெழும்வரையும் தூங்கிய வழக்கத்தால் ஆரம்பத்தில் வருத்தமாயிருந்தது. ஆயினும் நாடோறும் செய்துவந்த பிரயத்தனத்தால் அவ்வருத்தங் குறைந்து சுலபமாயிற்று. எத்துணை அரியதெனினும் நாம் செய்யுங்காரியம் நாளாவில் நமக்குச் சுலபமாவ தியற்கைதான். தூங்கின் தன்மையுடைய மனமானது காலைவேளையில் செயலற்றிருக்கக்கண்டு மரகதவல்லி அக்காலத்தைக் கீர்த்தனைகள் பாராயணம் பண்ணுவதிற் பயன் படுத்தினாள்.

தருமஞ்செய்வது இடம்பத்திற்காவது கவுரவத்திற்காவதல்ல வென்றும், தன்னுடைய கடமை யென்றும் அறிந்து, அயலகத்துப் பெண்கள் எதற்கேனும் முட்டுப்பட்டுத்தன்னைக் கேட்டால் இல்லை யென்னாதுகொடுத்து வாஞ்சையோடு வார்த்தையாடியும், பல விகாரரூபிகளான பிச்சைக்காரர்கள் வந்தால் பரிகாசமென்பதை உள்ளத்திலும் நினையாமல் இயன்றது தந்தும்

வருவாள். தன் வீட்டிலுள்ள எவர்க்காவது நோய்வந்தால் தனக்குற்றதுபோ லெண்ணி அவருக்கு வேண்டிய உபசாரணையைமனங்கோணுமற் செய்வாள். தலைநோய் வயிற்றுவலி முதலான சிறு வியாதிகட்குத் தக்க மருந்துகளைத் தன் புருஷனிடத்தில்கேட்டுணர்ந்து தன்னிடம்வரும்பெண்களுக்குதவுவாள். 'ஒல்லுந்துணையு மறஞ்செய்க' என்றவாறு தன்னாலியன்ற சகாயம் பிறருக்குச் செய்யவேண்டு மென்பதும், "நாடெங்கும்வாழக் கேடொன்று மில்லை" என்பதனால் நாடெங்கும் நன்குவாழவேண்டு மென்பதும் அவளுடைய முழு நோக்கம். தன்னாலியலாதேல் கணவனிடங்கூறி அயலாருடைய சங்கடத்தை அகற்ற முயலுவாள். தன் கணவனாலுங் கூடாக்காரியமாயின், "அய்யோ! நமக்கு அவர்களுடைய துக்கத்தை யகற்றும் பாக்கியம் இல்லையே" என உள்ளுறவருந்துவாள். ஊரிலுள்ள அரிவையர் மரகதவல்லியை அந்நியளென்றும், உத்தியோகஸ்தருடைய மனைவி யென்றும் வேறு நினையாமல் தங்களுக்குச் சுகமுறினும், துக்கம் வரினும் ஓடிவந்து அவளிடஞ்சொல்லுவார்கள். உயர்ந்த குலத்தோரும், வயது சென்றோரும் சிறியாளென்கிற அலட்சியமின்றிச்சங்கடம்வந்தால் தங்குறையைக்கூறி அவளுடையபுத்திமதிக்கு எதிர்பார்ப்பார்கள். துஷ்டப் பெண்களும் அவளைக்கண்டு சற்றுநேரம் பேசினால் அவர்களுடைய துர்ப்புத்திநீங்கி ஓர்வித அச்சமும் அடக்கமுமடைவர். ஆகவே இளங்காற்றிற்பட்ட மகரந்தத்தைப்போலும் மரகதவல்லியினுடைய பெயரும் புகழும் அவ்வூரெங்கும் பரவிற்று.

இவ்வாறு அவள் பல தருமங்கள் புரிந்துவரினும் குடித்தனத்திலிருந்த கவனத்தை விட்டவளல்லள். நினைத்தபடி செலவு செய்தால் பின்னிட்டுக் கஷ்டமுண்டாமென நம்பி, உயர்ந்த உணவிலும் சிறந்த ஆடையிலும் வைத்த பழைய ஆசையை மறந்ததுமன்றி மாதந்தோறும் வீட்டுச் செலவுக் கென்று புருஷன் கொடுத்துவந்த பணத்தில் கொஞ்சங் கொஞ்சமாக மிகுத்துவந்தாள். தன்மாமி அடுத்தடுத்துரைத்தும் வீண்செலவென்று தான் அணிந்திருந்த கம்மலும், மூக்குத் திருகாணியுந் தவிர, வேறொன்றும் வேண்டாமென்று மறுத்தாள். சிறுவயதிற் கற்றிருந்த விதவிதமான பூத்தையலைவிட்டதற்கும்காரணம் இதுவே. பொருள் மிகுந்த பெண்களுக்குப்பொழுதுபோக்கு நிமித்தம் பூவேலை தகுதியேயொழிய மற்றவர்க்குப் பண விரயமும், தேக வருத்தமும், காலக்கேடுமேயன்றி நலம் பயப்பதரிது என்பது அவளுடைய கொள்கை.

பதினொன்றா மதிகாரம்.

தாழ்வது வந்ததானுற் றளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்ததான லொருவரால் விலக்கப்போமோ?

விவேகசிந்தாமணி.

அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப்
பொன்னினழகும், புவிப்பொறையும்,—வன்னவுடல்
வேசி துயிலும், விறன்மந் திரிமதியும்,
பேசி லிவையுடையாள் பெண்.

நீதிவெண்பா.

தெய்வசிகாமணிபிள்ளை குடும்பத்தார் வீட்டில் ஒற்றுமையுண்டாகி வெளியில் மரியாதைபெற்றுச் சுகமாக வாழ்ந்துவந்தாரெனினும் அச்சுகம் நீடிக்கவில்லை.

தென்னாற்காடு மண்டலத்திற்குப் புதிதாக மாற்றப்பட்ட பெரிய டாக்டர் வைத்தியசாலை பரீட்சைநிமித்தம் சிதம்பரம் வந்தபோது அவ்வூர்த் தாசில்தார்பார்த்து, தன் குமஸ்தாக்களி லொருவன் செம்மையாயிருக்கவும் காயலாவென்று தெய்வசிகாமணி பிள்ளை ஒருமாதச் செலவுக்குச் சிபார்சு செய்து ஊருக்கனுப்பியதாயுரைக்க, டாக்டர் விசாரித்துப்பொருந்தியிருக்கக் கண்டு தெய்வசிகாமணிபிள்ளைமீது துவேஷமுண்டாகி மறு உத்தரவு வரையும் வேலையினின்று நீங்கியிருக்கவேண்டுமென உத்தரவு பிறப்பித்துச் சென்னை சர்ஜன் ஜெனரலவர்களுக்குக் கடிதமூலமாய்த் தெரிவித்தார்.

சூரியனைப்பற்றிய கிரகணத்தால் உலகத்தை இருள் மூடுவதுபோல, தெய்வசிமாமணிபிள்ளைக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தால் சிதம்பரமுழுதும் அடங்காப் பெருந்துயரடைந்தது. ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடிவந்து நடையில் யோசனையில் மூழ்கி நின்றுகொண்டிருந்த தெய்வசிகாமணி பிள்ளையைச் சூழ்ந்து, “அன்பும் அறனும் பூண்டு, அடக்கமும் வாய்மையு மலிந்தார்க்கும் இவ்வின்னல் சம்பவிக்கக்கூடுமோ?” என்றும், “எம்முயிரான இவருக்கும் விரோதியிருந்தானோ?” என்றும், “தாசில்தார் நான்கு நாளையில் நாசமாகானோ?” என்றும் பலவாறு பேசிப் புலம்பலாயினர். உள்ளேயிருந்த மாணிக்கம் பிள்ளையும் சங்கதிகேட்டு வெளியிலோடிவந்து தெய்வசிகாமணி பிள்ளையைக் கட்டிக்கொண்டு, ‘‘உயிர்போகுந் தருணத்திற் கிடந்த தாசில் தாருக்குத் தக்க மருந்தளித்து இருமுறை காத்ததற்குக் கைம்மாறு இது தானோ? மகனே!” என்று அழத்தொடங்கினார்.

தெய்வசிகாமணிபிள்ளை அவர்களெல்லோரையும்கையமைத்து, ‘‘கனம் பொருந்திய என்தந்தையே! என்றன் அன்புள்ள சகோதரர்களே! ஒருவன் எவ்வளவு நல்லவனாயினும் எல்லாரும் அவனை நேசிப்பது இயலாது. மனிதர்கள் சுபாவம் மாறுபட்டிருப்பதே இதற்குக்காரணம். மரணஜெனனபாதையைத் தவிர்த்து யாவரும் தம்மைப்போலாம்படி எஞ்ஞான்றும் உதவி செய்யவிழையும் தயாநிதியாகியகடவுளையே அநேகர் அவதூறுபேசக்காணும் பொழுது என்போன்றஏழை எம்மாத்திரம்? இவ்வுலகின் இயல்பு இது இக் குமஸ்தா, திருவண்ணாமலையில் தம்தந்தை யிறந்ததாகத் தந்திவர, சம்பளத்தோடு மூன்றுமாதச் செலவுபெறுதற் குரிமையிருந்தும், சம்பளமில்லாமல் ஒருமாதச் செலவாயினும் தருமாறு தாசில்தாருடைய காலில்விழுந்து வேண்டினும் அவர் ஏதோ விரோதத்தை மனத்தில்வைத்துக்கொண்டு கொடுப்பதில்லையென மறுத்தாராம். நெடுநாளாய்ப் பாராத தந்தையின் பிரேதத்தையுங்காணக்கூடவில்லையே யென்றும், தமக்கேதாவது ஒரு வழி தேடவேண்டுமென்றும் அவர் என்னிடத்திற் கூறியழுதார். என்னிடமிருந்த சிறிது நேரத்தில் அவர்பட்ட துயரத்தை என்னவென்பேன்? நான் தாசில்தாரை நேரிற்கண்டு செலவுதரச் சிபார்சு செய்வோமென் றுத்தேசித்தும், தாசில்தார்

அழுத்தமுள்ள மனமுள்ளவராதலாலும், என்னிடம் ஒருவாறாயிருப்பதாலும் செய்வதின்னதெனத் தோன்றாமல் கடைசியில் குமஸ்தாவின் கையைச் சோதித்தபோது, துக்கமிகுதியால்சுரங்கண்டிருந்ததுபற்றிஒருமாதச்செலவிற்குச்சிபார்சு செய்தேன். தாசில்தார்மீதுங் குற்றமில்லை. குமஸ்தாவுக்குச் செலவுதந்தால் சர்க்கார்வேலை தாமதமாகுமென்று எண்ணி யிருக்கலாம்" என மொழிந்தார். பின்பு தெய்வசிகாமணி பிள்ளை தமக்குப் பதிலாய் வந்த அபாத்தகரியிடத்தில் வேலையை யொப்பித்து, அடுத்தநாளே சாமான்களைக் காலிசெய்து வீட்டையும்விட்டுப் பொன்னம்பலசுவாமி மடத்துக்குச் சமீபமாக இரண்டு ரூபாயில் ஒரு சிறியவீடு வாடகைக்குப் பேசித்தன் குடும்பத்தாரை அங்கு அழைத்துப்போனார். சங்கடகாலத்தில் சந்தோஷமுகத்துடன் ஆறுதல் சொல்வதுபோய்க் கண்ணீர் தாரைதாரையாக வடியுங் கூம்பியமுகத்தோடு திரள் திரளாய்ப் பின்தொடர்ந்த ஜனங்களை நோக்கித் தெய்வசிகாமணிபிள்ளை வேண்டியபுத்திமதிகளைக் கூறியனுப்பினார். சேவகர்களிருவரும் தந்தைபோற் காத்துவந்த தந்தலைவரைப் பிரிய மனந்தாங்காதவராய்த் தேம்பித் தேம்பிச் சென்றனர்.

உத்தியோகத்தை விடினும் தெய்வசிகாமணி பிள்ளை பழையபடி இலவசமாக வெளியிற்சென்று வைத்தியஞ்செய்வதையும், வீட்டில் வருபவர்க்குமருந்தளிப்பதையும் தவிர்த்திலர். தங்களுக்குப் புரியும் பேருதவிக்குக்கைம்மாறு ஏதேனும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜனங்கள் அவரைத் தொந்தரவுசெய்யினும் "நோய்தீர்க்கக்கூலிவாங்குவது கூடாதென்பார்." ஆதலின் ஜனங்கள் மற்றொரு அபாத்தகரி வந்தும் வைத்தியசாலைக்குப் போவதொழித்துத் தெய்வசிகாமணி பிள்ளையிடமே வரலாயினர்.

மரகதவல்லி, வருமானம் மட்டுப்பட்டதால் குடித்தனத்தில் அதிககருத்துண்டாயினும், பெரியவர்களுக்குரிய உபசாரத்தைக் குறைவறநடத்தி ஏழைகளுக்கு இயன்ற உதவிசெய்து வந்தாள். காலையில் கடவுளைத் தோத்தரிப்பதையும், ஓய்வுகாலத்தில் புத்தகங்களை வாசிப்பதையும், தன் தோழிகளுக்கு நீதியுரைப்பதையும் விட்டவளல்லள்.

"எல்லாஞ் சிவன்செயல்" என்று இதுகாறும் நம்பிய மாணிக்கம்பிள்ளையும், இலட்சுமியம்மாளும், வேலைக்காரருஞ் சேர்ந்து, "நல்லவர்க்கும் தீமை வருவதுஞாயமோ?" என்றுதெய்வத்தைத் திட்டத்தலைப்பட்டார்கள்.

புது வீடுபோன இரண்டுமாதத்திற்கெல்லாம் மரகதவல்லிக்கு ஓர் ஆண் குழந்தைபிறந்தது. வருவாயும், கையிற் பொருளுமின்றிச் செலவுமட்டும் அதிகப்பட்டதால் வேலைக்காரர் வேண்டாமென்று, தெல்வசிகாமணி பிள்ளை தம் தாயிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில் வேலைக்காரரிருவரும் ஓடிவந்து அவரை விட்டுப்பிரியாமல் சம்பள மில்லாமலேனும் வேலைசெய்வதாகச் சொல்லியதுடன் வேண்டுமானால் தாங்கள் சேமித்து வைத்திருக்கிற ஐம்பது ரூபாயையும் பெற்றுக்கொண்டு கூடுமானபோது கொடுக்கலாமென்றும் வேண்டிக்கொண்டனர். தெய்வசிகாமணி பிள்ளை அவர்களுடைய நன்றியறிதலுக்கு மனமுவர்ந்து குளிர்ந்தவார்த்தை கூறியனுப்பினார்.

தெய்வசிகாமணி பிள்ளை கடன் வாங்குவது தவறென்று வீட்டிலுள்ள மேசை, நாற்காலி, கட்டில் முதலிய சாமான்களைவிற்றுக் கொஞ்சக்காலந் தள்ளலாயினர். இவ்வளவில் "கெட்டகுடியேகெடும்" என்பதற்கிசையமாணிக்கம்பிள்ளைக்கு நோய் நேர்ந்தது. தெய்வசிகாமணி பிள்ளை கையிலிருந்த ஔஷதங்கள் செலவழிந்தமையாலும், புதிதாய்ச் செய்யப்பொருளின்மையாலும் உள்ளமாழ்கி என்னசெய்வதென்று தோன்றாமல் திகைத்து, மேலண்டை அறையில் குழந்தையைக் காலிற்கிடத்தி விளையாடிக்கொண்டிருந்த மனையாளிடஞ்சென்று சற்றுநேரம் மயங்கிநின்றார். மரகதவல்லி குழந்தையைக்கையிலேந்திநீட்டியகாலை முடக்கிக்கொண்டு, தன் கணவனிருந்த முகவாட்டத்தால் ஏதோ மனக்கவலை வருத்துவதாகவும், வெளியிட யோசிப்பதாகவும் கண்டு துணுக்குற்று, "சுவாமி மாசற்ற திங்களைப்போன்ற தங்கள் முகத்தில்இன்று விசாரக்குறிகள் காணப்படுகின்றனவே. என்ன விசேடம்? அடியாளிடத்தில் கூறவும் தாங்கள் ஆலோசிக்க வேண்டியதேன்?" என்று பரிந்துகேட்டாள். தெய்வசிகாமணிபிள்ளை, "பெண்ணே, இவ்வகைச் சங்கடங்களை அநுபவிக்க நான் எவருக்குயாது கொடுமை செய்தேன்? என் உத்தியோகம் போனதும், பணமில்லாக்காலத்தில் நீபிரசவித்ததும், உன் மாமனார்நோயால் வருந்துவதும் என்னவென்கிறாய்? தக்க மருந்து செய்வதற்குக் கையில் காசளவுமிலது. அகத்தில் புத்தகங்களைத்தவிர மற்றொன்றுங்காணேம். நான் எவ்வளவோ சாந்தமுடையவனெனினும் இப்பொழுது என் நெஞ்சம் நெகிழ்கிறது; துயரம் அதிகரிக்கிறது. என்செய்வேன்?" என்று முகம்வியர்த்துப் பெருமூச்செறிந்து சொன்னார்.

தன்னாயகன் அறிவும் ஆண்மையுங் குன்றி இவ்வண்ணம்இயம்பக்கண்டு மரகதவல்லிக்கும் துக்க மெழுந்ததெனினும், அதையடக்கித் தன் முன்றானையினால் அவருடைய முகத்தினைத்துடைத்து, "சுவாமி, எல்லாம்அறிந்ததாங்களும் இவ்வாறு உள்ளங்கலங்கினால் பெண்பேதையாகிய அடியாள்கதியென்ன? ஆதியில்என் தாயார் நோயுற்றதாகக்கேட்டு நான்புலம்பியபோது தாங்கள்எனக்குப்புகன்ற நீதியும், இடையில் அடிக்கடி போதித்துவந்தஞானமும் பொச்சாந்தீரோ? மனிதர்களுக்குச் சுகமும், துக்கமும் நீடித்திருப்பதல்ல என்றும், அவை இராப்பகலைப்போலும், வண்டியினுருளையைப்போலும், மாறிமாறிவரும் இயற்கையுள்ளனவென்றுஞ் சொன்னது சிலையிலெழுத்தென்ன என்மனத்திற் பதிந்தது. நெடுநாள் சுகமனுபவிப்பவராகத் தோன்றுவோரையும் அடிக்கடி துக்கமானது வருத்திக்கொண்டேயிருக்கும். துக்கம் நேருங்காலையிலெல்லாம் அதைப்பொறுத்துத் தீர்ப்பதே பெருஞ்செல்வமாக வெண்ணித் திருப்தியடையவேண்டும். இருப்பதைக்கொண்டு திருத்தியடையாதவன் எவனோ அவன் எல்லாங்கிடைப்பினும் திருத்தியை யடையான். திருப்தியானதுசெல்வப் பெருக்கால் வருவதன்று. அது நமக்கு அவசியமான சிலவற்றைப் பெறுவதனாலுண்டாவதென்பதும், அவ்வித அவசியமானவைஎளிதில் கிடைக்கக்கூடுமென்பதும்நாம் தெரிந்தவிஷயமே. மேலும் நமக்குண்டாம் சங்கடமனைத்தும் நாம் பிறக்கும்போதே கொண்டுவந்த கன்மமென்னும் சுமையைச்சுருக்குவதால் இவ்விதச்சங்கடங்களை நோக்கிக் களிப்புறவேண்

டும். ஆனால் நாம் வேறு தேகம் வேறு என்னு முண்மையுணராமல் இஷ்டப் படி திரியுந்தன்மையுடைய மனத்தின்வயப்படுவதால் நலம்வரின் சந்தோஷப்படுவதும், கேடுவரின் வருத்தப்படுவதும் நம்மவர்க்கு இயல்பாயிற்று. மனோவிகற்பங்களை யடக்குபவரெவரோ அவரைத் துக்கமுஞ்சுகமும் ஒன்றுஞ் செய்யவல்லதல்ல. எல்லாவற்றிற்கும் மனமே காரணம். சுகத்தைத் துக்கமாக்குவதும், துக்கத்தைச் சுகமாக்குவதும் மனமெனத் தாங்கள் அடிக்கடி சொல்வீரே—" என்று பேசிவந்தவள் திடீரென்று நிறுத்தி, "சுவாமி, என்ன யோசிக்கின்றீர்? ஞானிமுன் உன்மத்தன் போலவும், வித்துவான் முன் வெள்ளறிவுடையோன் போலவும் பலகலை கற்றுத்தெளிந்த தங்களிடத்தில் அறிவிலியாகிய அடியாள் பிரசங்கிக்கப் புகுந்தேன். பொறுத்தருளும்" என்றாள்.

தெய்வ:—பெண்ணே! நீ பேசியது சரியே. ஆனால் நான் துக்கிப்பது என்னைப்பற்றி யன்று; ஆபத்துக்காலத்தில் என்னைப்பெற்ற தந்தையைக் காக்கவும், என்னிடம்வரும் நோயாளிகளுக்குதவவும், உன் தந்தைக்கு இனி மாதந்தோறும் பத்துரூபாய் அனுப்பவும் முடியவில்லையே யென்றுதான்.

உடனே மரகதவல்லி தன் காதிலணிந்திருந்த கம்மலைக்கழற்றிக் கணவனிடங் கொடுத்து, "சுவாமி தாங்கள் தயைசெய்து இதை விற்றுத் தந்தையாருக்குத் தக்கமருந்து செய்துதாரும். மற்றவைகட்குத் தானே ஓர் வழி பிறக்கும். நாளை நிகழ்வதை எவரறிவார்? வெயிலெறித்துக் காய்வதெல்லாம் மழைக்குக் காரணம் அன்றோ? என விநயமாகக் கூறினாள். தெய்வசிகாமணிபிள்ளை தம் மனையாள் தந்த கம்மலை வாங்கிக்கொண்டு, "மரகதம், உன் தாயார் நோயடைந்து, தந்தையார் கடன்மிகுந்து கஷ்டப்படுவதாகக் கடிதம் வந்தபோது, உன்றன் கழுத்திலிருந்த இந்த இரண்டு பொற்காசை நான் கேட்டும் தரமாட்டேனென்ற காலம்போய், இப்போது அன்பே உருவானாய்; அறிவே அணியாப் பூண்டாய்.

> **"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
> **நிற்க வதற்குத் தக"**

என்னும் முதுமொழி நின்பால் முற்றும் பொருந்தி யிருக்கின்றது. கல்வியென்பது சாதாரணமா யெண்ணுவதுபோலப் பல புத்தகங்களைப் படித்துப் பாராயணஞ் செய்வதன்று. பொய்மை, பொறாமை, அடங்காமை முதலிய துர்க்குணங்களை நீக்கி, அன்பும், அருளும், அழுக்காறாமையுமாகிய நற்குணங்களைக் கைக்கொண்டு, இல்வாழ்க்கைக்குரிய வேலைகளிற்பழகி, அறிவைவளர்த்து, ஞானத்தை விருத்தியாக்கிக், கற்புடைமையிற்சிறந்து, தன்னைமணந்த புருஷனுக்குப் புகழையும், சந்தோஷத்தையுந் தரச்செய்வதாம். இதுவே உண்மையான கல்வி. இத்தகைய கல்வி உன்னிடமிருக்க இன்று கண்டேன். என் மனத்துக்கினிய மனையாளானாய். இம்மாநிலம் புகழும் மரகதமானாய். கண்ணே!" எனப்புகன்று மரகதவல்லியை மெய் யுறத் தழுவினார்.

பன்னிரண்டாமதிகாரம்

தமரேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை யகற்றலே வேண்டும்
அமையாரும் வேற்ப வணியாரே தம்மைத்
தமவேனுங் கொள்ளாக் கலம். —பழமொழி.

தெய்வசிகாமணிபிள்ளை கையிற் பணமின்மையால் தம் மனைவி யணிந்திருந்த கம்மலை வாங்கியதாக மேலே சொல்லினோம். அக்கம்மலை வாங்கிக்கொண்டு யாரிடமேனும் விற்றுவரு நிமித்தம் மனை கடந்து வீதி முகப்பிற் சென்றதும், தபாற்காரன் தெய்வசிகாமணிபிள்ளை பேருக்கு இரண்டு கடிதங்களை நீட்டினான். அவற்றுள் ஒன்று சென்னை சர்ஜன் ஜெனரலிடமிருந்தும், மற்றொன்று கூடலூர் கலெக்டரிடமிருந்தும் வந்ததாக மேற்புறத்திருந்த முத்திரையால் விளங்கிற்று. இடையில் இழந்த தம் உத்தியோகத்தைப்பற்றி ஏதேனும் இருக்கிறதோ என்று அவர் படபடப்புடன்வாங்கி முதன்முதல் சர்ஜன் ஜெனரலனுப்பிய கடிதத்தைப் பார்க்கலானார். அதில், சர்ஜன் ஜெனரல் தாம் விசாரித்ததில் திருவண்ணாமலைக் கேஸின குமஸ்தா காயலாவாயிருந்தது வாஸ்தவமென்றும், தெய்வசிகாமணிபிள்ளை அவருக்கு ஒரு மாசம் செலவுக்குச் சிபார்சுசெய்தது சரியென்றும், தம் உத்தரவு பெறாமல் தெய்வசிகாமணி பிள்ளையை வேலையினின்று நீக்கியது ஜில்லா டாக்டர்மீது பிழையென்றும், உடனே தெய்வசிகாமணி பிள்ளை வேலையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அவர் வேலையின்றியிருந்த நாட்களுக்கெல்லாஞ் சம்பளந்தருவதுடன் மத்தியிலுண்டாகிய கஷ்டத்திற்குத் தாம் விசனப்படுவதாகவும் எழுதியிருந்தது. கலெக்டராற் கிடைத்த கடிதத்தில் பின்வருமாறு வரைந்திருந்தது:—

"கூடலூர் கலெக்டர் கச்சேரி,
1882ளு அக்டோபர்மீ 6உ.

கனம் பொருந்திய தெய்வசிகாமணிபிள்ளை அவர்களே!

சென்னைத்துரைத்தனத்தார் இம்மாதம் மூன்றாந்தேதி விடுத்த ஆயிரத்து நாற்பதாவது எண்ணுள்ள உத்தரவை அனுசரித்து நாளைத்தினம் மாலை நான்குமணிக்குச் சரியாய் சிதம்பரம் நாட்டுக்கோட்டையார் சத்திரத்தில் ஒருசபைகூடும். அச்சபைக்குத் தாங்கள் தயைகூர்ந்து வரவேண்டுகிறேன். நான் இன்றிரா வண்டியிலேறி அவ்விடம் வருவேன்."

இங்ஙனம்,
தங்கள் வணக்கமுள்ள ஊழியன்,
ஜான் ரீட்.
கலெக்டர்."

இக்கடிதங்களை வாசித்ததும் தெய்வசிகாமணி பிள்ளை சரேலென்று திரும்பிவீட்டுக்குள் நுழைந்து, நோயால்நிறங்குறைந்தும், உடம்புமெலிந்தும், படுத்துக்கொண்டிருந்த தந்தையைக்கிட்டி அவருக்குப்படித்துக்காட்டினார். உடனே மாணிக்கம்பிள்ளை யெழுந்துட்கார்ந்து தம் மனைவியையும், மருகியையும் அழைத்துப் பக்கத்திற் குந்தச்சொல்லி, "நான் இத்தனை நாட்க

ளாய் அவஸ்தைப் பட்டதற்குக் காரணம் நோயன்று; நமது தெய்வசிகாமணி உத்தியோகம் இழந்ததேயாம். இது மனோவியாதியாதலால் என்ன மருந்து தின்றும் பயன்படவில்லை. இவனுக்கு மறுபடியும் உத்தியோகம் கிடைத்ததென்னுஞ் சங்கதி கேட்டதும் எனக்குக் குணமாகி இதோ எழுந்துட்கார்ந்தேன். தினந்தோறம் தேவாலயஞ்சென்று தெய்வத்தை நொந்து வந்ததால் இன்று அவருக்கு அருள் பிறந்ததுபோலும்'' என்றார். இப்போது சுகத்தையும் துக்கத்தையும் சமமாய்ப் பாராட்டிவந்த மரகதவல்லியும் மகிழ்ந்தனளென்றால் மற்றவர் செய்தியை வரையவேண்டுமோ?

தெய்வசிகாமணி பிள்ளை, தன் தகப்பனாருக்குத் தேகஞ்செம்மையானதாலும், தாம் உத்தியோகத்திற் சேர்ந்த அடுத்த நாளே வேலையில்லாதிருந்த ஐந்துமாத சம்பளமாகிய இருநூற்றைம்பது ரூபாய் கிடைத்ததாலும் தங்காதலியின் கம்மலை விற்க நிமித்தமில்லை.

மறுநாள் வீதிகள் தோறும் தண்ணீர் தெளிப்பதும், கோலமிடுவதும், தோரணங்கள் கட்டுவதும், மேளங்கள் வாசிப்பதுமாக ஊரெங்கும் விழா நாளாயிற்று. கலெக்டரெழுதிய கடிதப்படி சாயரக்ஷை நான்கடிக்கப் பத்து நிமிஷத்திற்குத் தெய்வசிகாமணி பிள்ளை வழக்கம்போல் மேலே வெள்ளைச் சட்டையும் தலையில் வெள்ளைப்பாகையுமுடுத்து நாட்டுக்கோட்டையார் சத்திரம்போக அவரைக் கண்டதும், அங்கே கும்பலாக நின்றுகொண்டிருந்த ஜனங்கள் சிரங்குனிந்து வணங்கி வழிவிடலானார்கள். கூடத்தில் வீற்றிருந்த கலெக்டர் துரை, தெய்வசிகாமணிபிள்ளை வருகிற சங்கதி தெரிந்து வெளியில்வந்து அவர்க்கு வந்தனஞ் செய்து கைலாகுகொடுத்து உள்ளேயழைத்துப்போய்த் தம்மருங்கிற் போட்டிருந்த பெரிய பீடத்திலுட்காரவைத்தார். போதுமான இடமின்மையால் ஜனங்கள் நின்ற வண்ணம் தத்தளிப்பதையும், ஒருவர்மேலொருவர் விழுந்தவாறு புதிதாய் வந்துகொண்டிருப்பதையும் பார்த்துத் துரையவர்கள் தமது பக்கத்திலிருந்த சிரஸ்தேதாரோடு ஏதோ இரகசியமாகப் பேசிப்பிறகு சனங்களை தயைசெய்து தேவாலயத்திற்குப் போங்கள் என்றதும் கூட்டங்கலைந்தது. துரையவர்கள் தெய்வசிகாமணி பிள்ளையுடன் கைகோத்துக்கொண்டு வீதிவழியே மெல்ல நடந்துபோய்த் தென்கோபுர வாயிலாகக் கோயிலில் புகுந்தார். அங்கு தாம் போவதற்குள் தயாராகப் போட்டிருந்த ஆசனங்களொன்றில் தாமும், மற்றொன்றில் தெய்வசிகாமணி பிள்ளையுமாக அமர்ந்தார்கள். அவர்களுக்கெதிரில் சிரஸ்தேதார், தாசில்தார், சப்மாஜிஸ்டிரேட்டு முதலான உத்தியோகஸ்தர்கள் குந்த, பின்னால் தீக்ஷதர்களும், வர்த்தகர்களும் வரிசையாயுட்கார்ந்தார்கள். அவர்களுக்கப்பால் அநேக ஆயிரம்பேர் நின்றார்கள். சிறிது நேரம் வாத்திய முழங்கிற்று. அப்பால் துரையவர்கள் எழுந்திருந்து தஞ் சட்டையின் மேற்பையிலிருந்த கடிகாரத்தை எடுத்துப்பார்த்து மறுபடியும் உள்ளே வைத்து அடிப்பையிலிருந்த காகிதச் சுருளைக் கையிற் பிடித்துச் சபையைநோக்கிப் பிரசங்கிக்கலாயினர். அப்பிரசங்கம் அன்று மறுநாள் வெளிவந்த "**சத்திய வசனி**" என்னுமோர் ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரித்திருந்தமையால் நாம் அதனை உள்ளபடி மொழிபெயர்த்து இதனடியிலெழுதுகிறோம்.

"கனவான்களே! உங்களுக்கனுப்பிய விளம்பரத்திற் கண்டதுபோல இன்று சரியாய் நான்கு மணிக்கே ஆரம்பிக்கத் தவறியது விசனிக்கத்தக்கதெனினும், உங்களெல்லோர்க்கும் போதுமான இடந்தரக் கூடியதும், இந்த மதாசாரப்படி இத்தகைய காரியங்களுக் கினியதுமான கோயிலில் நாம் கூடியதைக்குறித்து மிகவும் களிப்படைகிறேன். சென்னைத் துரைத்

தனத்தார் அனுப்பிய உத்தரவு பிரகாரம் இதோ என்னருகில் வீற்றிருக்கும் தெய்வசிகாமணி பிள்ளையவர்கள் விஷயமாக இச்சங்கம் சேர்ந்ததென்பதை நீங்கள் ஒருவாறு அறிவீர்கள். இதை விவரிக்குமுன் இதற்குச் சம்பந்தமான இரண்டொரு விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன்.

மனிதர்க்கு வேண்டியவற்றுள் முதன்மையானது நோயற்ற வாழ்வென்பதையும், இடம்-பொருள்-ஏவலென்பன வெல்லாம் அதற்குப் பின்னின்றவென்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். உணவின் வேற்றுமையாலும், சீதோஷ்ண விசேஷத்தாலும், காற்றுநீர் விகற்பத்தாலும் அடிக்கடி நோயுறும் நமக்கு இந்நோயைப்போக்கவல்ல வைத்தியர்களிருக்க வேண்டும். வியாதியாளர், சொல்வதெல்லாஞ் செய்தும், தருவதெல்லாம் உண்டும் வைத்தியனை உண்மையாக நம்புவதால், வைத்தியன் உதவியற்றவனாயிருப்பின் நன்மைக்கு மாறாகத் தீமை விளையும். ஒரு வியாதியை மற்றொன்றாக நிச்சயித்து ஒரு மருந்துக்கு வேறொன்று தருவானாயின் நோயாளியின் முடிவு என்னவாகும்? ஆகையால் வைத்தியன் வைத்திய சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்து, நுண்ணிய அறிவும் முதிர்ந்த அநுபவமுங்கூடி நோயின் காரணத்தையும், நோயை நிவர்த்திக்கு முறைமையையும் தெரிந்திருக்கவேண்டும். அவற்றோடு அன்பு-அடக்கம்-பொறுமை-பிறமாதரையிச்சியாமை யாதிய குணங்களும் நிறைந்திருப்ப தவசியம். இப்பொழுது வைத்தியத்தில் பயிற்சியடைந்து வருடந்தோறும் வெளிவரும் இளைஞர்க்குள் சிலர் கூறிய புத்தியுடையவரெனினும், உயர்ந்த ஒழுக்கத்தில் முரண்படுவதால் வைத்தியர்களுக்கிருக்கும் மதிப்பு சில விடங்களில் குறைவதாகக் காணப்படுகிறது

நமது தெய்வசிகாமணி பிள்ளையவர்களிடத்தில் வைத்தியருக்கு வேண்டிய நல்லிலக்கணங்களெல்லாம் அமைந்திருக்கிறதென்று இச்சபையில் நான் திடமாய்ச் சொல்லக்கூடும். இவர் சென்னை வைத்திய வித்தியாசாலையில் எல்லோர்க்கும் முதன்மையாகப் பரீட்சையிலொப்பேறிப் பரிசுபெற்றது இவரின் தேர்ச்சிக்கும், சிதம்பரம்வந்த ஐந்து வருஷகாலமாக நீங்கள் அடைந்து வரும் நன்மைகள் இவர் நற்குணங்களுக்கும் சான்றாகும். இவையனைத்தும் நீங்கள் கண்ணாரக்கண்டும், அநுபவித்தும் வருவதால் நான் விரித்துக்கூறி உங்களுடைய விலையுயர்ந்த காலத்தைக்கழிக்க எனக்குச் சம்மதமில்லை. பத்திரிகை வாயிலால் இச்சில்லாவேயன்றி நமது தென்னிந்தியா முழுதும் இவருடைய பெயரும் பெருமையும் விளங்குகின்றது. இங்ஙனமாக, இடையில் என் கீழுத்தியோகஸ்தரு ளொருவர் செய்த கொடுமையால் பிள்ளையவர்களுக்குத் துன்பம் நேரிட்டது. (ஜனங்களி லநேகர் கண்ணீர் விடுதல்) சபையோர்களே! நீங்கள் துக்கப்படவேண்டாம். நல்லோர்க்குத் துன்பமுண்டாவது இவ்வுலகி னியற்கையே. ஆனால் அத்துன்பம் வெய்யோனைச் சூழ்ந்த மேகம்போலும் நீடித்திராது. துரைத்தனத்தார் விசாரித்து உண்மையை யறிந்து இவருக்கு உத்தியோகத்தைத் திருப்பிக் கொடுத்ததோடு தங்களுக்குள்ள மரியாதையைக்காட்ட "**திவான் பஹதூர்**" என்னும் பட்டமும் தந்திருக்கிறார்கள். (ஜனங்கள் கரக்கொட்டவிடுதல்) பிறப்பில் நான் ஆங்கிலேயனாயினும் இந்துக்களுடைய மேம்பாட்டை யளிக்கவல்லோர் எவரேனும் உளரேல் அவரை நன்கு மதிக்க வேண்டுமென்னுங் கருத்துடையேன்; ஆகவே, இக்கனவானுக்கு இப்பட்டத்தைச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை நோக்கி நான் இன்புறுவதுடன், என் வாணாளில் இது சிறந்த நாளாகமதிக்கிறேன். இவர் நீடூழி வாழ்வாராக" என்று சொல்லித் தெய்வசிகாமணி பிள்ளையைப்

பார்த்து, "தெய்வசிகாமணி பிள்ளை அவர்களே! துரைத்தனத்தார் தங்களுடைய நுண்ணறிவிற்கும், சாஸ்திரப் பயிற்சிக்கும், ஆராய்ச்சி வன்மைக்கும், வைத்தியத்திறமைக்கும், உயர்ந்த நடைக்கும், உதாரகுணத்திற்கும் மகிழ்ந்தளித்த இப்பட்டயத்தைத் தயவுசெய்து பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கையிலிருந்த காகிதச்சுருளைக் கொடுத்தார். ஜனங்களனைவரும் கரக்கொட்டவிட்டு, "தெய்வசிகாமணி பிள்ளையவர்கள் வாழி வாழி" என்றுரசி கூறினார்கள். உடனே வாத்திய முழங்கிற்று. கோயின் மணிகளிரண்டும் கணகணவென் றொலித்தன.

சற்றுப் பொறுத்து இரைச்சலடங்கினவுடனே தெய்வசிகாமணிபிள்ளையெழுந்து துரையைப்பார்த்து, "என்றன் கனந்தங்கிய ஐயாவே! இச்சபைக்கு வருமளவும் என்னை யழைத்ததற்குக் காரணம்' ஏதென்றறிந்திலேன். உதவியற்ற ஏழைத் தொழும்பனாகிய என்னையும் ஓர் பொருளாயெண்ணி இங்கு வரச்செய்து என்னிடம் ஏதேதோ உயர்குணங்களெல்லாம் இருப்பதாகப் புகன்றீர்கள். இவ்வளவு பெருமைக்கும் நான் உரியோனல்லனென்று என் இதயம் இடித்துரைக்கிறது. வெளிக்கு நான் நல்லவனாகத் தோன்றினும் உள்ளத்தில் தீயவெண்ணங்கள் எழுவதை முற்றும் நீக்கிலேன். நான் கைக்கொண்ட தொழிலையுந் திருந்தச் செய்திலேன். ஊரைச் சுகமாய் வைத்திருத்தல் வைத்தியனுடைய பொறுப்பென்பர் பெரியோராதலால், நான் இவ்வூர்க்கு வந்து ஐந்து வருஷங்களாயினும் இன்றும் அங்கங்கே அநேகர் நோயால் வாடுவது எனது கவனக்குறையன்றோ? ஓ, பெருமை பொருந்திய பெரியோர்களே! நீங்கள் என்னிடத்திற்காட்டும் இவ்வளவு பற்றிற்கும் நான் உண்மையில் பாத்திரவானாகும்படி கடவுளை வேண்டுவதன்றிப் பிறிதொன்றுங் காண்கிலேன்" என்று அகங் குழையவும், உரை தடுமாறவும், கண்ணீர் சொரியவும் கூறினார். உடனே "தெய்வசிகாமணி பிள்ளையவர்கள் பல்லாண்டு வாழ்க" என்றோர் ஓசையுண்டாக, கீதவாத்தியமும் கோயின் மணிகளும் திரும்பவும் ஆர்த்தன. மழைபெய்வது போலும் பூக்கள் இரைந்தன. பிறகு சந்தன தாம்பூலத்துடன் சபை கலைந்தது."

தாசில்தார், சபையில் கலெக்டர் கூறியதைக் கேட்டுத் தனக்கென்ன நேரிடுகிறதோ என்றஞ்சித் தெய்வசிகாமணி பிள்ளையிடம் வந்து தான் செய்தது தவறென்றும், பொறுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ள, தெய்வசிகாமணிபிள்ளை தம் மனத்தில் ஒன்றுமில்லை யென்பதாகவும், துரையைக் கண்டு சொல்லி அவருடைய எண்ணத்தை மாற்றுவதாகவும் வாக்களித்தார்.

பதின்மூன்று மதிகாரம்

அசம்போலுங் கூர்மையரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். —குறள்.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை. —முதுமொழிக்காஞ்சி.

அன்றிரவு தெய்வசிகாமணிபிள்ளை வீட்டினுள்ளவரிடத்தில் வெளியில் நிகழ்ந்த சங்கதி விளம்பிக் கீழறையிற்போய், விநாயகர் படத்தெதிரில் நெடுநேரம் நின்று பின்பு படுக்கையறை யெய்தினார். அவர் கடவுளை

வேண்டின தின்னதென நிச்சயமாக நாம் அறியோமாயினும், நீர்வடிந்த அவரது கண்களைக்கொண்டு தாம் அடைந்த பட்டத்திற்குத் தம்மை அருகராக்குமாறு பிரார்த்தித்திருப்பாரெனக் குறிப்பாய்க் கூறலாம்.

அவருக்கு இப்போதுள்ள குடிசையைவிட்டு முன்னிருந்த மாளிகையில் வசிக்க மனமில்லை யெனினும் அம்மாளிகையின் முழுவாடகையுங் கொடுத்தே தீரவேண்டுமாதலால் பெற்றோர் முதலியோரை அங்குக் கூட்டிச் சென்றார். பழையபடி நாற்காலி, கட்டில் முதலியன வாங்காமல் அவற்றின் கிரயத்தை நல்விஷயத்திற்செலவிடுத லுசிதமென்று மரகதவல்லி நவில, அவர் ஒப்புக்கொண்டு அப்பணத்திற்கு வைத்திய சாலையிலில்லாச் சில நூதன ஆயுதங்களை வரவழைத்தார். மரகதவல்லி, தெய்வசிகாமணி பிள்ளை முதலியோருடைய குணநலத்தைப்பற்றி ஓரதிகாரத்தில் விவரித்திருப்பதனால் மறுபடியுஞ் சொல்ல அவசியமில்லை. முன்னம் அன்பென்னும் வித்து அவர்களுள்ளத்தில் முளைத்தோங்கிய தென்றால் இப்பொழுது அதுமரமாகிப் பூத்துக்காய்த்த தென்னலாம். மரகதவல்லி வீட்டு வேலையாவும் தானேசெய்து முன்பு வேலைக்காரருக்குத் தந்த சம்பளத்தோடு மாதந்தோறும் எட்டு ரூபாய் கணவனிடம் பெற்று, இப்பணத்தை வயிற்றுக் கொடுமையால் தம்மின்பத்தை விற்கும் எளிய பெண்களுக்கு வழங்கி வந்தாள். எழைசெய்யும் பாவம் பொருளுள்ளவரைப் பொருந்தியதென்பது அவளுடைய கருத்து.

இனி நாம் இவர்களைவிட்டு வேலூருக்குப் போய்ச் சற்று சுந்தரம் பிள்ளையுடைய சுபத்தை யறிவோம்.

சுந்தரம்பிள்ளை கடனெல்லாந் தீர்ந்து ஒரு சிறியமனையிற் குடியிருந்து மாதமாதம் தம் மருகன் அனுப்பிய பத்துரூபாயில் அடக்கமாய்க் காலந் தள்ளிவந்தார். வறுமையால் தமதியல்பை உள்ளவாறுணர்ந்து காலத்திற்கேற்ப நடந்து, அக்கம்பக்கத்தாரை அடுக்க, அவர்களும் தங்கள் அருவருப்பை விட்டு இவரை நேசிக்கத் தொடங்கினர்.

சுந்தரம்பிள்ளை இழந்த தாசில் வேலையைக் குறித்துச் சென்னை நியாய விசாரணை சங்கத்தாருக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்த சங்கதி நம் கதை வாசிப்பவர்க்கு ஞாபகமிருக்கலாம். அவ்விண்ணப்பம் நெடுநாள் முடிவுபெறாமற் கிடக்க, சுந்தரம் பிள்ளைக்கு வேண்டியவரான கலெக்டர் நியாயவிசாரணை சங்கத்தாருள் ஒருவராகச் சென்னைக்கு மாற்றப்பட்டபொழுது அவரும், தெய்வசிகாமணி பிள்ளையையறிந்த வேறிரண்டு துரைகளுங்கூடி, அவ்விண்ணப்பத்தைப் பெற்று விசாரித்து சுந்தரம் பிள்ளையை வேலையினின்று தாழ்த்தியதற்கும் நீக்கியதற்கும் தக்க காரணங்களில்லையென்றும், அவருக்கு அவ்வுத்தியோகத்தைத் திரும்பவும் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவுசெய்ததோடு அத்தருணம் காலியான கூடலூர் தாலூகா தாசில்தாராக நியமித்தார்கள். இவ்வுத்தரவு பெற்றதும் சுந்தரம்பிள்ளை அளவிடற்கரிய ஆனந்தமடைந்து தம்மனையாளுடன் உடனே புறப்பட்டுப் புகைவண்டியிலேறி விழுப்புரம் மார்க்கமாய்ச் சிதம்பரம் வந்து, தம் மகளையும், மருகனையுங்கண்டு அன்புமிகுந்து தழுவிக்கொண்டார்.

தெய்வ சங்கற்பத்தால் ஒன்றன்பின் ஒன்றாக எல்லாம் இனிது முடியவே அவர்களுக்குண்டாகிய மனக்கிளர்ச்சியை நாம் வகுத்துரைக்க முடியமோ? சுந்தரம் பிள்ளை அவர்களோடு நான்கு நாள் தங்கியிருந்து பிறகு கூடலூர் போய்த் தாசில் வேலையை யொப்புக்கொண்டு, “ பழம் புண்ணுளி

பாதி பரிகாரி" என்பதற்கிசைய முன்பே பட்டவராதலால் குடிகளுக்கிணக்கமாயும், உத்தியோகஸ்தருக்கு வணக்கமாயும் நடந்துவந்தார்.

சுந்தரம் பிள்ளையைப்பற்றி இத்தனை நாளாக உள்ளத்தில் குடிகொண்ட ஓர் கவலையும் நீங்கியதால் மரகதவல்லியும், தெய்வசிகாமணி பிள்ளையும் தந் நயங்கருதலை முற்றும் மறக்கவே, அவர்களுடைய அன்பென்னும் ஊற்றுப் பெருகி ஆழமுடைத்தாயிற்று. மாமனருக் கனுப்பிவந்த பத்து ரூபாய் இனி மீதியாவதால் அப் பத்து ரூபாயை எவ்வாறு செலவழித்தலினியதெனத் தெய்வசிகாமணிபிள்ளை, தம் பெண்சாதியுடனும், பெற்றோருடனும் கலந்து யோசிக்கலாயினர். மனிதர்க்குச் சம்பவிக்கிற நோயின் மூக்காற்பங்குக்குக் காரணம் அவர்களுடைய பிழையே யாதலால் மருந்தொன்றே அவர்களுக்குச் சுகத்தைத் தருவதல்லவென்றும், அவர்களுடைய ஒழுக்கங்கள் உயரவேண்டுமென்றுங்கண்டு அதற்காக அவர்களுக்கு நாடோறும் வீடுபோய்ப் போதனைசெய்ய, சாஸ்திரங்களிலும் நன்னடைகளிலும் பழகிய வயதுசென்ற ஓர் அந்தணரை ஏற்படுத்தினர்.

இப்போது வயது பதினொன்றான விசாலாட்சிக்குத் தாங்கள் மூச்சுடன் உள்ளபோதே கலியாணஞ்செய்து களிக்கவேண்டுமென்று பெரியவரும் பெரியம்மாளும் ஆலோசித்து, பி. ஏ., பரீட்சை தந்தவனும், பண்ணுருட்டி வாசியுமாகிய ஓர் இளைஞனுக்குத் தந்தார்கள். தெய்வசிகாமணி பிள்ளையும், மரகதவல்லியும் இக்கலியாணம் இன்னும் இரண்டுவருஷம் பொறுத்துச்செய்தல் இதமென்றெண்ணினும், தாங்கள் மறுப்பதால் பெற்றோர்க்கு மனநோகுமென்று அவர்களுடைய சம்மதப்படி விட்டார்கள்.

அவ்வருஷம் மரகதவல்லிக்கு ஒரு பெண்ணும், அடுத்த வருஷம் மற்றொரு பெண்ணுமாகப் பிறந்தன. சுகமான தேகத்துடன் நற்குண நற்செய்கை யுடையவராய், புருஷன் மனைவியிருவரும் உண்மையாகக் காதலித்துப் பெற்றபடியால் இவர்களுடைய குழந்தைகளும் சுகமும் அழகும் பொருந்தினார்கள். இவற்றோடு அறிவென்னும் உணவையுண்டு, அன்பென்னும் பாயிலுறங்கி, இல்வாழ்க்கைக்குரிய வேலைகளோடு இனியவொழுக்கங்களாகிய காற்றில் வளர்ந்து வந்தனர்.

நாம் இக்கதை தொடங்குங் காலத்தில் பையனுக்கு வயது பதினாறும், பெண்களுக்கு முறையே பதினொன்றும், பதிமூன்றுமாயின. பெண்களுக்குத் தக்கவயதானதால் விவாகத்திற்காக வெளியூர்களிலிருந்து ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்த அநேகர் ஒருவர்மேலொருவராக விழுந்துவந்தார்கள். பெரியவருக்கும், பெரியம்மாளுக்கும், சுந்தரம்பிள்ளைக்கும் சிறுமிகளை உயர்ந்த பரீட்சை தந்தவர்க்கே மணமுடிக்கக் கருத்தாயினும், மரகதவல்லிக்கும், தெய்வசிகாமணிபிள்ளைக்கும் அவ்விதஞ்செய்ய ஆசையில்லை. "உயர்ந்த பரீட்சை தந்தவரெல்லாம் உத்தமகுணத்திற் சிறந்தவரென்பதன்று. இக்காலத்தில் வாசிப்பானது சாதாரணமாகத் தலையைப் பளுவாக்குகிறதேதவிர மனத்தைச் சுத்திசெய்து இருதயத்தை விசாலப்படுத்தக்காண்கிலம். மனிதர்க்கு இன்றியமையாதது குணமேயாதலின் நற்குணத்தை நல்காத கல்வி யாருக்கு என்ன பயனுடைத்து?" என்னும் இவ்வித எண்ணமுடையவர்களாதலால், தெய்வசிகாமணிபிள்ளையும் மரகதவல்லியும் தஞ்செல்விகளை வரிக்கவந்த சிறுவருடைய பண்பை விசாரித்தோர்ந்து உடன்படாமல் கல்வியும் குணமுங் கலந்தோர் தம்மினத்திற் கிடைக்காமையால் கடைசியில் பழுதற்ற குடும்பத்திற் பிறந்து, சொற்ப கல்வியேனும்

நல்ல நடையைக் கைக்கொண்ட இரண்டு வாலிபருக்குக் கடிமணஞ் செய்வித்தனர்.

சிறுவனுக்கும் சேர்த்துத் திருமணம் நடத்தும்படி பெரியவரும், பெரியம்மாளும் வேண்டியும், தெய்வசிகாமணிபிள்ளை இன்னும் அவனுக்குத் தக்கவயது வரவில்லையென்றும், அவன் அறியவேண்டிய சங்கதிகள் அநேகமுள்ளனவென்றும் அவர்களுக் கெடுத்துரைத்து, ஆங்கிலமும், தமிழும் பயின்ற சந்தேகமறச் சாத்திரங்களையோதி, தெய்வபத்தியும் நல்லொழுக்கமும் நிலைறந்த ஓர் ஆசிரியர் வடலூரில் இருப்பதாகக் கேள்விப்பட்டுத் தம் தனயனை அவரிடம் படித்துவர அனுப்பினர்.

சிதம்பரம் தாசில்தார் ஏதோகுற்றம் செய்ததாகக் குறைந்த சம்பளத்தில் கூடலூருக்கு மாற்றப்பட அவருக்குப்பதிலாய்ச் சுந்தரம்பிள்ளை இருநூறு ரூபாய் தாசில்தாராகச் சிதம்பரம் வந்தார். இவர் தம் உத்தியோகத்தை மனச்சாக்ஷிக்கு விரோதமின்றியும், சந்தேகமுறுங்கால் மருமகப்பிள்ளையோடு கலந்தும் செம்மையாக நடத்தி மேலோராலும் கீழோராலும் நல்லவரென்கிற பேர் பெற்றார்.

இவர்கள் வீட்டில் நடந்த வேறொரு விசேஷத்தைக்கூறி நாம் இக்கதையை முடிப்போம்.

தெய்வசிகாமணி பிள்ளையுடையவும், மாகதவல்லியுடையவும் நல்ல குணமும் தருமசெய்கையும் பல பத்திரிகைகள் வாயிலாக அடிக்கடி சீமையிலெட்டியதால் நமது காருண்ணிய பெருமாட்டியாகிய **விக்டோரியா சக்கிரவர்த்தினியார்** சந்தோஷித்து தெய்வசிகாமணிபிள்ளையை முந்நூற்றைம்பது ரூபாய் சம்பளமுள்ள சிவில் சர்ஜனாக உயர்த்தி, சி. ஐ. ஈ. என்னும் பட்டமும் அளித்தார்.

சிதம்பரம் சிவில் சர்ஜன் திவான்பகதூர் தெய்வசிகாமணிபிள்ளையவர்கள், சி. ஐ. ஈ. யும், **சௌபாக்கியவதி தனபூஷண மாகதவல்லியம்மாளவர்களும்** மகாராணி மகிழ்ந்தளித்த பட்டத்தைக் கௌரவமாகக் கொண்டு மனம் பூரிக்காமல் அது தங்கள் கடமையைப் பெருக்கிப் பெருஞ் சுமை தந்ததென்றெண்ணித் தங்கள் வேலையைச் செவ்வனே செய்யக் கிருபை கூரும்படி கருணையங் கடவுளை இடையறாது துதித்துவந்தார்கள்.
சுபம்.

முற்றிற்று.

(துரைத் ... ளார் அங்கீகரித்தது.)

ஐரோ... பிய மஹாயுத்தம்

ஐரோப்பிய மஹா யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேசசரித்திர சம்பந்தமான பல விஷயங்கள், இந்த யுத்தத்தில் சம்பந்தப் பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்த ஆயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள் சித்திரப்படங்களுடன் தெளிவாயும் கதைப் போக்காயும் சாமான்ய ஜனங்களும் எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப்பெற்றிருக்கிறது. 256 - பக்கங்கள், 58 - ஆப்டோன் படங்கள்.

விலை ரூபா 1.

சகுந்தலை

இது வேதவ்யாஸமுனிவாத மஹாபாரதத்திலிருந்து எடுத்தெழுதப் பட்டது. கடிதம் வரைந்த காதை, உள்ளங்கலந்த காதை, பெருமைபெற்ற காதை என்னும் ஐந்ததிகாரத்துடனிருப்பதன்றி காளிதாஸ மஹாகவி இயற்றிய அபிக்ஞான சாகுந்தல மென்னும் நாடகத்தின் சுருக்கத்தை அநுபந்தமாகப் பெற்றுள்ளது. இனிய நடையில் சிறுவரும் எளிதிலறி யும்படி எழுதப் பெற்றுள்ளது. ஆர்ட் பேபரில் அச்சிட்ட 4-அழகிய படங்கள் கொண்டது.

விலை அணா 5.

கிரிஸெல்டா

அல்லது

'பொறுமையுள்ள மனைவி'

இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்கவேண்டிய புத்தகங்க ளில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்து கொண்ட சிலாகிக்கத்தக்க மாதிரியை விளக்கிக் காட்டியிருக்கிறது. படிக் கப்படிக்க உத்ஸாகத்தைக் கொடுக்கக்கூடியது.

விலை அணா 2

திரௌபதி

இது திரௌபதியின் சரித்திரம். ஸ்ரீ வேதவியாஸபகவான் எழுதி... வடமொழி பாரதத்தின் வழியாக எழுதப்பெற்றது. பிறப்படைந்... காதை, மீன் பொறி எய்த காதை, ஐவரை யடைந்த காதை, அ... நடுவுற்ற காதை, உபதேசம் செய்த காதை, அகந்தை யடங்குங் கா... பழம் பொருந்து காதை, மனநிலைநின்ற காதை, கீழ்மை யொழிந்த கா... முடிவடைந்த காதை என்னும் பத்து அதிகாரங்கள் அடங்கியது. வியாஸபாரதத்திற்கும் தமிழ்ப் பாரதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ... காங்கு கீழ்க் குறிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இதில் இரண்டு அ... தங்கள் உள்ளன. அதனுள் ஒன்றில் திரௌபதி ஒருவளே ஐ... மணந்தது நியாயமா என்பதைப்பற்றி மார்க்கண்டேய புராணத்தில... எடுத்தெழுதப் பெற்றுள்ளது. மற்றொன்றில் திரௌபதியின் உட்... ரகஸ்யார்த்தங்கள் எழுதப் பெற்றுள்ளன. இப்புத்தகத்துள் பக்... ஒழுங்கு, மனத்தின் சலனம், சலித்து வழிபடல் நிலையில் நிற்ற... மனோ பாவங்களின் விஷயம் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. ஆப்டோன் படங்களுடன்

விலை

விலாஸம்:—மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், ...

(நூரைத்தனத்தார் ... ரித்தது.)

ஜெகஜ்ஜோதி

தெய்வபக்தி, குருபக்தி தாய் தந்தையர் வழிபாடு, மாதர் ஆடவ ஒழுக்கம், விருந்தோம்பல், நட்பின் குணம், அறிவின் மேன்மை, கலகக்கேடு, யஜமான் விசுவாசம், நல்லதிகாரிகளின் இயல்பு, பொருமைக்கேடு, துன்பந்துடைக்கும் வழி, வீரத்தன்மை, முயற்சியின் மேன்மை, சாந்தகுணச் சிறப்பு, முதலிய அரிய தருமங்களும், வன அழகு, ஆலமரச் சிறப்பு, உத்தியானவனச் சிறப்பு, பாலைவனக் கொடுமை, கானல் ஜலக்காட்சி, மாலைக் காலச் சிறப்பு, காட்டானைகளின் செயல் முதலிய இயற்கைச் சிறப்புகளும் கொலுமண்டபச்சிறப்பு, காட்சி காலையின் சிறப்பு, புலிவேட்டை முதலிய ஏனைய விஷயங்களும் இந்நூலில் மிகவும் நன்ருய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை நிற்க, பல அரிய பழமொழிகளும், நீதிநூல் வசனங்களும், கதைகளும் ஆங்காங்கு பரவிக் கிடப்பதையும் அறியலாம். கல்விகற்கும் மாணவர் அறியவேண்டிய பல அரிய தருமங்கள் இந்நூலில் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் வற்புறுத்தப்பட் டிருக்கின்றன. விலை அணு 8.

பிரபாவதி

இது வங்காளி பாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாத சட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும் முயற்சி திருவினையாக்கும் என்னும் படிப்பினையையும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினுல் வரும் ஸுகம் இது முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். கதை ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ் வைக்க முடியாமல் படிக்கும்படி செய்யும் திறமை யுள்ளது. விலை அணு 4.

பிளாக்போர்ட் டிராயிங்

இதில் ப்ரீ ஆர்ம் டிராயிங் (Free Arm Drawing) ப்ரீ டிராயிங் Free Drawing) வரைவதற்குத் தகுதியான அனேக படங்கள் தமிழில் ...ளக்கத்துடன் அடங்கியுள்ளது. வட்டம், நேர்க்கோடுகள், நெடு வட்டம், முட்டை வடிவம் முதலிய மூலாதார பாகங்களிலிருந்து ஆரம்பித்து இவை ...ளைச் சேர்த்துச் சாதாரணமான வஸ்துக்கள், இலைகள், பூக்கள், காய்கள், ...றவைகள், பிராணிகள், மனிதன் இவற்றின் அவுட்லயின் (outline) ...ளையும் விதமும், எழுத்துக்களை எழுதும் மாதிரியும், கதை, கணக்கு, ...சகம் பொருட்பாடம், பூகோளம், சாஸ்திரம், இப்பாடங்களுக்கு வேண் ...ப விளக்கப்படங்களும், அளவு மூல சித்திரம் (Drawing to Scale) ...பனு சித்திரம் (Design) இவற்றிற்கு மாதிரிகளும் அடங்கியுள்ளன. ...மெண்டரி, டிரெயினிங் பாடசாலைகளின் பாடக் கிரமத்தை அனு ...த்தே எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1.

திருமயிலைச் சிறப்பு

... அறுபத்துமூவர் உத்ஸவம், 2. பார்வதிதேவி மயிலுருவம் நீங்கி ... 3. வாயிலா நாயனர் சரித்திரம், 4. திருவள்ளுவர் சரித்திரம், ...பாழ்வார் சரித்திரம் இவைகள் அடங்கியது. இதில் ஸ்ரீ கபாலீசுவரர் ... கோபுரப்படமும், அறுபத்துமூவர் படமும், வழவழப்பான ஆர்ட் ... அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 2

...:—மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(துரைத்தனத்தார் அங்க ரித்தது.)

பஞ்சரத்தினம்

மரகதவல்லி என்னும் உயர்தர நாவலின் ஆசிரிய ப. சி. கோவிந்தஸாமி ராஜா அவர்கள் எழுதியது. மணை மற்றொருவரை மனத்திலும் நாடாத ருக்மிணி, யமனிடமிருந்து உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்ப காலத்தும் கற்பைக் காத்துவந்த ஸீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்ப திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், தந் தையே ஆடையாகவு மெண்ணிக் காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ள மென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்ட சகுந்தலை, முதலிய ஐந்து புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. அழகிய ஆப்டோன் படங்களுடன். விலை அணு 10.

குண்டலகேசி

அல்லது

தற்கொல்லியை முற்கொன்றவள்

தமிழ்மொழியிலே "பஞ்ச காவியங்கள்" என்று கற்றோரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்றான 'குண்டலகேசி' என்னும் நூல் இக்காலத்தில் இல்லை; பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்தது போலும்? ஆனல், இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதென்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக் கொண்டும், பிற சாதனங்களைக் கொண்டும் ஒருவாறு அறியக்கிடக்கிறது. அவைகளை ஆதாரமாகக்கொண்டு நாகை ஸ்ரீகோபாலகிருஷ்ண பிள்ளை இந்நாவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். இது சரித்திர சம்பந்தமான நாவலாகும். பௌத்த தர்மங்களைப்பற்றியும் இந்நாவல் விவரித்துக் கூறுகிறது. இந்நாவலின் கம்பீரமும், அழகும் வாய்ந்த இனிய வசன நடை, படிப்போர் மனதைப் பெரிதும் பரவசப்படுத்தும்படியான வகையில் அமைந்திருக்கிறது. விலை அணு 5.

இயற்கை அற்புதங்கள்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர் பி. ஏ., எல். டி., அவர்கள் செய்தது. ரிடையர்டு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற ராவ்பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதி லடங்கிய விஷயங்கள்: 1. மழைக்கால்கள்; 2. எரிமலை; 3. பூகம்பம்; 4. வெந்நீர் ஊற்றுகள். 5. கானல் நீரும், அதன் ரூபாந்தரங்களும்; 6 வால் நக்ஷத்திரங்கள்; 7 எரி நக்ஷத்திரங்களும்; பொறிநக்ஷத்திரங்களும்; 8 வான வில்; 9 நிழலும் கிரகணங்களும்; 10. ஹாலி வால் நக்ஷத்திரம்; 11 மொழி பெயர்ப்பு விளக்கம். இதில் அநேக படங்கள் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட் டிருக்கின்றன. விலை அணு 8.

விலாஸம்:—மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.